Registered as a Newspaper in Ceylon ★ ★ லை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 11 | சௌமிய ஐப்பசி 2 ஷ் (18-10-69) | சனிக்கிழமை | இதழ் — 248




# 'தீண்டாமை ஒழிப்புக்கு இந்து அறநிலைய மசோதா வேண்டும்'



பெண்களுக்கு பெருமை தருவது கலைமகள் விழா. கலைகளுக்கெல்லாம் தெய்வம் பெண்தான். அழகுக் கூத்தாடும் மங்கைகளுக்கு மட்டுமல்லஎல்லோருக்குமே இது ஆனந்த விழா இந்த விழாவைச் சிறப்பாகக்கொண்டாடும் யாழ்ப்பாணம் தொலை, தொடர்பு பொறியியற் பகுதி இந்துமாமன்றத்தினர் நாளை நடத்தும் விழாவில் செல்வி ரஜினி பாலசுப்பிரமணியம் நடனமாடவிருக்கிறார். நடனக் கலையின் ஆரம்பமுத்திரையை இங்கு நளினத்துடன் வெளிப்படுத்துகிறார் செல்வி ரஜனி.

## கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க மகாநாடு கோரிக்கை

(உடுப்பிட்டி, புலோலி நிருபர்கள்

அரசாங்கம் இந்து அறநிலைய மசோதாவொன்றைக் கொண்டுவந்து நீண்ட காலமாக நிலவிவரும்தீண்டாமைப் பிரச்னையை சட்டரீதியாக நீக்கவகை செய்ய வேண்டும். இந்து அறநிலைய மசோதாவை இயற்றி அதன் மூலம் இந்துசமயத்தில் நம்பிக்கை கொண்ட அனைவர்க்கும் ஆலயவழிபாட்டு உரிமையை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று இன்று இலங்கை கம்யூனிஸ்ட் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன யாழ் மாவட்ட கிளையின் 6-வது மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டது.

நெல்லியடி லட்சுமி தியேட்டர் மண்டபத்தில் இம் மகாநாடு நடைபெற்றது. திரு. பொன். குமாரசாமி தலைமையில் இன்று காலை ஆரம்பமான மகாநாட்டில் வடமாகாணத்தின் பலபகுதிகளிலிருந்தும் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். செங்கொடி வணக்கத்துடன் மகாநாடு ஆரம்பமானது.

இம்மகாநாட்டில தீர்மானிக்கப்பட்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு -

மகாவலிகங்கையை வடக்குக்கு கூடியவிரைவில் திருப்புவதுடன் யாழ். குடாநாட்டின் நீர்ப்பாசன ஆற்றலை அதிகரிக்கச் செய்யவேண்டும்

பனைத்தொழில் கூட்டுத்தாபனம் நிறுவி பனைதரு பொருட்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். இது பற்றி காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா காலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முடிவுகளை அமுல்படுத்தி இப்பகுதியில் பனை வளத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

யாழ். குடாநாட்டிலும் அதன் அயலிலும் பெற்றோல் பெறும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து இத்தொழிலை வளம்பெறச் செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தமிழ்ப்பல்கலைக்கழகமொன்று தமிழ்பிரதேசக் கலாச்சாரப் பின்னணியில் நிறுவவேண்டும். அதன் பிரிவுகளை அவசியத்தின் பொருட்டு வடக்கிலும் கிழக்கிலும் நிறுவவேண்டும்.

இம்மகாநாட்டில் திரு. பீட்டர் கெனமன் எம். பி., திரு. சரத்முத்தெட்டுஹம, திரு. அப்துல்மஜீத். உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## சோயஸ்-7 தரையில் இறங்கியது

மாஸ்கோ, அக். 17

வானவெளியில் மேடை அமைப்பதற்கான பரிசோதனையில் ஈடுபட்டிருந்த சோயஸ்-7 இன்று பூமிக்குத் திரும்பியுள்ளது. சோயஸ்-8 வானவெளியில்சுற்றிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'நல்லூரில் எனக்கு தந்த பால் நிறம் மாறியிருந்தது'

### தமிழக பத்திரிகைக்கு குன்றக்குடி அடிகளார் பேட்டி

"நல்லூர் என்ற ஊரில் எனக்குக் கொடுக்கப்பட்ட பால் நிறம் மாறியிருந்தது இதனல் சந்தேகப்பட்டு பால் சாப்பிட மறுத்தேன். இந்த விபரத்தைநல்லூர்கூட்டத்தில் அறிவித்தேன் உடனே அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் அழுது விட்டார்கள்.'

இலங்கை சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு தமிழ்நாடு திரும்பிய தமிழக மேல்சட்டசபை உறுப்பினர் குன்றக்குடி அடிகளார் தமிழக தினசரியான 'தினத்தந்தி'க்கு அளித்துள்ள பேட்டியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்தது என்ன?' குன்றக்குடி. மடாதிபதி விளக்கம்' என்ற தலைப்பின்கீழ் 4ம் பக்கத்தில் 'தினத்தந்தி' இந்தப் பேட்டியை வெளியிட்டுள்ளது. குன்றக்குடி அடிகளாரின் பேட்டி விபரம் வருமாறு:-

"நான் தமிழ்நாடு திரும்பியதும் தமிழக முதல்வர் கருணநிதி எனக்கு டெலிபோன் செய்தார். தங்களுக்கு ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியைக்கண்டு அதிர்ச்சி அடைந்தேன். நீங்கள் நீண்டகாலம் வாழப் பிரார்த்திக்கிறேன்.

யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த மாவிட்டபுரம், அளவெட்டி, அனலைதீவு, மீசாலை ஆகிய ஊர்களில் பெரும்பகுதியினர் ஹரிஜனங்கள். இவர்களைச் சிறுபான்மையினர் என்று சொல்கிறார்கள். இவர்கள் கோவில்களுக்குப்போக அனுமதி கிடையாது.

காந்தி நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளச் சென்றஎனக்கு இது வேதனையாக இருந்தது. தீண்டாமையைக் கண்டித்து எல்லா ஊர்களிலும் பேசினேன்

(16-ம் பக்கம் பார்க்க.

மகத்தான தீபாவளி மலிவு விற்பனை

ஆரம்பமாகின்றது

ஐப்பசி 19 முதல் கார்த்திகை 8 வரை

டயரும்ஸ்

பிரபல பிடவை வியாபாரிகள்

54—60, மெயின்வீதி, (தொலைபேசி: 316) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# தமிழர் பற்றி மாஜிப் பிரதம நீதியரசரின் தப்பெண்ணம்

"சும்மா ஆடுகிற பேய்க்கு சாம்பிராணிப் புகை போட்டால் சொல்லவா வேண்டும்" என்று கிராமப்புறங்களில் தமிழ்ப் பழமொழியொன்று வழங்குவதுண்டு. இலங்கையில் இல்லாத "நாம் தமிழர் இயக்கம்" பற்றியும் ஊர் பேர் தெரியாமலிருந்த இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக (கங்கள்?)ம்பற்றியும் பூச்சாண்டி காட்டிவந்தவர்களுக்கு, யாழ்ப்பாணத்தில் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மகாநாடு நடத்தியதுபற்றியும் அந்த மகாநாட்டில் ஏதேதோவெல்லாம் பேசப்பட்டதாக வெளிவந்த செய்திகளும் கிடைத்தால் விடுவார்களா?

யாழ்ப்பாணத்தில் நடந்த மகாநாட்டில் இ. தி. மு. கழகத் தலைவர்கள் என்ன பேசினார்களோ தெரியாது; ஆனால் அவர்களைப்பற்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதற்கும் ஆர். ஜி. போன்றவர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இலங்கையிலுள்ள தி. மு. கழகத்தைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரும் திருத்தப் பிரேரணையொன்றை தம்பதேனியாப் பிரதிநிதியும் சிங்கள மகாஜனக் கட்சியின் தலைவருமான திரு ஆர். ஜி சேனநாயகா சமீபத்தில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்குக் கொண்டுவந்திருந்தார். தமது திருத்தப் பிரேரணை மீது அவர் பேசுகையில் இந்திய தி. மு. கழகம் முதல் இலங்கைத் தி. மு. கழகம், 'நாம் தமிழர்' இயக்கம் என்று பல பெயர்களையும் சாடினார். ஆனால் அவரது திருத்தப் பிரேரணையை ஆதரிப்பார் யாருமில்லாமல் போய்விட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் மற்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த வேறு பலரும் தி. மு. க. பூச்சாண்டி காட்டிப் பிரசாரம் செய்துவந்தபோதிலும் இலங்கைத் தி. மு. கழகத்தைத் தடை செய்ய ஆர். ஜி. கோரியபொழுது அதற்கு ஆதரவளிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொண்ட பிரதமர் ஜனநாயக நாட்டில் ஓர் அரசியல் கட்சியைத் தடைசெய்வது சர்வாதிகாரத்துக்கே வழிவகுக்குமென்று கூறியதுடன் வெளிநாடுகளுடன் தொடர்புள்ள அரசியல் கட்சிகள் இந்நாட்டிலிருக்கின்றனவென்றும் கூறி தி. மு. கழகத்தின் நடவடிக்கைகள் தேசவிரோதமானதாக இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கத் தாம் தயங்கப்போவதில்லையென்றும் கூறியிருந்தார். எதிர்க்கட்சியினர் தமக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தந்தால் இ. தி. மு. கழகத்தின்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் பிரதமர் சொன்னார். ஆனாலும் எதிர்க்கட்சியினர் மேடைகளில்தான் தி.மு.க. பூச்சாண்டி காட்டிவருகிறார்கள் இதில் எதிர்க்கட்சியினரைமட்டும் சொல்ல முடியாது. ஆளும் கட்சியிலுள்ள சிலரும் இதேபோன்று பொதுமேடைகளில் தி. மு. க. பூச்சாண்டி காட்டாமலில்லை.

இப்பொழுது திரு. ஆர். ஜி. சேனநாயகா பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்கும்எழுதியுள்ள கடிதங்களில் இலங்கைத் திராவிடமுன்னேற்றக் கழகம் சிங்கள இனத்துக்கு ஆபத்து என்றும் அதைத் தடைசெய்யவேண்டுமென்றும் கேட்டிருப்பதுடன் எதிர்க்கட்சி ஐக்கிய முன்னணி ஒன்று உருவாக்கப்பட்டால்தான் இ தி.மு. கழகத்தைத் தடைசெய்ய முடியுமென்றும் கூறியிருக்கிறார்.

## 'பூச்சாண்டி'யை போக்க தமிழ்த் தலைவர்கள் சந்தித்துப் பேசட்டும்

இதே சமயம் புரட்சிச் சதிவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு பல மாதங்கள் விளக்கமறியலிலிருந்த முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உடுகம மாத்தளைத் தொகுதியில் அடுத்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடப்போவதாகத் தெரிவித்திருப்பதுடன் தி. மு. கழகத்தினால் சிங்கள இனத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றியும் தெரிவித்திருக்கிறார். முந்தைய புரட்சிச்சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கடற்படைத்தளபதி ரோய்ஸ் டி. மெல்லும் அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவாரோ என்னவோ யார் கண்டார்?

1962-ம் ஆண்டு சதிவழக்கில்சம்பந்தப்பட்டவர்களும் 1966-ம் ஆண்டுசதிவழக்கில் சம்பந்தப்பட்டவர்களும் அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டால் தேர்தல் பிரசாரம் சுவையாகவிருக்கும்.

பர்மாவிலும் பாகிஸ்தானிலும் ஆட்சியிலிருந்தவர்களை அனுப்பிவிட்டு படைத்தளபதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அராபிய, ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும்கூட திடீர் திடீரென படைத்தளபதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்கிறார்கள். நமது நாட்டில் அப்படி நடைபெறாமல் படைத் தளபதிப் பதவி போனபின் தேர்தலில் போட்டியிட்டு அமைதியான முறையில் ஜனநாயகமுறைப்படி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றமுன்வந்தால் அது இதர நாடுகளுக்கெல்லாம் ஒரு முன்மாதிரித்தான்.

ஆனால் படைத் தளபதியாக இருந்தவர்கூட தி.மு. க. பூச்சாண்டியைக் காட்டித்தானா அரசியலில் குதிக்க வேண்டும்?

இதுவென்ன பிரமாதம்! இருபக்கச் சாட்சியங்களையும் கேட்டறிந்து ஆராய்ந்து பல வழக்குகளிலும்நீதிவழங்கிய முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமாபஸநாயகாவே இப்போது தி. மு. க. பூச்சாண்டி காட்டும்போது படைத்தளபதிப் பதவி வகித்தவர் தி.மு.க. பூச்சாண்டி காட்டுவதில் என்ன ஆச்சரியம்?

திராவிடமுன்னேற்றக் கழகம், நாம் தமிழர் இயக்கம்ஆகியவைகளின் ஆபத்து பற்றி சில மாதங்களுக்கு முன் திரு. ஹேமாபஸநாயகா தமது இல்லத்தில் ஒரு மகாநாடுகூட்டி ஆலோசனை செய்தார். அந்த மகாநாட்டில் பல பௌத்தபிக்குகளும் கலந்துகொண்டனர். இந்த இரு ஆபத்துக்கள் பற்றியும் சிங்களமக்கள்மத்தியில் பிரச்சாரம்செய்து அவர்களுக்கு உணர்த்துவதென்று தீர்மானித்ததுடன் தி. மு. கழகத்தை தடை செய்யும்படி உள்ளூராட்சி மன்றங்களும் மற்றும் ஸ்தாபனங்களும்அரசாங்கத்தைக் கோரி தீர்மானம் நிறைவேற்றவேண்டுமென்றும் அந்த மகாநாடு முடிவெடுத்திருந்தது. அதன்பயனாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களும்கூட தி. மு. க. தடை தீர்மானங்களை நிறைவேற்றின.

திரு ஹேமா பஸநாயக்கா தி. மு. க. பூச்சாண்டியுடன் நிற்கவில்லை. தமிழராலும், சமஷ்டியினராலும் நாட்டுக்குச் சிங்கள இனத்துக்கும் ஆபத்து என்று கூறிவருகிறார். திரு. டட்லி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழர்களுக்குத்தான் நல்லகாலமென்றும் அவர்களுக்கே அதிக உரிமையும் சலுகையும் கிடைக்குமென்றும்கூட மாஜி பிரதம நீதியரசர் சொல்லுகிறார்.

திரு. ஹேமா பஸநாயகா மிகப் பொறுப்பான பிரதம நீதியரசர் பதவி வகித்தவர் இப்போதும் இலங்கை விவசாயிகள் சங்கத்தின் தலைவராக இருக்கிறார். செல்வாக்கு மிகுந்தவர். கவர்னர் ஜெனரல்பதவிக்கு நியமிக்கப்படவிருப்பதாகக்கூட ஒரு காலத்தில் வதந்தி நிலவியது.

இந்தநாட்டின் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் செல்வாக்கும் மதிப்பும் நிறைந்த ஒருவர் தமிழர்கள்பற்றி தவறான அபிப்பிராயம் கொண்டு தவறான பிரசாரம் செய்வது நாட்டுக்கே நல்லதல்ல.

நாடு சுதந்திரமடைந்த பின் தமிழ்மக்கள் தமக்கிருந்த உரிமைகளைப் படிப்படியாக இழந்துள்ளனர். தமிழ் மக்களின் சுதந்திரமே பறிக்கப்பட்டுள்ளது. சொந்தநாட்டிலேயே அவர்கள் சந்தேகப் பிரஜைகளாக வாழவேண்டிய நிர்ப்பந்த நிலையிலிருக்கின்றனர்.

இந்தநிலையில் தமிழர் பற்றி முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் தவறான அபிப்பிராயம் கொண்டிருப்பதை நீடிக்கவிடலாகாது.

தமிழ்த் தலைவர்கள் திரு ஹேமா பஸநாயகாவைச்சந்தித்து "தமிழர்களுக்கு என்ன உரிமையையா இருக்கிறது?" என்று கேட்டு உள்ள நிலைமையை விளக்கிக் கூற வேண்டும். அவர் உணர்ந்து கொள்வாரோ, அல்லது தெரிந்தும் தெரியாதமாதிரி நடந்துகொள்வாரோ என்பது வேறுவிஷயம். நிலைமையை எடுத்துக் காட்டி உணர்த்த வேண்டியது தமிழ்த் தலைவர்களின் கடமை.

இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் அடுத்த பொதுத்தேர்தலில் வகுப்புவாதந்தான் தேர்தல் பிரசாரத்துக்கு மூலதனமாக இருக்கும்போல் தெரிகிறது. பிரதமரும் பொறுப்புள்ள தலைவர்களும் வகுப்புவாதப் பிரசாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க முன்வர வேண்டும். செய்வார்களா

---

ஒரு பகிரங்கக் கடிதம்

## கனம் டாக்டர் தஹநாயகா அவர்களுக்கு

ஐயா,

தாங்கள், யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப்பட்ட 30,000 பனம் விதைகளை அம்பாந்தோட்டைப் பகுதியில் நாட்டுவித்ததாகக் கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தங்களுக்கு என்னவோ யாழ்ப்பாணத்துப் பொருட்களில் மிகவும் பிரியம் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் முன்னொரு தடவை தாங்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது எங்கள் நல்லெண்ணெயில் அளவிலா மோகங்கொண்டு, 'ஆஹா, இது வன்றோ தேவலோகத்தவர் பாவித்தற்குரிய எண்ணை; சீகிரியா சிங்காரிகள்இதைத்தான் தலையில் தடவியிருக்க வேண்டும்' என்றெல்லாம் புகழ்ந்து, நாலைந்து போத்தல்களுடன் வீடு திரும்பியதாக எனக்கு ஞாபகம்.

இப்பொழுது பனைமரத்தில் மோகங்கொண்டு உங்கள் பகுதியிலும் அதை வளர்ப்பதற்கு முன்வந்திருக்கிறீர்கள். அம்பாந்தோட்டைப் பிரதேசமும் சீதோஷ்ணநிலையில் ஏறக்குறைய யாழ்ப்பாணத்தைப் போன்றதே. ஆகையால் பனைமரங்கள் அங்கேயும் மசமசவென்று வளருமென நான் நம்புகிறேன். அம்பாந்தோட்டை மட்டுமென்ன, நமது நாட்டின் தென்மேற்குப் பகுதியைத் தவிர மற்ற எல்லாக்கரையோரங்களிலும் பனை இயற்கையாகவே வளருகிறது. இதெல்லாவற்றையும் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் அது சிறப்பு கொடுத்தது ஏனென்றால் பஞ்சம் பொறுத்த யாழ்ப்பாணத்தான் அதைப் பாடுபட்டு அக்கறையோடு வளர்த்த படியினாலேதான். கங்குமட்டைகள், ஓலைகளை பருவத்துக்கு பருவம் வெட்டி அதை ஒழுங்காகப்பேணி வளர்த்தால் அது இல்லையென்னாமல் கொடுக்கும் கற்பக தரு.

பனை மரத்தின் ஆயிரம் ஆயிரம் உபயோகங்களைப் பற்றி நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை அவற்றை அறியாமலா நீங்கள் இந்தவேலையில் இறங்கியிருக்கிறீர்கள் ஆனால்ஒன்று பனைமரங்கள் ஆள் உயரத்துக்கு மேல் வளர்ந்தபிறகு அவற்றில் ஏறி ஓலைவெட்டவோ காய் பிடுங்கவோ, பதநீர் எடுக்கவோ என்ன செய்யப்போகிறீர்கள்? தென்னைமரத்தில் சுலபமாக ஏறிப்பழகிவிட்ட உங்கள் பகுதியினருக்கு பனைமரம் கொஞ்சம் கஷ்டம் கொடுக்கப்போகுகிறதே!

இதற்கு ஒரு வழி சொல்லுவேன். ஏற்றுக்கொள்வீர்களா? யாழ்ப்பாணத்திலிருந்து பனந்தொழில் செய்யும் சில குடும்பங்களை அழைத்து அம்பாந்தோட்டைப்பகுதியில் குடியேற்றுவது. நாளடைவில் உங்கள் ஊர்மக்களும் இவர்களிடமிருந்து பழகிவிடுவார்கள். எப்படி என் யோசனை? சொல்லிவிட்டு எனக்கு மனதிலே தோன்றும் ஓர் அச்சத்தையும் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. சில காலத்துக்கு முன்பு பளைப்பகுதியில் பனஞ்சாராயம் காய்ச்சுவதற்கு ஒரு திட்டம் போட்டீர்களே, நினைவிருக்கிறதா? இங்குள்ள பொதுமக்கள் அதை எதிர்த்துக் கூச்சல்போட அந்த எண்ணத்தைப் பொத்தென்று கைவிட்டுவிட்டீர்கள். இங்கு செய்யமுடியாததை அம்பாந்தோட்டையில் செய்யலாம் என்ற ஓர் எண்ணம் இருக்குமோ என்றுதான்பயப்படுகிறேன்.

ஆண் பனைகளிலிருந்து பெறும் முக்கியமான பலன் அவற்றின் பதநீர்தான். அதைச்சரியான வழியில் பயன்படுத்தினால் சீனி 'சப்ஸிடி'க்கு உங்கள் அரசாங்கம் செலவழிக்கும் தொகையில் பெருமளவு மிச்சப்படுத்தலாம். நான் சொல்வது என்னவென்றால், ஆண்பனையில் ஊறும் நீரைக் கள்ளாகவோ சாராயமாகவோ பயன்படுத்தாமல் அதிலிருந்துஅருமையான பனங்கட்டி(வெல்லம்)செய்யலாம் என்பதே.

யாழ்ப்பாணத்திலே இப்பொருளுக்கு மதிப்பில்லாமல் மரவரி என்று ஒரு சட்டம் குறுக்கே நிற்கிறது. இங்கே ஒரு ரூபாய் உழைப்பவன் ஐம்பது சதத்துக்கு கள் குடித்துவிட்டு ஐம்பது சதத்துக்குச் சீனி வாங்கிக்

[16-ம்பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகம் பேசுகிறது

# 10 வருடங்களுக்கு முன் இறந்த தாய், புதல்வியுடன் பேசுகிறாள்

இறந்தவர்களுடன் பேசுவதைப் பற்றிய அனுபவங்களை பத்திரிகையில் எழுதலாமா என்று கேட்டிருந்தேனல்லவா? எழுத வேண்டுமென்று பல அன்பர்கள் ஆவலுடன் எழுதியிருக்கிறார்கள். நேரிலும் பல அன்பர்கள் எழுதுமாறு கேட்டனர் யாரும் வேண்டாமென்று எழுதவில்லை.

ஆவி உலகத்துடன் பேசுவது உண்மையா இல்லையா என்பதைப்பற்றி தமக்குத் தெரியாதென்றும். ஆனால் அவர்களுடன் பேசி அவர்களது அமைதியைக் குலைக்கக் கூடாதென்றும் மகாத்மா காந்தி அடிகள் சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக ''யங்இந்தியா'' பத்திரிகை எழுதியிருந்ததை ஓர் அன்பர் எழுதி, இது பற்றிய விளக்கங்களை எழுத வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

''நம்முடனே உயிருடன் இருப்பவர்களுடனேயே சரியாகப் பழகிப் பேச முடியாத நிலையில், இறந்தவர்களுடன் பேசுவானேன்'' என்று மற்றோரன்பர் 'கிண்டலாகச் சொன்னார்.

இந்த விஷயம் புதிதல்ல. மேலைநாடுகளில் ஆவி உலகத்துடன் பேசுவதுபற்றிபல புத்தகங்கள் வெளியாகியுள்ளன. பல சஞ்சிகைகளும் பிரசுரமாகி வருகின்றன. பல சங்கங்கள் அமைத்து, 'இறந்தவர்களுடன் பேச ஒருமணி நேரத்துக்குக் கட்டண விகிதம் ஏற்படுத்தி, இதை ஒரு தொழிலாகவும் பிரிட்டன் அமெரிக்கா முதலிய நாடுகளில் பலர்கொண்டிருக்கிறார்கள். இது ஆதாரமற்றதாக இருப்பின், இது பற்றிப் பல பல நூல்களும், சஞ்சிகைகளும், வெளியிட்டிருக்கப்படுமா?

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் கொழும்பிலே ஒரு பத்திரிகையில் பணி புரிகையில் எனக்கு ஒரு துண்டுப் பிரசுரம் கிடைத்தது. இறந்த பின், ஆவி உலகத்திலே பல உயிர்களும் இருப்பதாயும் அங்கு அவரவர் வினைக்கேற்ப, வெவ்வேறு பகுதிகளில் இருப்பதாயும், அவர்களுடன் தக்க 'மீடியத்'தின் மூலம் பேசலாமென்றும், கொழும்பிலே உள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனத்தாரே அதை வெளியிட்டிருந்தனர். இது ஊரை ஏமாற்றும் விளம்பர தந்திரமென்று கருதி அப்பிரசுரத்தைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டேன்.

சில நாட்களில் ஒரு நண்பர் என்னை ஆவியுடன் பேசும் ஓர் இடத்துக்கு அழைத்துக் செல்லுவதாகக் கூறினார். உண்மையை நேரிலேயே காணலாமென்று மிகச்சந்தோஷத்துடன் அங்கு சென்றேன். அச்சமயம் சில அன்பர்கள் ஆவிகளுடன் ''பேசிக் கொண்டிருந்தனர்'' அதாவது ஒரு சதுரமான பலகையின் ஓரத்தில் ஏ. பி. ஸி. டி.... என்ற 26 எழுத்துக்கள் எழுதியிருந்தன பலகையின் மத்தியில் ஒரு சின்னக் கிண்ணத்தைக் கவிழ்த்து வைத்திருந்தனர். பலகையின் இரு புறங்களிலே இருவர் (மீடியம்) உட்கார்ந்து, அக் கிண்ணத்தின்மீது இரு விரல்களை வைத்துக் கொண்டிருந்தனர். அந்தக்கிண்ணம் சில எழுத்துக்களைத் தொட்டுத் தொட்டுக்கொண்டு வந்து பலகையின்மத்தியில் வந்து நின்றது. தொட்ட எழுத்துக்களைக் கூட்டிக் கூட்டி சொற்களைத் தொகுத்து அவைதான் ஆவிகள் கூறும் பதில் என்று சொன்னார்கள்.

எனக்கு இதில்சற்றும் நம்பிக்கையில்லை. இருவரும் வேண்டுமென்றே அந்தக் கிண்ணத்தைத் தள்ளுவதாகவே நினைத்தேன். அச்சமயத்தில் காலஞ் சென்ற மகாமகோ பாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யருடன்பேசுவதாகக் கூறினர். 'இப்போது இங்குவந்திருப்பவர் யார்தெரியுமா?'' என்று அவர்கள் என்னைக் குறித்து அந்த ஆவியைக் கேட்டதற்கு 'தெரியும்' என்று பலகையில்பதில்வந்தது. 'இவர் பெயரென்ன' என்று கேட்டதும் என் முழுப் பெயரும் வந்தது! என் முழுப் பெயர் அச்சமயம் என்னைத் தவிர அங்குயாருக்கும் தெரியாது. முழுப் பெயர் பலகைமூலம் கிடைத்ததும், எனது அவநம்பிக்கையில் முதல் அடி விழுந்தது.

## "கலா, உன் காதுக்கு அந்த வளையம் மிக நன்றாக இருக்கிறது"

பிறகு அந்தக்கிண்ணத்தில் நானே கைவைக்க விரும்பினேன். கிண்ணம் மெதுவாக நகர்ந்தது. ஆனால் எழுத்துக்களைச் சரிவரத் தொடவில்லை. பின்னர் பழைய 'மீடியம்'கைவைத்து, ஏன் எனக்கு ஓடவில்லை என்று கேட்டதற்கு, ''இவருக்குப் போதிய தெய்வ நம்பிக்கையும் மனப்பக்குவமும் இல்லை'' என்றுபதில் கிடைத்தது. இது எனக்கு விழுந்த இரண்டாவது அடி.

''இராமாயணம் நடந்த கதையா, அல்லது கற்பனைக் கதையா?'' என்று அடுத்தபடி கேட்டனர். ''கம்ப இராமாயணத்தின் இலக்கியச் சுவையையே பருகினேனேயன்றி, அது நடந்ததா இல்லையா என்பது பற்றி ஆராயவில்லை'' என்று டாக்டர் அய்யர் அவர்களின் ஆவி பதிலளித்தது. இன்னும் ஏதேதோ பேசினர். என் அவநம்பிக்கை குறைந்ததென்றாலும், இது பற்றி தெளிவில்லாமல் குழப்பமான மனதுடன் திரும்பினேன். இதைப்பற்றி மறந்தும்விட்டேன்.

இரு வருடங்களுக்குப் பிறகு, அந்த 'சுந்தரம்ஸ்' லிமிட்டெட் வர்த்தக ஸ்தாபன அதிபரான சுந்தரம்பிள்ளை அவர்களிடம் திரு. கிருஷ்ணயர் என்ற பத்திரிகை ஆசிரியர் என்னை அறிமுகம் செய்துவைத்தார். அச்சமயம் பிள்ளை அவர்கள், ஆவி உலகத்திலிருந்த தம் தந்தை திருவருள் வைரவநாத பிள்ளையுடன் பேசி, அவர்கூறும் பதிலை எழுதிக்கொண்டிருந்தார். அநத வீட்டிலிருந்த ஒரு பெண்தான் மீடியமாக இருந்தது; முதல் வருடாந்த ''திவசத்தை'' எப்படிச்செய்வது என்ற விவரங்களையே கேட்டு எழுதினர். 'வீடெல்லாம் பசும் சாணியால் மெழுகி, கோலம்போட்டு, கோவில் குருக்களை அழைத்து, கும்பம்வைத்து என்ற பல விவகாரங்களையும் எழுதிக்கொண்டிருந்தார்கள். ஏதோ டெலிபோனில் பேசி அறிவதுபோல் இருந்தது. இதைப் பார்த்ததும் ஒரு விஷயம் உணர்ந்தேன். ஊரை ஏமாற்றி, விளம்பரம் பெற இவர்கள் ஆவிஉலகத்துடன் பேசவில்லையென்றும், இதைப் பூரணமாக நம்புகிறார்கள் என்பதையும் உணர்ந்து, -'உலகிலே நமக்குத் தெரியாத விஷயங்கள் பல இருக்கின்றன. தெரியாததால் அது இல்லையென்று கருதுவது தவறு. உண்மையைத் தெரிந்துகொள்ளுவதே அறிவுடைமை'' என்ற பாடத்தைக் கற்றேன்.

### ஐயாறன்

இதற்கிடையே இதுபற்றிய அனுபவமும் நம்பிக்கையும் வலுப்பட்டதென்றாலும். வெகுவாக இதைப் பற்றி ஊக்கம் காட்டவில்லை. இரு மாதங்களுக்கு முன் மதுரை குருமகாசந்நிதானம், ''ஈழநாடு'' காரியாலயத்துக்கு விஜயஞ்செய்து பேசுகையில், இறந்தவர்களுடன் பேசுவது உண்மை என்றும், இதனால் மக்களின் தெய்வநம்பிக்கை பலப்படுவதுடன், இங்கு பாவம் செய்தால் தண்டனை கிடைக்குமென்று அறிந்தால் பலர் பாவம்செய்யாமல் தடுக்கப்படுவரென்றும் இந்தப்பணியை ''ஈழநாடு'' செய்ய வேண்டுமென்றும் சொன்னார். என்றாலும் அவருக்கு இதில் ஒரு 'பித்து' என்றும் கருதி பேசாமல் இருந்துவிட்டேன்.

இருவாரங்களுக்கு முன், கொழும்பு சென்றிருக்கையில், பழைய நண்பரும் மீரிகமை 'லோகநாயகிமைன்ஸ்' உரிமையாளருமான திரு. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் எங்கள்வீட்டுக்கு வந்து. தமது புதல்விகளுள் ஒருத்தி செல்வி வித்தகம் ஆவிஉலகிலே இருவள்ளுவர், மகாத்மா காந்தி உள்ளிட்டுப் பலருடனும் பேச முடிவதாகவும் அண்ணாதுரையும் பேசியுள்ளதாகவும், காலஞ்சென்ற என் ஒரேபுதல்வி சரஸ்வதியுடனும்பேசலாமென்றும் குடும்பத்துடன் வந்து பார்க்குமாறும்கேட்டார்.

எங்கள் சரஸ்வதியுடன் பேச ஒருபுறம் ஆவல்தான். ஆனால் அவள் நரகத்தில் இருப்பதாகச்சொன்னால்அது பெரியவேதனையாக இருக்குமேஎன்று மனதில்பட்டது. இரண்டொருநாள் கழித்து பிள்ளை அவர்கள் மீண்டும் வந்து தாங்கள் சரஸ்வதியை அழைத்துப் பேசியதாகவும் அவள்கைலாசத்தில் இருப்பதாகவும். எங்களுடன் பேச விரும்புவதாகவும் சொல்லவே, குடும்பத்துடன் மறுநாளே மீரிகமைக்குச் சென்றோம்.

காலை 10 மணி இருக்கும். அங்கு பூசை அறைக்கு வெளியே, 'போர்டு' பலகைக்கு முன் 16 வயதுள்ள ஒரு பெண் மட்டும் அமர்ந்து கிண்ணத்தைத் தொட்டுக் கொண்டிருந்தார். அவர் எதிரே வேறு 'மீடியம்' எதுவுமில்லை. கிண்ணம் மிக வேகமாக ஓடிஓடிச்சென்று எழுத்துக்களைத் தொட்டுத் தொட்டு மத்தியில் வந்து நின்றது. உடனுக்குடன் அப்பெண், சொற்களைச் சொல்லச்சொல்ல பக்கத்திலிருந்தவர் எழுதிக்கொண்டார். அவ்வீட்டில் ஒரு பையனுக்கு உடல்நலம் சரியில்லை, ஆவி உலகத்திலுள்ள அவர்களது குருநாதர், அதற்கான சில மூலிகை மருந்துகளைத்தான் அச்சமயம்சொல்லிக்கொண்டிருந்தார். அதன்படி மருந்துகளைச் சேமித்து அரைத்துப் போட்டனர். (இரண்டு நாட்களில் அப்பையன் குணமடைந்துவிட்டார்.) வைத்தியரைத்தேடி அலையாமல், காசு பணம் செலவழிக்காமல், இப்பலகை மூலமே, அக்குடும்பத்தினர் வைத்தியம் செய்து கொள்வதைப் பார்த்தேன். எவ்வளவு நம்பிக்கை!

நாங்கள் (சரஸ்வதியின் புதல்வி கலா, சரஸ்வதியின் தாய், நான்) சென்று அமர்ந்ததும், சரஸ்வதி வந்து பேசுவதாக போர்டு அறிவித்தது. ''கலா, கலா, கலா, கலா...'' என்று பன்முறையும் சரஸ்வதி தன் புதல்வியின் பெயரைக் கூறி, ''உன்பெயரைச் சொல்லச்சொல்ல எனக்கு இன்பமாக இருக்கிறது'' என்று தாய்அன்புடன்குறிப்பிட்டு, பலகைக்குப் பக்கத்தில் நெருங்கி வருமாறுதன் புதல்விக்குச் சொன்னாள். குழந்தையும் நெருங்கி உட்கார்ந்தாள். மூன்று வயதில் தாயை இழந்துவிட்ட அக் குழந்தைக்கு ஒன்றுமே புரியவில்லை. ''கலா, உன்காதுக்கு அந்த வளையம் அழகாக இருக்கிறது'' என்று கூறியதுடன், ''நகத்தைக் கடிக்காதே'' என்றும் புத்தி சொன்னார். (கலாநகத்தைக் கடிப்பதை எங்களில் யாரும் கவனிக்கவில்லை).

பின்னர் கலாவை ஒரு பாட்டுப்பாடச் சொன்னாள் சரஸ்வதி. கலா பல நிமிடம் வாய் திறக்கவில்லை. மிகவும் கூச்சப்பட்டாள் பொறுமை இழந்து ''தெனாலிராமன் குதிரை வளர்த்ததுபோல் பெண்ணை வளர்த்திருக்கிறான்'' என்று சரஸ்வதியின் புருஷனைக் கடிந்தேன். ''குதிரையை ரொம்பக்கண்டீர்களோ. அவரை ஒன்றும் சொல்லாதீர்கள்' என்று சரஸ்வதி கூறிவிட்டு, ''பாடு பாடு, சீக்கிரம் பாடு'' என்று பன்முறையும் தன் புதல்வியை அன்புடன் கேட்டாள். மெதுவாக ஒரு பாட்டுப்பாடினாள் கலா. பாட்டைக்கேட்டு தலையாட்டுவதுபோல் கிண்ணமும் அங்கும் இங்குமாக அசைந்தது. ஓரிடத்தில் கலா ஒரு தவறு செய்தாள். அதைத் திருத்திக் கொடுத்தாள் (காலஞ்சென்ற அவள் தாய்) சரஸ்வதி. 'பலே, பலே' என்று உற்சாகமூட்டினாள். பாட்டிலே வேல், மாலை என்று வந்த இடத்தில் கிண்ணம் வேல் போலவும் மாலை போலவும் ஓடிக்காட்டியது.

இதையெல்லாம் பார்த்ததும் இறந்துபோன எங்கள் புதல்வி சரஸ்வதி உயிருடன் இருப்பதாகவே உணர்ந்தோம். கலாவுக்கு மீண்டும் தன் தாய் கிடைத்து விட்டதாகப் புதிய உற்சாகம்.

''அப்பா, நம் குடும்பத்துக்கு ஏன் பலகஷ்டங்களும் தெரியுமா? நீ பிதிர் (இறந்தவர்களான தென்புலத்தாருக்கான) கடமைகளைச் சரிவரச் செய்யாததுதான். பிதுர்க்கள் சாபமிட்டுள்ளனர்'' என்று என் புதல்வி கூறியதும், நான் திடுக்கிட்டு என் குற்றத்தை உணர்ந்தேன். மறுவாரமேமகாலயத்தன்று பக்திசிரத்தையுடன் சிரார்த்தம் செய்தேன்.

(அடுத்தவாரம் மகாத்மா காந்தி ஆவி உலகத்திலிருந்து செல்வி கலாவுக்குச் சொன்ன ஓர் அருமையான சிறுகதை வெளிவரும்.)

---

### வாலுடன் வா!

வீட்டின்மீது, நகைமீது, நிலத்தின்மீது என்றெல்லாம் கடன் கொடுக்கிற வழக்கம் உண்டு. ஆனால் வாலுக்குக் கடன் கொடுக்கிற அதிசய வங்கி ஒன்று இருக்கிறது. கொல்லப்பட்ட எலிகளை இந்த வங்கிக்குக் கொண்டுபோனால் ஒரு வாலுக்கு ஒரு ரூபாய் கிடைக்கும். இந்த எலிவால் கடன் திட்டம் வடபிலிப்பைன்ஸ் தீவுகளில் இருக்கிறது. அங்கு பயிர்களை அழிக்கும் எலிகளை ஒழிக்க வங்கி அளிக்கும் ஊக்கமே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் உயர்ந்தோர் ஏற்கும் உயிர் ஆற்றலாம் சக்தி

## நாமும் வழிபட்டுப் பெருவாழ்வு பெறுவோம்

— ஈழவேந்தன் —

பெண்மையைப் போற்றுகின்ற பண்பு அதிலும் அந்தப் பெண்மையை தாய்மை வடிவிலே போற்றுகின்றபண்பு உலகில் பொதுப் பண்பாகவிளங்குவதைக் காண்கின்றோம். ''Mother land, motherearth, mother forgue' போன்ற ஆங்கிலச்சொற்றொடர்கள் சரி தாய்நாடு, தாய்மொழி, தமிழ்த்தாய் இயற்கை அன்னை, பூமாதேவி, நிலமடந்தை போன்ற தமிழில்வழங்கப்படும்சொற்தொடர்கள் சரி இவ்வுண்மையையே வலியுறுத்தி நிற்பதைக் காண்கிறோம்.

இவ்வித பெண்மையைப் போற்றிய எம் முன்னோர் இறைவனைக் குறிப்பிடும் போதுகூட அந்த இறையிலும் பெண்மை முதன்மை பெறுவதை விரும்பி உமாபதிசிவம், அம்பிகைபாகன், மாதொருபாகன், இலட்சுமி நாராயணன், ராதாகிருஷ்ணன், அர்த்தநாரீசுவரன் என்றே வாழ்த்தி வழுத்தி நிறைவெய்தினர்.

**தமிழ் இலக்கியங்களில் தாய்மை**

தமிழ்இலக்கியங்களைக்கூட காலக்கண்கொண்டு நோக்கும்போது சங்க காலம் தொட்டுஇற்றைவரை எழுந்தஇலக்கியங்களில் பெண்மைக்குச் சிறப்பாக அதிலுள்ள தாய்மைப்பண்பிற்கு தனியிடம் கொடுக்கப்பட்டிருப்பதை யாம் உணரக்கூடியதாக இருக்கிறது. பெண்ணுக்கு ''ஒரு திறன் ஆகி நின்று'' என்று புறநானூறு போற்றும் கருத்தும் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தாயிற்சிறந்தொரு கோவிலும் இல்லை'' என்று ஔவை மொழிந்த கூற்றுக்களும், ''தாயினும் நல்ல தலைவன்'' என்று இறைவனை ஞானசம்பந்தர் வாழ்த்தும் முறையும் ''தாயிற்சிறந்ததயவானதத்துவனை'' என்றும் ''அம்மையே அப்பா'' என்றும் ''பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து'' என்றும் ஆண்டவனை மாணிக்கவாசகர் அழைக்கும் பாங்கும், போற்றப்படும் தன்மையும் யாம்காணக்கூடியதாகவிருக்கிறது. மற்றும் ''அவளால் வந்த ஆக்கம் இல் வாழ்க்கையெல்லாம்'' என்று சிவஞான சித்தியார் செப்பும் செம்மொழியும் பெண்மையின் பெருநிலையை பேருலகிற்கு எடுத்துக்காட்டுவதாகும்.

**தொன்மைவாய்ந்த வழிபாடு**

''சக்திவழிபாடு மிகத் தொன்மைவாய்ந்த வழிபாடு. கி.மு. 5000 ஆண்டுகளுக்குமுன்பேஇவ்வழிபாடு மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் நிலவியதென்பதற்கு அங்குஅகழ்ந்து எடுக்கப்பட்டபுதைபொருள்கள் சான்று பகர்கின்றன.

ஆண்டவன் உண்டென்று கூறுவோரும் சரி, இல்லையென்று மறுப்போரும்சரி, உலகம் ஏதோ ஒரு பேராற்றலினுல் (சக்தியினுல்) இயங்குகிறது என்பதை ஏற்றுள்ளனர், இந்தப் பேராற்றலை-சக்தியைத்தான் யாம் எம் வழிபடுதெய்வமாக உருவகப்படுத்தியுள்ளோம், சக்தியைத் தனிப்பெரும் தெய்வமாக வழிபடும் வழக்கம் இன்றும் சில மக்களிடையே உண்டு, எம் சிவநெறிக் கோட்பாட்டின்படி சிவம் செயற்பட - தொழிற்பட- உரிய முறையிலே இயங்க பேராற்றலின் (சக்தியின்) துணைவேண்டப்படுகிறது,

**உயிர் ஆற்றலை உயர்ந்தோர் ஏற்கின்றனர்**

இந்த உயிர் ஆற்றல் (சக்தியை) 'Life force' என்று பெர்ஞட்ஷோ, ஈன்ஸ்டின் ஆகியோர் கூறியுள்ளனர், இப்பேரறிஞர்களுக்குக் கடவுள் நம்பிக்கையிருந்ததோ, இல்லையோ என்பதையிட்டு அறிஞர் உலகிடை கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனுல் இவர்களும் உலகை ஒரு சக்தி இயக்குகிறது என்பதனை ஏற்றுள்ளார் யாம் மேலே எடுத் [illegible] தொடர் சான்றும் அமைகிறது, இந்தப் பேராற்றலைத்தான் நற்றமிழால் எம்மை வாழ்வித்த பாரதிதாசன் ''எங்கெங்கு காவினும் சக்தியடா அவள் எழுகடல் வண்ணமடா'' என்று தம்மையே மறந்து பாடுவதைக் காண்கிறோம்,

**பேரறிஞர் கக்சிலியின் கருத்து**

இந்தப் பேராற்றலின் திறனை இச்சக்தியின் மகத்துவத்தைத்தான் ''உள்ளது சிறத்தலும் அறமும்'' என்ற தமது நூலில் அல்டொஸ் கக்சிலி என்ற பேரறிஞர் பின்வருமாறு கூறுகிறூர்:

''லின் உலகிலே இசை மீட்கும் கின்னரர் முதல் அம்புலியிலே அசைவற்றிருக்கும் பொருட்கள் ஈறுக இவையாவும் விரிந்து விளங்கும் அண்டசராசர உள்ளடக்கத்தில் நிலையற்ற சாயல்களே இவை சக்தியின் அதாவது பேராற்றலின் வலிமையினுல் சலனமற்ற மங்கலமான உள்ளடக்கத்தில் இருந்து வெளிப்பட்டு உள்ளது சிறத்தல் அல்லது பரிணும வளர்ச்சிப் பாதையிலே தன் பயணத்தைத் தொடங்குகின்றன, அந்தமில் வளர்ச்சி வழியிலே- இவை பரிதியாகவும் கிரகமாகவும் சடத்தின் நானுவிதத்தோற்றங்கள் யாவற்றையும் ஏற்று வாழ்க்கையிலும் சிந்தனையிலும் எண்ணுக்கடங்காத வேறுபாடுகள் ஊடாக முன்னேறி எமது கற்பனைக்கு எட்டாததும் எமது சிற்றறிவாற்றலால் சிந்தித்து ஏதும் அறிந்து கொள்ளவொண்ணுததுமான தோற்றங்களைக் கடந்து மீண்டும் அவை எழுந்த அதே எல்லையில்லாத அகண்ட உள்ளடக்கத்தில் ஆழ்கின்றன ''

இந்த சக்தியைத்தான் இராமகிருஷ்ணபரமஹம்சர் காளிவடிவில் வழிபட்டார். அதனுல் பயனும் பல பெற்றூர் நம் தமிழ் மூதாதையர் இதே தெய்வத்தை ''கொற்றவை'' உருவில் வழிபட்டனர். இதே சக்தியைத்தான் பாட்டிற்கொரு புலவன் பாரதி''பராசக்தி'' வடிவில் வழிபட்டு தன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பார்த்தார.

**நவராத்திரி நவிலும் நற்கருத்து யாது?**

இந்தப் பேராற்றல் (சக்தி) வழிபாடே நவராத்திரிவிழாவாக மலர்ந்துள்ளது ஒன்பது இரவுகள் கொண்ட விழா என்பதையே இச் சொற்றொடர் குறித்து நிற்கிறது. இந்தச் சக்தியைத் தான் நம் பண்டைய தமிழர் ''ஆற்றலுக்கு மலைமகள்'' என்றும், ''அருஞ்செல்வத்திற்கு அலைமகள்'' என்றும், ''அறிவிற்குக் கலைமகள்'' என்றும் பெண் உருவம் கொடுத்து வழிபட்டனர். வேறுசொற்களில் விளம்பின் இவ்வையத்தில் வளமுடன் வாழ்வதற்கு ஆற்றலும், அருஞ்செல்வமும், அறிவும் மிக இன்றியமையாதது என்பதை வலியுறுத்தவே இப் பேராற்றல் வழிபாடு மேற்குறித்த மூன்றுவகை உருவகம் கொடுக்கப்பட்டு தோன்றியது என்று கூறல் பொருத்தமுடைத்து. இதே சக்தியைத்தான் வடமொழியாளர் ''இச்சாசக்தி'', ''கிரியாசக்தி'', ''ஞானசக்தி'' என்று மொழிவர். ஆங்கிலத்தில் அறிவியலார் இதனை முறையே Structural Principle, Motive Principle, & Controlling Principle என்று அறிவியல் நிலையில் நின்று சாற்றுவர். இப்பேராற்றல் வழிபாடு வெவ்வேறு வழிபாடு வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு சொற்களில் விளக்கப்படினும் உணர்த்தி நிற்கும் பொருள் ஒன்றேயாகும்.

((14-ம் பக்கம் பார்க்க)

---

## கீரிமலையினிலே!

— வி. கந்தவனம் —

கீரிமலையினிலே - நலந்தருங்
கேணி யருகினிலே
மாரி மழையதனுல் - மலர்ந்தெழும்
மண்ணினைப் போலவுள்ளம் —

பூரித்து நிற்கையிலே - நினைவுகள்
பூத்துச் குலுங்கையிலே
தூரத் தொடர்ந்துசென்றேன் - மெள்ள மெள்ளச்
சூழல் கடந்து நின்றேன்!

கஞ்ச மலர்க் குளத்திற் — சூரிய
காந்திக் குடங்கள் கொண்டு
வஞ்சிக் கொடிகள் தண்ணீர் - அள்ளிப்பயிர்
வார்க்க நடப்பதுவாய் —

பொன்னிற நெற்றியிலே - குங்குமப்
பொட்டினை வைத்துவிட்டுப்
பின்னர் அழித்தது மன் - பாவமிப்
பெண்ணென வெண்ணிடவாய் —

சாவகச் சேரிமண்ணை - மேற்கினைச்
சார்ந்தசெம் பாட்டுமண்ணைத்
தூவியதோ கொணர்ந்து - வரிசையிற்
சோழக மென்பதுவாய் —

நீலப்பட் டாடையிலே - பழுத்தப
லாலித்தக் காளியெல்லாம்
சாலப் பிசைந் தெறிந்தார் - யாரெனத்
தானையம் மேலெழவாய் —

பாயிற் பனங்களியோ - படர்ந்தெழும்
பாழிருள் தீங்குணர்த்தும்
ஆயநற் செங்கொடியோ - இதுவென
ஆவலுற் ருர்த்தெழவாய் —

மாலைமகள் வரைந்த - ஓவிய
வானத்தை நான்மறந்தேன்
காலை வருடி யின்பக் - கதைசொன்ன
காற்றையும் நான்துறந்தேன்!

கத்துங் கடலலைகள் - திவலைகள்
காறி யுமிழ்வதையும்
மத்தப் பெருக்கினிலே - ஓதைசெய்
மக்களையும் மறந்தேன்!

கோடடித்த ஒழுங்கு - முறையினிற்
கூடு திரும்புகின்ற
கேடிற் பறவையினம் - புகட்டிடும்
பாடம் மனதுவைத்தும் —

தீதில் வடமீனின் - திறனுடைச்
செம்மனக் கண்ணகிபால்
சோதிற் குழவிமொழி - வருந்திமுன்
கூடிப் பயின்றுவந்த —

கிள்ளைக் குழாம்பொழிந்த - மழலையில்
துள்ளி மனந்திரிந்தும்
கள்ளில் விழுந்தவண்டாய் — கிடந்தருங்
காட்சிகளிற் கலந்தேன்.

---

## நிலாக் கற்களின் வயது 450 கோடி ஆண்டு

அம்புலியின் மேற்பரப்பு மிகவும் தொன்மையானது; சூரிய மண்டலம் தோன்றியபோதே அம்புலியும் தோன்றியிருக்கலாம்.

அப்பலோ11 விண்வெளி வீரர்கள் அம்புலியிலிருந்து கொண்டுவந்த கற்களை ஆராய்ந்ததிலிருந்து, அவை 300கோடி ஆண்டுகளாவது பழமையானவை என்று புலப்படுவதாக விஞ்ஞானிகள் கூறினர். நிலாக்கற்களின் வயது450 கோடி ஆண்டுகள்கூட இருக்கலாம். சூரிய மண்டலக் கிரகங்கள் தோன்றியகாலம் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு என்பது விஞ்ஞானிகள் கருத்து.

பூமியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பழமையான கற்களின் வயது ஏறத்தாழ 330 கோடி ஆண்டுகள். பூமியின் மேற்பரப்பில் அவை சிதறிக் கிடக்கவில்லை; ஆனுல் பூமிக்குள் ஆழப்புதைந்து கிடக்கின்றன.

மேலும் துல்லியமான - திட்பமான கதிரியக்கக் காலக்கணிப்புமுறைகளின் படி புதிய முடிவு உறுதி செய்யப்படுமானுல், பூமி அது தோன்றியபோது எவ்வாறு காட்சியளிக்கிறதோ அதுபோலவே காட்சியளிக்கும் ஓர் இடம் முதன்முறையாக விஞ்ஞானிகளுகளுக்குக் கிடைத்திருக்கிறது - என்றாலும். ஞாயிறு மண்டலத்திலுள்ள பூமி முதலிய கோள்களின் பிறப்பு, வயது, வளர்ச்சி பற்றிய துப்புகள் துலங்குவதற்கு நிலா ஓர் இயற்கை ஆய்வு கூடமாகப் பயன்படும்; பிரபஞ்சம் முழுவதன் தோற்றம், வயது முதலியனபற்றியும் விளக்கங்கள் கிடைக்க அது துணைசெய்யக்கூடும். பூமியில் உயிரினம் தோன்றிய ஆராய்ச்சிக்கும் அது உதவலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப்போட்டியில் பாராட்டுப்பெற்ற சிறுகதைகளில் ஒன்ருன இச்சிறுகதையின் முதற்பகுதி சென்ற வாரம் வெளிவந்திருந்தது.**

# 'அவருக்கும் முட்டை வேணும்'

— ச. ம. அச்சுதன் —

சிவலிங்கத்தின் வண்டில் வாய்க்கால் தெருச்சந்தியால்திரும்பிவிட்டது. அவன் வீட்டிற்கு இன்னுமொரு கூப்பிடுதூரம்தான். அந்தக் குறுக்குத்தெருவில் நின்று பார்த்தாலே அவன்வீடு நன்ருகத்தெரியும். அங்குள்ள அனேகமான வீடுகளைப் போல் அவன் வீடும் வேலியெரப்பில்லாமல் யாழ்ப்பாணக்'குரோட்டன்ஸ்'சான பாவட்டையால் அரண்செய்யப்பட்டதொன்றே.

டட்டடா, டட்டடாஎன்று தாள லயம் தவருமல் கைத்தறி நெசவாலையில் இடுந்து எழுந்த ஒலி அவனுக்கு மீண்டும் ஒரு தாழ்வுணர்ச்சியை உண்டாக்கியது. காரணம், அங்கு வேலை செய்யும் குமருகள் சேலை நெய்யும்போது ஊர்வம்புகளையும் சேர்த்து நெய்வது தான். அது அவர்களுக்கு ஊடும் பாவுமான ஒரு விஷயப். கன்னையும் பார்த்து அவர்கள் என்னென்ன கதைக்கிருர்களோ என்ற ஒரு கூச்சமே அவனின் மன நிலைக்குக் காரணம்.

அப்பாடா! எப்படியோ நெசவாலையையும் கடந்து மதசடிக்குவந்தாகிவிட்டது. அதோ! அவன் மனைவி வீட்டில் மாமர நிழலில் அடிச்சல்லிப் புகையிலை வரிந்து கொண்டிருக்கிருள். ரோட்டிலிரூந்து வண்டிலை ஒழுங்கைக்குள் இறக்கிய அவனுக்கு அந்த மணலில் இன்ெருதுணையில்லாமல் அதை இழுப்பது அவ்வளவு சுலபமாகத் தெரியவில்லை. மனைவியைக் கூப்பிடலாமென்ருலும் அவனுக்குச் கூச்சமாக இருந்தது. பின்னே இருக்காதா? கல்யாணமாகி இன்னும் சரியாக ஆறுமாதங்கள் கூட ஆகவில்லையே! அவளை எப்படிக் கூப்பிடுவது? பெயர் சொல்லிக் கூப்பிடுவதா? அல்லது கிராமார்ந்த வார்த்தைகளில் ஒன்றை உபயோகிப்பதா? சிவலிங்கத்தால் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

ஏதோ அகஸ்மாத்தாக ரோட்டுப் பககம் திரும்பிய சுகிர்தம் அக்காட்சியைக் கண்டதும் வரிந்த புகையிலையை வரிந்தபடியே விட்டு விட்டு ஓட்டமும் நடையுமாக அங்கு வந்து சேர்ந்தாள்.

''என்ன, இந்த வெயிலிலை நிற்கிறியள்? ஒரு சொல்லுக்கூப்பிட்டால் என்ன? வாய்க்கை என்ன புட்டே?'' என்று பொய்க் கோபத்தில் குறும்புச்சிரிப்பு இழையோட அவள் கேட்டபோது அவனுக்கு ஜிலுஜிலு என்று இருந்தது. என்னதான் கஷ்டமாளுலும்அவள் முகத்தில் அந்தச் சிரிப்புக் குறைவதேயில்லை. அப்படி அவள் சிரிக்கும்போதெல்லாம் பிரபல தமிழ் சினிமா நடிகை ஒருத்தியின் சிரிப்பையும் அவள் சிரிப்பையும் அவன் தனக்குள் ஒப்புநோக்கிக் கிளுகிளுப்படைவதுண்டு. ஆனல் இப்போது அவன் அதை அவ்வாறு ரசிக்கும் நிலையிலில்லை

''சும்மா கதைச்சு இப்ப என்னேடை கொழுவுப்படாதை; பின்னலைபோய்த் தள்ளு'' என்று கூறிய அவன் வண்டியைத் தன் பலம் கொண்டமட்டும் இழுத்தான்.

''நல்லாப் பசிக்குது போலை!'' என்று கூறிய அவளும் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் வண்டியைத்தள்ளிளுள். ஆனல் வண்டி நகருவதாக இல்லை.

இருவரும் சோர்வுடன் தலையை நிமிர்த்தியபோது செல்வராசனும் ராஜேஸ்வரியும் ரோட்டில் செல்வது தெரிந்தது. கையில் சூட்கேசுடன் டக், டக் என்ற ஒலியுடன் கம்பீரமாகச் செல்லும் செல்வராசனையும் அவன் பின்னே குதியுயர்ந்த செருப்பும், குதிரைவால் பின்னலுமாக ஒயிலாக அசைந்து ஒசிந்து செல்லும் ராஜேஸ்வரியையும் பார்த்த சிவலிங்கத்திற்கு நெஞ்சில் வலியெடுத்தது. ஏதோ குற்றம் இழைத்துவிட்டவன் போல் சற்றுத்திரும்பி மனைவியைப் பார்த்தான் அவள் இவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனல் இருவரும் வாய்திறந்துஒருவார்த்தையாயினும் பேசவில்லை.

அந்தப் பாரவண்டி எப்படி அவ்வளவு கெதியாக அந்த மணல் ஒழுங்கையைத் தாண்டி வீட்டை அடைந்தது என்பது அவர்கள் இருவருக்குமே தெரியாத ஒரு புதிர். பாரம் இப்போது வண்டியில்இருந்தால்தானே! அத்தனை பாரமும் இப்போது அவர்கள் உள்ளத்திலல்லவா ஏற்பட்டிருக்கிறது.

0 0 0

மாமர நிழலில் வண்டி பாரம் இறக்கப்படாமலே நின்றது. சிவலிங்கம் துவாய்த்துண்டைத் தலைக்கு இதமாக வைத்துக்கொண்டு வெறும் திண்ணையில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தான். அவன் உள்ளத்திலும்பெரும் பாரம். அவன் கண்கள் மூடியிருந்தனவே தவிர அவன் உறங்கவில்லை; உள்ளம் விழிப்பாக இருக்கும்போது உறக்கத்திற்கு இடமேது? ஏதோ எண்ணப்பிரவாகத்தில் சிக்கி அவன் உள்ளம் அல்லாடிக் கொண்டிருந்தது.

அடுக்களையில் வட்டிலில் சோறுகறி போட்டுக்கொண்டிருந்த சுகிர்தத்தின்முகமும் சரியாகவில்லை. அவள் முகத்திலும் கவலை ரேகைகள் இழையோடத்தான் செய்தன. ஆனலும் கணவனுக்குச் சாப்பாடு கொடுக்கும் போது தன் உள்ளத்து உணர்ச்சிகளை அவன் அறிந்து கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் சேலைத்தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டுக்கொண்டாள். அடுத்தகணமே வழக்கமான அந்த மலர்ச்சியும் புன்னகையும் அவள் முகத்தில் பாலாடையாகப்படர்ந்தன.

திண்ணையில் களைத்துப் போய்க் குழந்தைபோல் அறிதுயிலில்இருக்கும் அவன் முகத்தைப் பார்த்தபோது அவளுக்கு அவன்மீது பரிவே ஏற்பட்டது. அவனை அப்படியே வாரி எடுத்துத் தன் மடியில் கிடத்தி உறங்கச்செய்யவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அந்தத் துடிப்பில் வயிற்றிலிருக்கும் அந்த ஐந்து மாதச் சிசுகூட ஊர்வதுபோல் ஓர் உணர்வு. அந்த உணர்வில் ஏற்பட்ட ஒருவகைப்போதையில் [illegible] களை ஒருமுறை [illegible] மூடிக்கொண்டாள் அவள்.

தாய்மையின் நுண்ணிய உணர்வுகளில் அதுவும்ஒன்று போலும்.

மாமியார் இருக்கும் பக்கம் ஒருநோட்டம் விட்டாள் சுகிர்தம். அவள் வண்டிக்கு மறுபக்கத்தில் புகையிலை வரிந்துகொண்டிருந்தாள். வட்டிலையும்சோற்றையும் திண்ணையில் வைத்துவிட்டுஅவனருகே அமர்ந்த சுகிர்தம் அவன் தலையைப் பரிவுடன் நீவிவிட்டாள். அறிதுயிலில் இருந்த அவன் சட்டெனறு விழித்துக் கொண்டான். அவன் கண்களில் கண்ணீர் மெல்லிய திரையிட்டிருந்தது. அதை அவள் கவனித்தும் கவனியாததுபோல் - ''என்ன, அதுக்கிடையிலை நித்திரை? சாப்பிட்டுவிட்டு கிடவுங்கோவன்''-என்ருள்.

''வேர்வை உடம்பெல்லாம் பிசுபிசு எண்டு ஒட்டுது, என்னெண்டு இதோடை சாப்பிடுகிறது?''

'பின்னை இந்த வெயில்லை குளிக்கப் போறியளே? வாளிக்கை தண்ணி கிடக்குது, முகம், கால், கையைக் கழுவிவிட்டு வாங்க; பின்னேரம் குளிக்கலாம்.''

அவள் கட்டளைக்கு அவன் பணிந்தான்.

நாடிக்குக் கைகொடுத்த வாறு அவன் முகம் கழுவுவதைப் பார்த்துக்கொண்டிருந்த அவளுக்கு இலேசாகக் கண் கலங்கியது. அந்தச் சுற்றுவட்டாரத்தில் ஜி. சி. ஈ. 'அட்வான்ஸ் லெவல்' பாஸ் பண்ணியது அவன் ஒருவன்தான். அவனிடம் கேட்டுப் படித்த பொடியள் எல்லாம் 'கிளறிக்கல்' அது இது என்று ஒரு கரை சேர்ந்துவிட்டார்கள். அவனும் விண்ணப்பிக்காத வேலையில்லை; தோற்ருத பரீட்சையில்லை. அவனுக்குமட்டுந்தாளு விடிவு இல்லை?

குபுக்கென்று பொங்கிய எண்ணீரைச் சேலைத்தலைப்பால் அவன் அறியாமலே துடைத்துவிட்டுக்கொண்டாள் சுகிர்தம். அவளும் எத்தனையோ இளமைக் கனவுகளையெல்லாம் எண்ணங்களாக்கி மனதில் போட்டு நிரப்பிவைத்திருந்தாள். அத்தனையும் வெறும் கனவுகள் தாளு?

0 0 0

சிவலிங்கம் சாப்பிட்டுவிட்டு எழுந்தான். சுகிர்தம் வட்டிலை எடுத்துக்கொண்டு குடத்தங்கரைக்குச் சென்ருள் கழுவுவதற்காக. அவன் [illegible] வெறும் கத்தரிக்காய்க்குழம்பும், காய்மிளகாய்ச் சம்பலும்தான். என்ருலும் அது அவனுடைய அன்பு மனைவியின் கைப்பாகமல்லவா! சுவைக்காமலா இருக்கும்? வண்டில் இழுத்த களைப்பு வேறு... ஒரு பிடி பிடித்துவிட்டான் இப்போது உண்ட அசதியிஞல் கண்களைச் சற்று மூடவேண்டும்போலிருந்தது அவனுக்கு. திண்ணையில் கிடந்த பாயைக் காலால் தட்டிச் சுருள் விரித்து ஒடிக்களைத்த கரிக்கோச்சிபோல் 'உஸ்' என்று வாயால் ஒலி எழுப்பியவாறு அதில் அமர்ந்தான்.

''ஏன் பிள்ளை, தம்பிக்கு ஒரு காயிதம் வந்துதே, அதை எடுத்துக்குடன்; அந்தத் திருநீற்றுப் பேணிக்குக் கீழே வைச்சிருக்கிறன்''... என்று கூறிய அவன் தாய் ''ஒவ்வொரு நாளுந்தான் அப்பிளிக்கேஷன் அது இது என்று காயிதங்கள்வடுகுது: எப்பதான் கடவுள் என்ரை பிள்ளையைக் கண் திறந்து பார்க்கப்போகிருரோ?''... என்று மனதிற்குள் புழுங்கத்தவறவில்லை.

கடிதத்தை எடுத்துக் கொண்டு அவன் இருந்த திண்ணையில் வந்து அமர்ந்தாள் சுகிர்தம். இப்படி எத்தனை கடித உறைகளை அவள் ஆவலுடன் தபால்காரனிடமிருந்து பெற்றிருக்கிருள்.? அதில் ஒன்ருவது அவர்களின் வாழ்விற்கு விடிவை ஏற்படுத்தக்கூடிய செய்தியைத் தாங்கிவரக்கூடாதா? அத்தனையும் விழல். இதுவும் அந்த வகையில் ஒன்றுதான் போலும்.

மனவிரக்திபாதி. தூக்கக் கிறக்கம் பாதியாக உறையைப் பிரித்துப் படித்த சிவலிங்கத்தின் கண்கள் பளிச்சென்று விரிந்து பிரகாசித்தன; அவனை அறியாமலே உடலில் ஒரு பரபரப்பு. இதயம் இருந்தாற்போல் வேகமாக அடித்துக்கொண்டது. அவன் முகமாற்றத்தைக் கண்ணுற்ற சுகிர்தம், ' என்னத்தான்! என்ன இருக்குது?-'-என்று சற்று ஆவலுடன் நெருங்கி உட்கார்ந்தாள். அவன் திடீரென்று சூழ்நிலையை மறந்தவளுக அவளை இறுகக் கட்டிக் கொண்டான் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பட்டப்பகலில் அதுவும் மாமியாருக்கு முன்னிலையில் அவன் அப்படி நடந்து கொண்டது அவளுக்கு வெட்கமாக இருந்தது.

''சீ...! விடுங்கோ; மாமி பார்க்கப்போரு!''- என்று திமிறித் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்தாள் அவள்.

''சேட்டிபிகேட் 'கோல்' பண்ணியிருக்கிருன்கள்!',

விசுக்கென்று எழுந்தவன் வெறிபிடித்தவன்போல் அவள் கழுத்தை மறுபடியும் கட்டிக்கொண்டு அவள் கன்னத்தில் முத்தமிட்டான். அவளுக்கு மூச்சை அடைத்தது.

இப்பொழுது அவளுக்கு வெட்கத்தைப்பற்றிய எண்ணமேயில்லை.

''அப்பிடி எண்டால்?...''

ஆவலுடன் அவனைக் கேட்டாள்.

''அப்பிடி எண்டால்... நான் கிளறிக்கலிலை எடுபட்டிருக்கிறன்; இரண்டொரு மாதங்களில் உத்தியோகம் கிடைத்துவிடும்!''

அவளுக்கு நா எழவில்லை; அவ்வளவு மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியான சூழ்நிலை வண்டிலிற்கு மறுபக்கத்தில் இருந்த அவன் தாய்க்கும் எப்படியோ மணத்துவிட்டது.

''என்ன பிள்ளை? என்ன காயிதம்?''- என்று ஏழ்மையும் வயோதிகமும் கொடுத்த தடுமாற்றத்துடன் அங்கு வந்தாள் அன்னம்மா. சுயநினைவு வரப்பெற்ற சுகிர்தம் வீட்டுக்குவெளியே ஓடிவந்தாள்.

''அவருக்கு உத்தியோகம் கிடைச்சிருக்கு!''

நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சி கொப்புளிக்கக் கூறிஞள் அவள். மனைவியின் அன்புக்குத் தாய்மையின் அன்பு அப்படி ஒன்றும் குறைந்தது அல்லவே! செய்தி கேட்டதும் அன்னம்மாவின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. மகிழ்ச்சிப் பெருக்கில் இதயமும் தொண்டையும் அடைத்துக்கொள்ளக் கண்ணீராக வெளியேறியது அவள் அன்புப் பிரவாகம். இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கி பனைகளுக்கூடாகத் தெரிந்த பிள்ளையார் கோவிலைப் பார்த்துக் கும்பிட்டாள் அவள்.

அந்த நேரம் பார்த்து வந்தாள் செல்வராசனின் மாமி பார்வதி மூவரும் தத்தம் உணர்ச்சிகளைக் கஷ்டப்பட்டு மறைத்துக்கொண்டனர்

''எடிபிள்ளை சுகிர்தம் என்ரை பொடிச்சியும் மருமேனும் கொழும்பாலை வந்திருக்குதுகள். முட்டை இருந்தா தாவன் மருமேனுக்கு அவிச்சுக் கொடுக்க வேணும்''

''முட்டைஇல்லையெணை!'' சர்வசாதாரணமாகக் கூறிஞள் சுகிர்தம்.

''என்னடி பிள்ளை காத்தாலை நாலு முட்டை கிடக்குது; விக்கப்போறன் எண்டு சொன்னனியெல்லே?''

காலையில், முட்டையை விற்று அரிசி வாங்கப்போவதாக சுகிர்தம் பார்வதியிடம் கூறியது ஏதோ உண்மைதான் என்ருலும் அவள் இப்போது விட்டுக்கொடுக்கத் தயாராகவில்லை,

''ஓமணை காத்தாலை சொன்னனுன்தான்; இப்ப அவருக்கும் முட்டை வேணும், அதுதான்...''- என்று இழுத்த அவள் கணவனை ஓரக்கண்ணல் அர்த்த புஷ்டியுடன் நோக்கிஞள். அப்பபா! அந்தப் பார்வைக்குத்தான் எத்தனை பொருள்? அந்தப் பார்வையின் பொருள் விளங்காத பார்வதி வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தவாறு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள்.

(யாவும் கற்பனை)

(முற்றும்)

### கனிவும் பணிவும்

ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவும் திறமையும் ஒன்றே. அதஞல் அரசியல் ஆத்மீகப்பொருளாதாரத் துறைகளில் ஆணுக்கு நிகராக நிற்க அவளுக்கும் உரிமையுண்டு. ஆணிடம் இல்லாத எத்தனையோ சிறப்புக்கள் பெண்ணுக்குச் சொந்தம். பெரிய தியாகங்களைச் செய்தவண்ணம் சிரிக்கவும் வேதனைகளை மௌனமாகச் சகிக்கவும், கனிவும் பணிவுமாக அன்பு காட்டி ஆதரிக்கவும் பெண்ணல்தான் முடியும். அதஞலேயே தாய்மைப் பொறுப்பை இயற்கை அவளிடம் ஒப்படைத்திருக்கிறது.

—மகாத்மாகாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் ஆறுதற் பரிசுபெற்ற நான்கு ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று.

# சிலுவையும் குத்துவாளும்

மு. கனகராசன்

### காட்சி- 4

நேரம்:- பொழுதுபடும் வேளை.

பாத்திரம்:- யூதாஸ், கீரஸ், மார்த்தா, பீட்டர், ஜான்

(கட்டிலருகே நிற்கிறுன் யூதாஸ்)

யூதாஸ்:- ஐயோ! அவருக்கு மரணதண்டனையா விதித்துவிட்டார்கள்? பிதாவே இதென்ன கொடுமை! மரணதண்டனைக்குரிய தவறேதும் அவர் செய்யவில்லையே! ஒருவரின் போதனைகளுக்கு அவரின் உயிராவிலை? ...அவருக்குச் சாவு வரவேண்டும் என்று அவரைக் காட்டிக கொடுத்தேன்? தெய்வமே! ஐயோ! நான் என்ன செய்துவிட்டேன், ஒரு பாவமுமறியாத அவரைக் கொல்லப்போகின்றுர்களே...? இதற்கென்ன தான் செய்யப் போகின்றேன்? அவரை நான் வஞ்சித்து விட்டேனு?

அவர் என்ன தவறுதான் செய்தார்?... தேவா! ஞானஸ்நானம் கொடுத்தது தவறு? —பிரசங்கங்கள் செய்தது தவறு? —அன்பு செலுத்தினது தவறு?

முடவரை நடக்கப் பண்ணினதற்கும், குருடரைப் பார்க்கச் செய்ததற்கும், ஊமைகளைப் பேசச் செய்ததற்கும் பரிசு அவரின் உயிரைப் பிடுங்குவதுதானு?

ஓய்வுநாளில் நன்மை செய்வதும், உயிரைக் காப்பதும், ஆசாரத்திற்கு எதிரானதில்லை என்று சொன்னுல், —இறைவனுக்குக் காணிக்கை செலுத்துவதைக் காட்டிலும் தன் சகோதரனுடன் ஒற்றுமையாக இணங்கி வாழ்வதே மேலானது என்று சொன்னுல் —அது மனிதனுக்கெதிரான கருத்துக்களல்லவே!

இறைவன் மலைமீதும், மாளிகைகளிலுமில்லை; உள்ளத்திலேயே இருக்கின்றுன் என்றது உண்மையே தானே. மனிதன் அப்பத்தினுல் மட்டும் உயிர் வாழ்வதில்லை. இறைவனிடமிருந்து புறப்படும் ஒவ்வொரு சொல்லும் மனிதனை வாழவைக்கிறது என்ற போதனை பொய்யாக இருக்கமுடியாதே.

போதகரே! சொத்துக்களை வைத்துக்கொள்ளவேண்டாம் என்றீர். இலாபநோக்குடன் எதையும் செய்ய வேண்டாம் என்றீர்; இலவசமாகக் கிடைத்ததை இலவசமாக வழங்கச் சொன்னீர்... எல்லாம் ஏழைகளை நேசித்ததனுல்தான் என்று எனக்குத் தெரியும்.

இவ்வளவு நல்லவரான உம்மையா கொல்லப் போகின்றுர்கள்? ஐயையோ! அதற்குக் காரணம்... ...... சாதாரண தண்டனைதான் கிடைக்கும் என்றல்லவா காட்டிக் கொடுத்தன். அந்த அதிகாரிகள் என்னை வஞ்சித்து விட்டார்களே!

நல்லவர்களாக இருக்கவேண்டுமானுல் குழந்தைகளைப்போலத் தம்மைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்றதற்குக் கோபப்பட்ட பிரபுக்களுக்கா நான் உடந்தையானேன்... அம்மம்மா! —(அலறித்துடிக்கும் அவன் கட்டிலில் அமருகிறுன்.— (கீரஸ் வருகிறுன்)

கீரஸ்:- என்னப்பா யூதாஸ்... என்ன—என்ன நடந்தது?

யூதா:- கீரஸ்! கடவுளின் சட்டதிட்டங்களைக் காப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பரிசேயரும், அதிகாரிகளும் என்னை ஏமாற்றி விட்டார்களே!

கீரஸ்:- என்ன சொல்கிறுய் யூதாஸ்?

யூதாஸ்:- அவருக்கு மரணதண்டனை விதித்துவிட்டார்களாமே.

யூதா:- (சிரிப்புடன்) ஆமாம்! சிலுவையிலே அறையப்போகிறுர்கள். —அரண்மனையில் நடந்தது தெரியுமா?... அங்கே அவருக்கு 'முடி' என்று முட்களைத் தலையில் வைத்து மூங்கில்தடியைச் செங்கோலெனப் பிடிக்கச் சொல்லி என்ன பாடுபடுத்தினுர்கள் என்கிறுய்...

யூதா:- (காதுகளைப் பொத்திக்கொண்டு) —நான் பாவி நான் பாவி! பெரிய பாவம் செய்துவிட்டேன்.

கீரஸ்:- என்ன யூதாஸ்நீ...? அவரைக் காட்டிக் கொடுத்ததையா பாவம் என்கிறுய்? கடவுளின் குமாரன் என்று அவர் கூறியதைப்போன்ற பாவம் இருக்கமுடியாதே!

யூதா:- இல்லை; அவர் தேவகுமாரன்தான். அவர் மூன்றும்நாள் உயிர்த்தெழுவதாக பொயினிசியாவில் எங்களுக்குச் சொன்னுர்.

கீரஸ்:- அவர் பெரிய மந்திரவாதி யூதாஸ்.

யூதா:- இதோபார் கீரஸ். உடலோடு ஒட்டிய பிறப்பைவிட ஆன்மாவோடு தொடர்புள்ள தெய்வீகப் பிறப்பும் இருக்கிறதென அவர் அப்போஸ்தலர்களுக்குச் சொல்லியிருக்கிறுர்.

கீரஸ்:- எல்லாம் பித்தலாட்டம்,

யூதாஸ்:- கீரஸ்! காற்று வீசுவதை நீ அறிகிறுயல்லவா?

கீரஸ்:- காற்றுக்கும், கடவுளுக்கும் என்னப்பா...

யூதா:- அந்தக்காற்று எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்பதை உன்னுல் கூறமுடியுமா!

கீரஸ்:- (மௌனம்)

யூதா:- அப்படித்தான்! அவர் சொன்னதன் விளக்கம் இதுதான்!... நான்தான் பாவியானேன். ...எல்லாம் பொருளாசையால்! ஆமாம் பொருளாசையால். மனிதனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்ய முயலக்கூடாது என்றதன் ,உண்மையை இப்போதுதான் உணருகின்றேன்... என் பணமோகத்தால்...... பணமோகத்தால்...

கீரஸ்:- யூதாஸ்! வீணுகக் கலங்காதே. இல்லாததையெல்லாம் கற்பனை பண்ணுகிறுய்.

யூதா:- இல்லை இல்லை நான் பாவி பாவி...

கீரஸ்:- பொன்னும், பொருளும் கிடைக்கவேண்டுமென்பதற்காக மாமன்னர்களே பல கொலைகளைச் செய்திருக்கிறுர்கள்...

யூதா:- கீரஸ்! என்னைத் தனிமையில் விடு.— என் னிதயத்தை ஏதோ ஒன்று குடைந்து அறுக்கிறது.— எனக்குத் தெரியும் நான் காட்டிக்கொடுத்தது தவறு தான்.

கீரஸ்:- யூதாஸ் இதோ பார்...

யூதா:- (தன் அங்கியிலிருந்த ஒரு பையை எடுத்து) எல்லாம் இந்த வெள்ளிகளால்தானே— (அள்ளி எடுத்து) இந்த வெள்ளிகளால்... ஆம்; இவை எனக்கு வேண்டாம் வேண்டாம் (வீசிஎறிகிறுன்)

கீரஸ்:- உனக்கென்ன பைத்தியமா?

யூதாஸ்:- ஆமாம்! பைத்தியமேதான். ஒரேயொருவரால் மட்டுமே குணப்படுத்தக்கூடிய பைத்தியம். அவரையும் இனி நான் காணமுடியாது... இல்லை இல்லை அவரைக் காப்பாற்றுவேன்... காப்பாற்றியே தீருவேன்... ஆமாம்...ஆமாம்... ஆமாம்...

(சிதறிய நாணயங்களைப் பொறுக்கி எடுக்கிறுன்)

(பொறுக்கிக்கொண்டு வெளியே போகப் புறப்படுகிறுன்)

கீரஸ்:- எங்கே போகிறுய்?

யூதா:- அரண்மனைக்கு... இந்த லஞ்சத்தைத் தந்துதானே அவரைப் பிடித்தார்கள்... இதையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டு அவரை விடுவிக்கப் போகிறேன்.

(யூதாஸ் வெளியேறி ஓடுகிறுன்)

(கீரஸின்மனைவி மார்த்தா உள்ளேயிருந்து விளக்கை ஏந்தியபடி வருகிறுள். அதைச் சுவரிலிருந்த ஒரு ஆணியிற் கொழுவுகிறுள்)

மார்:- என்ன நடந்தது. ஏனிப்படி ஓடுகிறுர்.

கீரஸ்:- நேற்றுக் காட்டிக்கொடுத்துவிட்டு, இப்போது காப்பாற்றப்போகிறேனென ஓடுகிறுன்.

மார்த்:- (அவசரமாக) நீங்களும் போங்களேன்.

கீரஸ்:- (சிரிக்கிறுன்) நானு?

மார்த்:- பணத்துக்காகத்தானே காட்டிக் கொடுத்திருக்கிறுர்... பார்த்தீர்களா எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் தொடக்கத்தைவிட அதன் முடிவுதான் என்றுமே நல்லதாயிருக்கும்.

கீரஸ்:- ம்! அந்த வெள்ளிகளில் நான் சொஞ்சம் கேட்கலாம் என்றிருந்தேன். சேச்சே எல்லாம் குட்டிச் சுவராகப் போய்விட்டதே...

(மார்த்தா உள்ளே போகிறுள்)

(நேரம் செல்கிறது)

(கீரஸ் யோசனையிலாழ்கிறுன்)

(சிறிதுநேரத்தில் சோர்ந்துபோய் யூதாஸ்வருகிறுன்) (வந்தவன் தொப்பென்று கட்டிலில் விழுகிறுன்).

கீரஸ்: (பதற்றத்துடன்) யூதாஸ்! என்னப்பா ... ... (ஒரு குடுவையிலிருந்த தண்ணீரை எடுத்துக் கொடுக்கிறுன். அவன் அதைத் தள்ளிவிடுகிறுன்,)

கீரஸ்: வெள்ளிகளைக் கொடுத்துவிட்டாயா?

யூதாஸ்: இதோ அந்தப் பாவச்சுமை. (வெள்ளிப் பையை வீசி எறிகிறுன்)—

(தொடரும்)

உருவகக்கதை

## உயர்ந்ததெது?

—இ. கிறிஸ்ரி—

அது ஓர் ஜவுளிக்கடை. அங்கே விதம் விதமான புடவைகள் நிறைந்து கிடந்தன.

அக்கடையின் ஓர் அலுமாரியில்...

இருபுடவைகள், ஒன்று ''நைலெக்ஸ்''; மற்றது கைத்தறிப்புடவை.

''நைலெக்''ஸின் ஏளனச் சிரிப்பு கைத்தறியைக் கவர்ந்திழுத்தது.

''ஏன் சிரிக்கிறுய்?''

''ஒன்றுமில்லை. நான் இன்று வெளியேறப்போகிறேன். யாரோ ''ஓடர்'' கொடுத்திருக்கிறுர்களாம். நான்தான் உயர்ந்தஜாதியாம். நீ இருக்கிறுய் பார்! ஊம்... என்ன இருந்தாலும் நீ உள்நாட்டான் நானே வெளிநாட்டான். அதனுல் தான் எனக்கு இத்தகைய மதிப்பு; புரிகிறதா?'' என்றது நைலெக்ஸ்.

''சும்மாயிரு, உன் முட்டாள் பேச்சினுல் என் கோபத்தைக் கிளப்பாதே!'' என்றது கைத்தறித்துணி.

மணி மூன்று. யாரோ இரு பெண்மணிகள்காரில்இறங்கி வந்தனர்.

''என்னம்மா வேண்டும்'' கடைக்காரச் சிப்பந்தியின் கேள்வியிது.

''நாங்கள் ஒரு சீலைக்கு ஓடர் கொடுத்திருந்தோம். அதைப் பார்க்கவேண்டும்.''

''வாங்கம்மா '

தொழிலாளி இருவரையும் அலுமாரிக்கு முன் அழைத்துச் சென்றுன்.

'அம்மா, எனக்கு அந்தப் புடவைதான் பிடிச்சிருக்கு. இந்தப்புடவை பிடிக்கவில்லை.''- இளம்பெண் தன் தாயிடம் சொன்னுள்.

''என்னவோ உன் விருப்பமம்மா'' என்றுள் தாய்.

''நைலெக்ஸ்'' போட்டால் உடம்பு தெரியும் கைத்தறியில் அது கிடையாது. அதுதான் உயர்ந்த ஜாதி'' எனக்கூறி கைத்தறிப்புடவையைக் கையில் எடுத்தாள்.

கைத்தறி ''நைலெக்''ஸைப் பார்த்து புன்முறுவல் செய்தது. ''மனிதன் ஆடை அணிவது எதற்காக? இப்பொழுதாவது அது உனக்குத் தெரிகிறதா?'' என்று கேட்பதுபோலிருந்தது அந்த முறுவல்.


''சிறுதுளி பெருவெள்ளம்'' ''நூற்றுக்கு மேல் ஊற்று''

**தம்பி அன் கோ.,**

நவீன சேமிப்பில்
ரூபா நூறு நூருகச் சேர்த்து
ரூபா ஆயிரம் ஆயிரமாக எடுக்கலாம்.

**மாதம் ரூபா 100 வீதம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 12 மாதம் | ரூபா 1200/- | கட்டினுல் | ரூ. 1280/- | வாங்கலாம் |
| 24 ,, | ரூபா 2400/- | ,, | ரூ. 2670/- | ,, |
| 36 ,, | ரூபா 3600/- | ,, | ரூ. 4200/- | ,, |
| 48 ,, | ரூபா 4800/- | ,, | ரூ. 5950/- | ,, |
| 60 ,, | ரூபா 6000/- | ,, | ரூ. 7600/- | ,, |
| 72 ,, | ரூபா 7200/- | ,, | ரூ. 9500/- | ,, |
| 75 ,, | ரூபா 7500/- | ,, | ரூ. 10000/- | ,, |

முக்கியகுறிப்பு:
இச்சேமிப்பில் எப்பொழுதும் சேரலாம்
எப்பொழுதும் லாபத்துடன் எடுக்கலாம்

மறுவிபரங்கட்கு:

**தம்பி அன் கோ.,**

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் ஆனந்தன் நிகழ்த்திய அற்புதம்!



'மேனகை' குமாரி பத்மினி நடராசா!

## கலை அரங்கம்

தயாரிப்பு: மேகலா

விசுவாமித்திரன்இயற்றும் தவத்தின் அகோரம் தேவ லோகத்தையே தகிக்கின்றது. தவத்தைக் கலைப்பதற்காக தேவ நர்த்தகி மேனகையை பூவுலகுக்கனுப்புகிறான் இந்திரன். ரூபலாவண்யமிக்க அவளது ஆடலின் தாக்கத்தினால் தவம் கலைந்து எழுகிறான் மாமுனிவன். தன் முன்னால் நர்த்தனம்புரியும் அந்த மேனகையை முதலில் கோபமாகவும் பின்னர் சாந்தமாகவும, கடைசியில் பணிவாகவும் வேண்டுகிறான் அங்கிருந்து அகன்றுவிடும்படி. ஆனால் அவள் அழகு அவனது கண்களை மயக்கி இழுக்கின்றது. எங்கோ லயித்திருந்த மனம் அவளை அவள் பின்னாலேயே துரத்துகின்றது...

விசுவாமித்திரன் கோலத்தில் கலைஞர் வேல் ஆனந்தன் தவம் கலைந்து எழும் காட்சி உண்மையாகவே பார்த்து ரசிக்கவேண்டிய காட்சி அவருடைய கண்கள், இமைகள், புருவங்கள் யாவுமே பேசுகின்றன.

### அற்புதம் அற்புதம்

சினிமாவில் பல கோணங்களில் காமிராவை வைத்து படத்தையெடுத்து திரையில் காட்டும்போது நாம் அற்புதம் என்று வியக்கின்றோம். அதே அற்புதத்தை மேடையில் வேல்ஆனந்தன் நிகழ்த்திக் காட்டுகிறார். ஆனால் மக்கள ஆதரவைத் தான் எதிர்பார்த்த அளவைக்காணோம்.

கடந்தவாரம் நோன்மதி தினத்துக்கு முந்திய தினம் யாழ் நகரமண்டபத்தில்கலைஞர் வேல்ஆனந்தன்குழுவினரின்இந்த நாட்டிய நிகழ்ச்சி இடம்பெற்றது. கட்டணம் வசூலிக்கப்பட்டதினாலோ என்னவோ மண்டபத்தில் கதிரைகள் பல வெறுமனே கிடந்தன. இலவசக்கலை நிகழ்ச்சிகளுக்குத் திரண்டு

## நல்லதோர் நாட்டிய விழா!

வந்து பேராதரவுதரத்தவறுக நமது மக்கள் இம்மாதிரி நல்ல நிகழ்ச்சிகளுக்கு போதிய அளவு ஆதரவு தராமல்போவது கவலைக்குரியது. போதியளவு விளம்பரம் செய்யப்படவில்லையென்பது இதற்குக் காரணமாக இருக்குமா? என்றாலும் அன்று அந்த நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் மன நிறைவுடன் திரும்பியிருப்பார்கள் என்பது மட்டும் திண்ணம்.

குமாரி சாந்தகௌரி நடராஜாவின் அஞ்சலியுடன் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. கைலாயத்தாண்டவம், அலாரிப்பு, ஸ்வரஜதி, ராதா கிருஷ்ண நடனம் என்று நிகழ்ச்சிகள் விறுவிறென்று இடம்பெற்றன.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததுபோல் இறுதியில் இடம்பெற்ற 'இந்திரன் ஆணை' நாட்டிய நாடகம் அமைந்தது

விஸ்வாமித்திரனாக கலைஞர் வேல்ஆனந்தனும், மேனகையாக குமாரி பத்மினி நடராஜாவும், இந்திரனாக செல்வி ஜயராணி கணேசனும், இந்திராணியாக செல்வி நளினி இராசதுரையும், தேவமாதாக செல்வி ஸ்ரீதேவி ஜீவரத்தினமும் பாத்திரமேற்றிருந்தனர். இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட செல்விகள் கலைஞர்கள் அனைவருமேதத் தம்க்குரிய பாத்திரத்தை நன்கு உணர்ந்து சிறப்பாக நடித்தனர். மேனகாவாக வந்த செல்வி குமாரி பத்மினி நடராசாவிடம் அந்தப் பாத்திரத்துக்குரிய அழகும் நளினமும், திறமையும் காணப்பட்டன. அதுபோலவே இந்திரனாக வந்த செல்வி ஜெயராணி கணேசன், தாம் ஏற்ற ஆண் பாத்திரத்துக்கேற்ப சிறப்பாக நடித்தார். இடுப்பை வளைத்துக்கொண்டு அவர் அபிநயம் பிடிப்பது பார்ப்பதற்கு ரசிப்பாக இருந்தது.

### விஜயா சகோதரிகள்

விஜயா சகோதரிகள் விஜயமலர், விஜயமாலினி ஆகியவர்களின் ராதாகிருஷ்ண நடனத்தையும் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. மொத்தத்தில் அன்று வேல் ஆனந்தன் குழுவினர் அளித்த நாட்டிய நிகழ்ச்சி சிறப்பாகவே அமைந்தது எனலாம். பின்னணி இசைக் குழுவினருக்கும் 'அப்ளாஸ்' போடத்தான் வேண்டும். இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் உள்ளூர் கவிஞர்கள் இ.நாகராசனின் பல பாடல்களும், திரு. சொக்கனின் பாடலும் சிறந்த முறையில் இசைஅமைக்கப்பட்டு பயன் படுத்தப் பட்டதாகும்.

கோபிநாத்தின் மாணவர் என்று கூறிக்கொள்வதில் வேல் ஆனந்தனுக்கு பெருமையுண்டு! அதுபோலவே வேல்ஆனந்தனின் மாணவர்கள் என்று கூறிக் கொள்வதில் அவரிடம் பயிலும் மாணவர்கள் பெருமை கொள்ளலாம்.

— பேனா

## அனுபவம் வாய்ந்த நடிகர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள்!

நாடக விமர்சனம்:

### ஔவையார்

மனோவேகமாக வளர்ந்து வடும் சினிமாவுடன் நாடகம் போட்டி போடக்கூடிய வகையில் நாடகஉலகமும் தனக்கென்த்தனி இடம் பெற்று முன்னேறிக் கொண்டுவருகிறது. ஆபாசக் காட்சிகளுடன் கூடிய சினிமாப்படம் எவ்வளவுதான் வந்தபோதும், சரித்திர சம்பந்தமான கதைகள் நாடகமாக நடித்துக்காட்டக்கூடிய வகையில் எம் மத்தியில் நல்ல அனுபவம் வாய்ந்தநடிகர்கள் இருக்கிறார்கள் என்பதற்கோர் எடுத்துக்காட்டாக தாவடி சிறி கணேச மத்திய சனசமூகநிலையப் புனருத்தாரண நிதிக்காக சுண்ணாகம் இளம்தென்றல் நாடக மன்றத்தினரின் 'ஔவையார்' என்னும்சரித்திர நாடகம் மேடையேற்றப்பட்டது.

நாடகத்தின் கதையைப் பற்றி இங்கு விமர்சிக்கவேண்டியது அவ்வளவு முக்கியமல்ல. ஆனால் நாடகத்தில் ஆங்காங்கே கையாளப்பட்டிருக்கும் வசனங்களை விமர்சிக்காமல் இருக்கமுடியாது. அத்தனைக்கும் காரணம் அவ்வசனங்கள் ரசிகர்களின் உள்ளங்களை என்றென்றும் விட்டகலாதவையாகும்.

நடிப்பைப் பொறுத்த வரையில் குறைகூறுவதற்கு எதுவும் இல்லையாயினும், ''ஓகோ'' என்று சொல்லும் அளவுக்கு இல்லை. அரசனாக நடித்தவே. நவரத்தினம் தனது பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து நடித்ததும் அல்லாமல் அரசியுடன் காதல் காட்சியில் நடித்து உண்மையாகவே ரசிகர்களை மெய் மறக்கச் செய்துவிட்டார்.

அரசியாக நடித்த ச. கணேசு உண்மையில் பெண்ணாக மாறி அவர்களுக்கு இருக்கவேண்டிய முகபாவங்களுடன் காதல்காட்சியில் நடித்தது மட்டுமின்றி நடனமாடவும் முயற்சித்திருக்கிறார். அதைப்பாராட்டாமல் இருக்கமுடியாது. ஔவையாராக நடித்த எஸ். புலேந்திரன் உண்மையாக ஔவையாராக மாற ஏனோ மறுத்துவிட்டார் அவரது சாரீரம் அவ்வளவு நன்றாக ஈடுபடவில்லை கஷ்டமான பாத்திரமாகையால் தன்னால் முடிந்ததை ஓரளவு திறம்படச் செய்துள்ளார் என்று கூறலாம்.

அரசசபையில் அ. சுந்தரலிங்கம், வே. கர்ணன் ஆகியோர்களின் நடனம் ரசிகர்களின் பாராட்டைப்பெற்றதுமல்லாமல் நாடகத்தின் வெற்றிக்கு ஓர் உரைகல்லாகவும் அமைந்துவிட்டது:

ஒலி அமைப்பு நன்றாக இருந்தாலும் ஒளி அமைப்பில் அக்கறை எடுக்கவில்லை. காட்சிகள் மாறுதல் நீண்ட நேரத்தை எடுத்து ரசிகர்களின் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது. என்றாலும் நாடகத்தை டைரக்ட் செய்த க. நவரத்தினம் நல்ல முயற்சி எடுத்திருக்கிறார் என்று கூறலாம். ஒப்பனை மிகவும் நேர்த்தியாக இருந்தது. ஆனால் அவ்வளவு மோசமான நாகரிகமான உடைகள்அணிந்திருக்கத்தேவையில்லை. இக்குறைகளை நீக்கிப் புதுமெருகுடன் தயாரிக்க அவர்கள் முயற்சிக்கவேண்டும்.

ஒரு கண்ணோட்டம்:

## வாக்குறுதி

''கலை தெய்வீகமானது. நர்த்ததாண்டவனும், நம்பிரானால் உண்டாயதெனும் கவின்கலை கைவரப்பெற்ற கலைஞரும் தெய்வீகர். அவர்தம் கருத்தும் வாக்கும், செயலும் தெய்வீகப்பேறுள்ளவை அவை உறுதிவாய்ந்தவை''- இக்கருத்தைக் கொண்டு உருவாகியுள்ளது இக்கலையம்சம்.

அண்மையில் யாழ்ப்பாணம் கவின்கலைவளர்ச்சி மன்றத்தினரால் யாழ். நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு, கலையுயர்வுகாட்டி ரசிகரின் பாராட்டைப் பெற்றது, கே. கே. வி யின் ''வாக்குறுதி'' நாடகம். டி. எஸ். கோதண்டராமனின் கதைக்கு கவிஞர் இ. நாகராஜன் அழகாக வசனம் எழுதியிருந்தார். ஈழத்தின் முதல்தர தமிழ்நாடகக்கலைஞர்களால் உருப்பெற்ற இக் கவின்படைப்புகலாரசிகரின் பாராட்டை பெருமளவில் சுவீகரித்தது எனலாம்.

பண்பான நடிப்புடன் தமக்கே உரித்தானபாணியில், கலாசிரியராகவே மேடையில் தோன்றி, இனிய பாடலால் ரசிகரை மிகவும் கவர்ந்துவிட்டார் வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி.

கம்பீரமான தோற்றம். உரித்தான கர்ஜனை. மன்

(11-ம் பக்கம் பார்க்க)

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக

தங்க, வைரநகைகள்

வியாபாரத்தில்

முன்னணியில் நிற்கும்

சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்.

ராணி ஆபரண மாளிகை

224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நவீன - நாகரிக அமைப்புள்ள

தங்கவைர நகைகளைப் பெறுவதற்கு

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

மனேஜர்: A. KARAPUTUGALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சகல நாடுகளும் சம உரிமையோடு
# பிரதிநிதித்துவ அரசாங்கத்தில் கல

வகுப்புப்பற்றுடனே அல்லது மாகாணப் பற்றுடனே காந்தியடிகள் எதனையும் நோக்குகிறாரில்லை. இந்தியாவின் நாகரிக பரம்பரை, உலகத்தின் கலைஞானப் பெருக்கத்திற்கு உதவிசெய்யக்கூடும் என்று அவர் நம்புகிறார். தளர்ந்து வீழ்ந்து போயிருக்கும், இந்தியாவினால் உலகத்திற்கு நம்பிக்கையை ஊட்ட முடியாது. விழிப்போடு கூடிய சுதந்திர இந்தியாதான், பெருமூச்சு விட்டுக்கொண்டு புலம்பிக்கொண்டிருக்கிற உலகத்திற்கு உதவிசெய்ய முடியும்; நியாயம், சமாதானம், ஒழுங்கு என்பவைகளைப் பிரிட்டிஷார் எந்தத் திருஷ்டியோடு பார்க்கிறார்களோ அதுவிஷயத்தில் அவர்கள் உண்மையிலேயே அக்கறை கொண்டவர்களாயிருப்பின், ஆக்கிரமிப்பு எண்ணங்கொண்ட வல்லரசுகளை அடக்கி இப்பொழுதுள்ள நிலைமையை அப்படியே பத்திரப்படுத்தி வைப்பதுமட்டும் போதாதென்று காந்தியடிகள் வற்புறுத்துகின்றார். நமது லட்சியங்களுக்கு விரோதமானதொரு நிலைமை ஏற்பட்டிருந்தால் அதனைச் சீர்திருத்த மறுப்பது ஒருவகை பலாத்காரந்தான். இதனைச் சாத்வீக பலாத்காரம் என்று சொல்லலாம். சுதந்திரம், நீதி இவைகளின் விஷயத்தில் நமக்குள்ள அபிமானமானது, இந்தச் சாத்வீக பலாத்காரத்தையும் புறக்கணித்து விடுகிறது. ‘சுதந்திரம், நீதி முதலிய சக்திகளோடு சேரவாரும்’ என்று உலகத்தாரைப் பார்த்து நாம் அழைப்பதற்கு முன்னர், எந்த ஏகாதிபத்தியங்கள், பேராசை, கொடுமை, மனிதனைப்பற்றிய கேவல மனப்பான்மை ஆகியஇவைகளைக்கொண்டு அமைக்கப்பட்டனவோ, அந்த ஏகாதிபத்தியங்களை நாம் மாற்றியமைக்கவேண்டும். பலாத்காரம் ஒன்று செயல்புரிந்து கொண்டிருக்கும்; அல்லது செயலற்றிருக்கும். தற்போதைய ஆக்கிரமிப்பு வல்லரசுகள், பலாத்காரச் செயல்கள் புரிவதில் இறங்கியிருக்கின்றன. ஏகாதிபத்திய வல்லரசுகளோ, தங்களுடைய பழைய பலாத்காரச் செயல்களின்மூலம் கிடைத்த அநீதமான சாதகங்களைத் தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமென்று பிடிவாதங் காட்டுகின்றன. இவைகளும் - இந்த ஏகாதிபத்திய வல்லரசுகளும் - பலாத்காரக் குற்றத்திற்குட்பட்டவைதான். சுதந்திரம்ஜனநாயகம் என்பவைகளுக்கு இவைகளும் விரோதிகள்தான். இந்தவிஷயத்தில் நாம் நாணயமாக நடந்துகொள்ளாதவரையில், மேம்பட்டதோர் உலக ஒழுங்கை ஸ்தாபிக்கமுடியாது. அதுவரையில் உலகம் நிச்சயமற்ற ஒரு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும்; யுத்தங்களோ இருந்துகொண்டுதானிருக்கும். பிரிட்டிஷாருடைய யோக்கியப் பொறுப்புக்குப் பரிசோதனை என்னவென்றால் இந்தியாவுக்குச் சுயஆட்சி வழங்குவதுதான். காந்தியடிகள் இதற்காக பிரதி திங்கட்கிழமைதோறும் இருபத்து நான்கு மணிநேரம் உபவாசம் இருந்தார். ஏன்? சுயாட்சி கிடைக்கவில்லையென்பதைக் காட்டுவதற்குத்தான். ஆயினும் பொறுமையிழந்திருந்த இந்தியாவை நிதானிக்கும்படி செய்திருந்த சக்தி அவருடைய சக்தியே. ஜனங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கும், ஆளும் வர்க்கத்தினராகிய பிரிட்டிஷாருடைய பிடிவாதத்திற்கும் மத்தியில் அவர் இருந்தார். இந்தியாவில் சமாதானம் நிலவுகிறதென்று சொன்னால் அதற்கு அவருடைய மகத்தான சக்திதான் காரணம்

## ஒத்துழையாமை இயக்க ஆரம்பம்

காந்தியடிகள், தென்னாபிரிக்காவில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முடித்துக்கொண்டு இங்கிலாந்தில் வந்திறங்கிய சமயத்தில் ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தம் தொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டார். யுத்தம் முடிகிறவரையில் போர் முனையிலுள்ள வைத்தியப் படையில் சேர்ந்து சேவை செய்ய, எவ்வித நிபந்தனையும் கோராமல் தாம் பதிவு செய்துகொள்ள விரும்புவதாக அதிகாரிகளுக்கு அறிவித்தார். அதிகாரிகளும் அவருடைய சேவையை ஏற்றுக்கொண்டார்கள், உடனே அவர், ஓர் இந்தியப் படையில் ஒரு பொறுப்புள்ள பதவிக்கு நியமிக்கப்பட்டார். இங்ஙனம் அவர் வேலை செய்துகொண்டிருக்கையில் திறந்த வெளியில் அதிக நேரம் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவருக்கு இருதயநோய் ஏற்பட்டது. உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடுமென்று சொன்னார்கள். உடனே உஷ்ணப் பிரதேசமாகிய இந்தியாவுக்குச் செல்லவேண்டுமென்று வைத்தியர்கள் உத்தரவு போட்டார்கள். அப்படியே அவர் இந்தியாவுக்கு வந்து சேனைக்கு ஆள் திரட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். இஃது அவருடைய நண்பர்களில் பலருக்கே திகைப்பை உண்டுபண்ணிவிட்டது. யுத்தம் முடிந்த பிறகு இந்தியர்களின் ஏகமனதான எதிர்ப்புக்கிடையே ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தேசமே அதிர்ச்சியடையும்படியாக பஞ்சாப் மாகாணத்தில் ராணுவச் சட்டத்தின்கீழ் அநேக காரியங்கள் நடைபெற்றன. பஞ்சாப் குழப்பத்தைப்பற்றி காங்கிரஸ் மகாசபை ஒரு விசாரணை நடத்தியது. அந்த அறிக்கையைத் தயாரித்தவர்களில் காந்தியடிகளும் ஒருவர். இவையெல்லாம் நடைபெற்றிருந்தும் 1919-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமிருதாசில் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்த அறிக்கையையேற்றுக்கொண்டு அதனைச் சட்ட ரீதியாக வேலை செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். இதற்குப் பிறகு 1920-ம் ஆண்டு ஹட்டர் கமிஷன் அறிக்கை வெளியாயிற்று. இது உத்தியோகஸ்தர்களுடைய செயலைக் கண்டிப்பதில் தடுமாற்றத்தைக் காட்டியது. தளபதி டயர் என்பவனுடைய செயலைக் கண்டிக்க லார்டுசபை மறு

## காந்தி திங்கள் தோறும்
## உபவாசமிருந்தது ஏன்

டாக்டர். எஸ். ராதாகிருஷ்ண



த்துவிட்டது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் காந்தியடிகள், தமது வாழ்க்கையிலேயே மிகவும் முக்கியமானதென்று கருதப்படக்கூடிய ஒரு தீர்மானத்திற்கு வந்தார். அதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தல் என்பது. 1920-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காங்கிரஸ் மகாசபை பலாத்காரமற்ற ஒத்துழையா இயக்கத்தை நடத்தவேண்டுமென்ற முடிவுக்கு வந்து அப்படியே ஒரு தீர்மானமும் நிறைவேற்றியது.

இந்தச் சந்தா
1920-ம் ஆண்டு
மாதம் முதல்
காந்தியடிகள் ர
நிதிக்குஎழுதிய ஒ
லிருந்து சில வா
எடுத்துக் கா
பொருத்தமா யி

அதில் அவர் எடு
‘தாங்கள் உத்
தர்களுடைய செய
க்க் கண்டித்து வி
பொ மைக்கே ஒ
மன்னித்துவிட்டது
டர் மாண்டேகுவி
கையும், இவை
மேலாக பஞ்சாப்
களைப்பற்றி இங்
குடிகொண்டிருக்கு
மையும், லார்ட் ச
இந்தியர்களுடைய
சியைக் கேவலமா
விட்டதும், இவை
சேர்ந்து ஏகாதிபத்
எதிர்கால வாழ்வு

# செயற்கை முறையின் பெருவிந்தை;
# கால் நடைகள் கலப்பினமாகின்றன

[கால்நடைகளை செயற்கை முறையில் சினைப்படுத்தும் இலங்கையிலுள்ள 38 நிலையங்களிலும் திருநெல்வேலி நிலையமே முதலிடம் வகிக்கின்றது. இதற்குக் காரணம் முழுநேரவேலை, துரித பிரச்சாரம், தீவிரகவனம் ஆகியவைதான் என்று கூறுகின்றனர் இங்கு கடமையாற்றும் டாக்டர்கள்.]

சொன்னவர்: டாக்டர் ஜே. எஸ். ஏ. ஜெயரத்தினம்


உங்கள் வீட்டுப் பசுமாடு வாலை அடிக்கடி உயர்த்துகின்றதா? முதுகை வளைக்கின்றதா? மற்றைய பசுக்களைத் தன்மீது தாவவிடுகின்றதா? அல்லது மற்றைய பசுக்களின் மேல் தானே தாவுகின்றதா? குறி இதழ்கள் வீங்கியும் அதைப்புடனும் இருக்கின்றனவா? அப்படியானால் ஆச்சரியப்படாதீர்கள். உங்கள் வீட்டுப் பசு காளையைத்தான் தேடுகின்றது.

அதற்காக நீங்கள் உங்கள் பசுவைக் காளையிடம் கொண்டுசெல்லத்தேவையே இல்லை. பசு வேட்கையுறும் காலங்களில் அவற்றைக் காளையின் ‘விந்து’ மூலம் செயற்கை முறையில் சினைப்படுத்தலாம்.

இத்தகவல்களைத்தெரிவித்தவர் அரசினர் மிருகவைத்தியரான திரு. ஜே. எஸ். ஏ. ஜெயரத்தினம். இவர்தான் திருநெல்வேலியிலுள்ள கால்நடைகள் செயற்கைமுறையில் சினைப்படுத்தும்பிரதான நிலையத்தின் அரசினர் மிருகவைத்தியராகக் கடமை யாற்றுகின்றார்.

## யாழ்ப்பாணத்தின்சாதனை

பேட்டி: எஸ். திருச்செல்வம்



இந்த நிலையத்துக்கு இன்னுள்ள 38 செயற்கைமுறை [illegible] சினைப்படுத்தும் நிலையங் பெயருமுண்டு. இலங்கையி களில் இங்குதான் மிகக்கூடு

தலான கால்நடைகள் வருடம்தோறும் சினைப்படுத்தப் படுகின்றன.

கடந்தவாரம் இங்கு சென்று டாக்டர் ஜெயரத்தினத்தை நான் பேட்டி கண்டபோது அவர் தெரிவித்த பல சுவையான தகவல்களை இங்கு தருகின்றேன்.

இந்த நிலையம் 1957-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்குஐரோப்பாவைச் சேர்ந்த ‘ஜேர்ஸி’ என்ற மேல்நாட்டு காளைகள் ஏழும், இந்திய நாட்டைச் சேர்ந்த ‘தார்பக்கர்’ என்ற கீழ்நாட்டு மாடு ஒன்றும் இருக்கின்றன. இவைகளிலிருந்து ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்றுநாட்களிலும் விந்து சேகரிக்கப்பட்டு குளிரூட்டியில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

இக்காளைகளின் விந்து மூலம் இந்த நிலையத்தில் தினசரி காலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை பசுக்கள் செயற்கைமுறையில் சினைப்படுத்தப்படுகின்றன.

இங்கு உதவிடாக்டர்களாக கே. நடராஜா, ஆர். திருநாவுக்கரசு, ரி. தேவதாசன் ஆகிய மூவர் கடமையாற்றுகின்றார்கள். மானிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, வலந்தலை, சுளிபுரம், பண்டத்தரிப்பு, அளவெட்டி, மாவிட்டபுரம் ஆகிய 9 சினைப்படுத்தும் நிலையங்களுக்கும் இவர்கள் தினசரி விஜயம் செய்து அங்கு பசுக்களை செயற்கை

முறையில் சினைப்ப
றார்கள்.
கொல்லங்கலட்
பாய், சுன்ன
இடங்களிலும்
தும் நிலையங்க
திறக்கப் படவிரு
அத்துடன் திருெ
லுள்ள காளைகள்
சேகரிக்கப்படும்
வவுனியா, சா
பருத்தித்துறை ஆ
களுக்கும் அனுப
கள் செய்யப்ப
இதற்காக இ
‘தர்பக்கர்’ இந்தி
இங்கு வந்து சேர
றன.
பசு வேட்கையு
களில் மட்டுமே
முறையில் சி
லாம். ஒரு தட
படுத்த ஒரு ரூபா
தான் அறவிடப்ப
21 நாட்களுக்கு
சினைப்படா விட்
னர் இரண்டாம் த
அது சினைப்படுத்
இரண்டாம் தட
சதம் அறவிடப்
வும் குறைந்த
தையே அரசாங்
ளிடமிருந்து அ
றது.
திருநெல்வேலி
மற்றைய 9 சினை
நிலையங்களிலும்
டணத்துடன், மி
யரின் போக்குவ
யாணக்கட்டணமு
அறவிடப்படுகின்
வண்டியில்
மைலுக்கு 50
மோட்டார் கை
சென்றால் மைலு
மும் அறவிடப்ப
செயற்கை மு
சினைப்படுத்தப்ப
16 நாட்களுக்கும்
களுககுமிடையில்
வும் வேட்கையு
இரண்டரை மா
பின்னர் இலவச
சோதனை செய்ய
கால்நடைச்
தும் பகுதியின்
டைரக்டர் டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாடு பொதுஜனப்
# ல்க்கவேண்டும்'

சந்தர்ப்பத்தில்,
ஆண்டு ஆகஸ்ட்
முதல் தேதியிட்டு
டிகள் ராஜப்பிரதி
ழுதிய ஒருகடிதத்தி
சில வாக்கியங்களை
வுக் காட்டுவது
தமாயிருக்கும்.

## றும்
## ன்?

ருஷ்ணன்

வர் எழுதுகிறார்:-
ள் உத்தியோகஸ்
டைய செயலே லேசா
டித்துவிட்டதும்,
மக்கேல் ஒட்வியரை
துவிட்டதும், மிஸ்
ண்டேகுவின் அறிக
இவைகளுக்கு
பஞ்சாப் சம்பவங்
ற்றி இங்கிலாந்தில்
ண்டிருக்கும் அறியா
லார்ட் சபையினர்
களுடைய உணர்ச்
கேவலமாக மதித்து
ம், இவையெல்லாம்
ஏகாதிபத்தியத்தின்
வாழ்வு எப்படியி
ருக்குமோவென்ற சந்தே
கத்தை எனக்குக் கிளப்பி
விட்டிடுக்கின்றன; தற்
போதைய அரசாங்கத்தி
னின்று என்னை அடியோடு
பிரித்துவிட்டிருக்கின்றன;
இதுவரையில் அரசாங்கத்
தோடு எவ்வளவுமனப்பூர்வ
மாக நான்ஒத்துழைத்து வந்
தேனோ, அந்தமாதிரியான
ஒத்துழைப்பை இனியும்
நான் அளிக்கமுடியாதபடி
செய்துவிட்டிருக்கின்றன.

### பஞ்சாப் சம்பவங்கள்

மனுக்கள் போடுதல், பேட்
டிகள் காணுதல் முதலிய
வற்றின்மூலமாக கிளர்ச்சி
செய்யும் முறையைக் கை
யாண்டு, தற்போதைய இந்
தியா அரசாங்கம் இருப்ப
தைப்போல் பொதுஜன நன்
மையைப் பராமுகப்படுத்
திக்கொண்டு நடந்துவருகிற
ஓர் அரசாங்கத்தை அசைத்
துக்கொடுத்து தன் செய
லுக்கு இஷ்டு இரக்கப்படு
மாறு செய்யமுடியாது என்
பதுவே என்னுடைய தாழ்
மையான அபிப்பிராயம்.
ஐரோப்பிய நாடுகளில், கிலா
பத் அநீதி, பஞ்சாப் படு
கொலை போன்ற சம்பவங்
கள் நடைபெற்றால் அவை
விஷயத்தில் அங்குள்ள ஜனங்
கள் தங்களுடைய கண்ட
னத்தை எந்தமுறையில்
தெரிவித்துக்கொள்வார்
கள்? ரத்தப்புரட்சியின்மூல
மாகத்தான்: தேசிய அழிவு
ஏற்படாவண்ணம் எவ்வகை
யாலும் எதிர்த்துப்போராடி
யிருப்பார்கள். இந்தியாவில்
பாதிப்பேர் பலாத்காரத்
தின் மூலம் தங்கள் எதிர்ப்
பைக்காட்ட முடியாத அவ்வ
ளவு பலஹீனர்களாயிருக்கி
றார்கள். மற்றப்பாதிப்பேர்
அதற்குச் சம்மதியாதவர்க
ளாகவிருக்கின்றனர். இதனு
லேயே ஒத்துழையாமைஎன்
கிற பரிகார முறையை நான்
காட்டியிருக்கிறேன். இதன்
படி அரசாங்கத்தோடு ஒத்
துழைக்க விருப்பமில்லாத
வர்கள் பலாத்காரமின்றி
யும் ஒழுங்காகவும் தங்கள்
இயக்கத்தை நடத்திக்
கொண்டு போவார்களானல்
அரசாங்கமானது தன்போக்
கினின்று பின்னடையும்;
தான் இழைத்த அநீதிக
ளுக்குப் பரிகாரம்தேடும்.
எந்த அளவுக்கு ஜனங்களை
என்னோடு சேர்த்து அழைத்
துச்செல்லும் சக்தி எனக்கி
ருக்கிறதோ அந்த அள
வுக்கு ஒத்துழையா இயக்
கத்தை நான் நடத்துவேன்.
அப்படியிருந்தாலும், தாங்
கள் நீதி வழங்கும் மார்க்
கத்தைத் தேடுவீர்கள் என்ற
நம்பிக்கையையும் நான்
இழந்துவிடவில்லை.'

பிரிட்டிஷ்ஆட்சிமுறையின்
கீழ் இந்தியா 'தன்து செல்
வத்தை இழந்துவிட்டது;
அதன்மனிதத்தன்மைபோய்
விட்டது; கடவுள் தன்மை
அகன்றுவிட்டது; அதனு
டைய புதல்வர்கள் தங்க
ளைத்தாங்களே காத்துக்
கொள்ளும் சக்தியையிழந்து
விட்டார்கள்'' என்றெல்
லாம் காந்தியடிகள் கருதினு
ராயினும் இந்த நிலைமையை
மாற்றமுடியும் என்று அவர்
நம்பினர். பிரிட்டிஷ் ஆதிக்
கத்துக்குவிரோதமாக அவர்
கிளர்ச்சி செய்தார். ஆனல்
பிரிட்டிஷ் தொடர்பு வேண்
டாமென்று அவர்கூறவில்லை.
ஒத்துழையாமை இயக்கம்
உச்சநிலையைஅடைந்திருந்த
காலத்தில் பிரிட்டனுடைய
தொடர்பை அடியோடு
அறுத்துக்கொள்ள வேண்டு
மென்று கிளம்பிய இயக்
கத்தை அவர் தீவிரமாக
எதிர்த்துப் போராடினர்.

சிநேகப்பான்மையுடனும்
சம அந்தஸ்துடனும் பிரிட்
டிஷாருடன் சேர்ந்து வேலை
செய்ய அவர் எப்பொழு
தும் சித்தமாயிருந்தார்.
ஆனல்பிரிட்டிஷார் இந்தியா
விஷயத்தில், 'தாங்கள் இந்
தியாவைக் காப்பாற்ற வந்
திருக்கிறவர்கள்; தாங்கள்
மேலான ஜாதியார்' என்ற
மனப்பான்மையுடன்நடந்து
கொண்டுவருகிறவரை யில்
நிலைமையில் எந்த விதமான
அபிவிருத்தியும் ஏற்படா
தென்பது அவருடையஉறுதி
யான அபிப்பிராயம். ஆத்
திரப்படக்கூடிய அநேக சந்
தர்ப்பங்களில்கூட அவர்
பிரிட்டிஷாரிடம் துவேஷம்
காண்பிக்கவில்லை. ''இந்தியா
வுக்கு நன்மை செய்யவேண்
டும் என்பதற்காக இங்கி
லாந்தையோ, ஜேர்மனி
யையோ நான் தொந்தரவு
படுத்தமாட்டேன்'' என்பது
அவர் வாசகம்.

அமிர்தசரஸ் (பஞ்சாப்)
படுகொலை, அல்லது
சைமன் கமிஷன் நியமனம்
போன்ற சில முட்டாள்
தனமான சந்தர்ப்பப்
பொருத்தமில்லாத காரியங்
கள் நடைபெற்ற காலத்
தில் இந்திய பொறுமையை
இழந்துவிட்டது; தன்னடக்
கத்தைத்தள்ளி வைத்துவிட்
டது: கோபாக்கினிமயமாகி
விட்டது. அப்பொழுது
காந்தியடிகள் இந்த அதி
ருப்தி, இந்தக் கோபம் முத
லியவற்றை அன்பு சமரசம்
போன்ற ஒழுங்கான வழியில்
திருப்பிவிட்டார். வட்ட
மேஜை மகாநாட்டின்போது
பிரிட்டிஷாரிடத்தில் தமக்
குள்ள நம்பிக்கையையும்
மானிட சமுதாயத்தின்
நலத்திற்கு மேலும்மேலும்
பாடுபடவேண்டுமென்பதில்
தமக்குள்ளஆவலையும் காந்தி
யடிகள் தெரிவித்துக்கொண்
டார். வட்டமேஜை மகா
நாடுகளின் விளைவாக மாகா
ணங்களுக்குஓரளவு பொறுப்
பாட்சிமுறை வழங்கப்பட்
டது. ஜனங்களிற் பெரும்
பாலோர் இதனை ஏற்று
நடத்த மறுத்துவிட்டார்கள்
இப்படிப்பட்ட சந்தர்ப்பத்
திலும் காந்தியடிகள் சீர்
திருத்தத் திட்டத்தை
அதற்கு என்ன மதிப்
புண்டோ அந்த அளவுக்கு
நடத்திப் பார்க்குமாறு காங்
கிரஸைத் தூண்டினர். அவ
ருடைய முக்கிய நோக்கம்
பிரிட்டனேடுசமாதானமாக
இருக்கவேண்டுமென்பது
தான். ஆனல் அந்தச்சமா
தானம் சுதந்திரத்தையும்
சம நட்பையும் அடிப்படை
யாகக் கொண்டிருக்கவேண்
டுமென்று அவர் கூறுகிறார்.

### பொதுஜனப் பிரதிநிதித்துவ அரசாங்கம்

இந்தியாவின் பிரதிநிதி
யாக அன்று எவர் இருந்
தாரோ, அவரிடத்தில் அந்
தத் தலைவரிடத்தில் ஜாதித்
துவேஷமில்லை; தனிப்பட்ட
குரோதமில்லை தமது ஜனங்
கள் பலாத்காரத்தில்இறங்கி
விடாதபடி அவர் தடுத்து
வைத்திருந்தார். பொது
ஜனப் பிரதிநிதித்துவம்
வாய்ந்த பிரிட்டிஷ் அரசாங்
கத்தாரிடமிருந்து இந்தியா
வைப்பிரிக்கவேண்டுமென்று
அவர் விரும்பவில்லை. ஆனல்
எல்லா நாடுகளும் சம உரி
மையோடு அதில்-அந்தப்
பொதுஜனப் பிரதிநிதித்து
வம் வாய்ந்த அரசாங்கத்
தில் - கலந்துகொள்வதாயி
ருக்கவேண்டுமென்று அவர்
கூறினர். 1939-ம் ஆண்டு
மே மாதம் 19-ம் தேதி
கனடா தேசத்துப் பார்லி
மென்டின் மன்னர்பிரான்
நிகழ்த்திய ஒருசொற்பொழி
வில் பின்வரும் வாசகங்கள்
காணப்படுகின்றன: ''ஒரே
மாதிரியான அரசாங்க
முறையை அனுஷ்டிக்கிற
சமாதானம், சுதந்திரம்
ஆகிய லட்சியங்களிடத்தில்
ஒரேமாதிரியான பற்றுதலை
யுடைய ராஜமகுடத்துக்கு
தங்கள் ராஜபக்தியைச்
செலுத்துகிற பலநாடுகள்
சம உரிமையோடுகலந்திருப்
பதுவே இன்று பிரிட்டிஷ்
ஏகாதிபத்தியமாகப் பரிண
மித்திருக்கிறது.'' இந்த
'ஒரேமாதிரியான அரசாங்க
முறையை அந்தியா விஷயத்
திலும் அனுட்டிக்கவேண்டு
மென்பது காந்தியடிகளின்
கோரிக்கை. இந்தியர்கள்
தங்களுடைய வீட்டில் தாங்
கள் எஜமானர்களாயிருக்க
உரிமையுடையவர்கள்என்று
அவர் கூறினர் இப்படி
அவர் சொல்வது அநியாய
முமல்ல, அதர்மமுமல்ல. நல்
லெண்ணத்தோடுகூடிய மனி
தர்களின் ஒத்துழைப்பைப்
பெற்று இரு நாடுகளுக்கும்
உள்ள சிநேக மனப்பான்
மையை அபிவிருத்திசெய்ய
அவர் முனைந்து வெற்றி
பெற்றிருக்கிறார்

(முற்றும்)

---

ல் சினைப்படுத்துகின்
லங்கலட்டி, கோப்
சுன்னுகம் ஆகிய
ளிலும் சினைப்படுத்
நிலையங்க விரைவில்
படவிருக்கின்றன.
ன் திருநெல்வேலியி
காளைகளிடமிருந்து
கப்படும் 'விந்து'
ா, சாவகச்சேரி,
த்துறை ஆகிய இடங்
ம் அனுப்ப ஒழுங்கு
செய்யப்பட்டுள்ளன.
ாக இன்னமும் 3
கர்' இந்தியமாடுகள்
வந்து சேரவிருக்கின்
வட்கையுறும் காலங்
ட்டுமே செயற்கை
யில் சினைப்படுத்த
ஒரு தடவை சினைப்
ஒரு ரூபா மட்டுமே
றவிடப்படுகின்றது.
கஞளுக்குள் அது
டாவிட்டால் பின்
ண்டாம் தடவையும்
சினைப்படுத்தப்படும்.
டாம் தடவைக்கு 50
அறவிடப்படும். மிக
குறைந்த கட்டணத்
அரசாங்கம் மக்க
ந்து அறவிடுகின்
நல்வேலி தவிர்ந்த
ய 9 சினைப்படுத்தும்
களிலும் இந்தக்கட்
துடன், மிருகவைத்தி
போக்குவரத்துப்பிர
கட்டணமும்சேர்த்து
ப்படுகின்றது. 'ஜீப்'
யில் சென்றால்
கு 50 சதமும்,
டார் சைக்கிளில்
ல் மைலுக்கு 30 சத
றவிடப்படுகின்றது.
ற்கை முறையில்
டுத்தப்பட்ட பசு
ட்களுக்கும் 21 நாட்
மிடையில் திரும்ப
வட்கையுறுவிட்டால்
டரை மாதத்திற்குப்
இலவசமாகப் பரி
ன செய்யப்படும்
நடைச் சினைப்படுத்
பகுதியின் மேலதிக
டர் டாக்டர் ஏ
பண்டாரநாயக்காவும்,
இதற்குப்பொறுப்பாகவிருக்
கும் திரு. கே. பாலச்சந்திர
னும் செயற்கைமுறைச்
சினைப்படுத்தலை நாடு முழுவ
தும் விரிவுபடுத்த முன்நின்று
உழைக்கிறார்கள்.

திருநெல்வேலியிலுள்ள
நிலையத்தில் 1957-ம் ஆண்
டில் 339 கால்நடைகளும்,
1958-ல் 581 கால்நடைக
ளும், 1959-ல் 702 கால்
நடைகளும், 1960-ல் 878
கால்நடைகளும், 1961-ல்
1198 கால்நடைகளும்,
1962-ல் 1456 கால்நடைக
ளும், 1963-ல் 1623 கால்
நடைகளும், 1964-ல் 1735
கால்நடைகளும், 1965-ல்
1859 கால்நடைகளும்,
1966-ல் 2315 கால்நடைக
ளும், 1967-ல் 3480 கால்
நடைகளும் 1968-ல் 3468
கால்நடைகளும் செயற்கை
முறையில் சினைப்படுத்தப்
பட்டுள்ளன.

1969-ம் ஆண்டுக்கான
மதிப்பீடு 2750 கால்நடை
கள் இருந்தபோதும் சுமார்
3600 பசுக்கள் இங்கு செய
ற்கை முறையில் சினைப்படுத்
தப்பட்டுள்ளன. இத்
தொகை இலங்கையிலுள்ள
38 நிலையங்களிலும் மிகக்
கூடுதலாகவிருப்பதாகவும்
திருநெல்வேலியே இதில்
முதலிடம் வகிப்பதாகவும்
டாக்டர் ஜெயரத்தினம்
புள்ளிவிபரங்கள் மூலம் சுட்
டிக்காட்டினர்.

இங்குள்ள 8 மாடுகளையும்
கண்காணிக்க மூன்று ஊழி
யர்கள் கடமையாற்றுகின்
றார்கள். மாதம் ஒன்றுக்கு
இவைகளைப் பராமரிக்க
சுமார் 1000 ரூபாவரை
செலவாகின்றது. ஒரு 'ஜீப்'
வண்டியும் ஒரு மோட்டார்
சைக்கிளும் இங்கு உள்ளன.
இன்னமும் கூடிய வாகன
வசதியிருந்தால் மேலும் பல
சினைப்படுத்தும் நிலையங்
களைத் திறந்து செயற்கை
முறைச்சினைப்படுத்தலை
விஸ்தரிக்கலாம் என இங்
குள்ள டாக்டர்கள் நினைக்
கிறார்கள்.

மாடுகளுககு உணவாக
'கினி' என்ற ஒருவகைப்
புல் வளர்க்கப்படுகின்றது
இப்போது 'நேப்பிய' என்ற
புல்லையும் இங்கு வளர்ப்ப
தோடு இதே இனப் புல்லைப்
பரீட்சார்த்தமாக மானிப்
பாய், அளவெட்டி, சுழிபுரம்
ஆகிய இடங்களிலும் இவர்
கள் வளர்க்கத் தொடங்கி
யுள்ளார்கள்.

முழுநேர வேலை. துரித
பிரசாரம், தீவிர கவனம்,
இவைகளால்தான் திருநெல்
வேலி சினைப்படுத்தும் நிலை
யம் நாடெங்கிலுமுள்ள 38
நிலையங்களிலும் முதலிடம்
வகிப்பதாக டாக்டர் ஜெய
ரத்தினமும் சகடாகடர்
களும் மகிழ்ச்சியுடனும்
பெருமையுடனும் தெரிவித்
தார்கள், ஜேர்சி' என்ற மேல்
நாட்டுக்காளையின்விந்து இங்
குள்ள நம்நாட்டு பசுக்களுக்
குச் செயற்கைமூலம் சினைப்
படுத்துவதாகவும் 'தார்பக்
கர்' என்ற இந்திய நாட்டுக்
காளையின் விந்து நம்நாட்
டிலுள்ள மேல் இனப் பசுக்
களுக்குசெயற்கைமூலம்சினை
ப்படுத்துவதாகவும் இதனல்
இங்குள்ள சகல மாடுகளை
யும் 10 வருடத்துக்குள் கல
ப்பு இனமாக ஆக்கிவிடலாம்
என்றும் பேட்டியின் முடி
வில் டாக்டர் ஜெயரத்தினம்
குறிப்பிட்டார்.

இப்போது சில வாரங்க
ளாக இங்கு ஆடுகளும்
செயற்கைமூலம் சினைப்படுத்
தப்படுகின்றன. சுவிட்சர்
லாந்தைச்சேர்ந்த 'சனல்'
என்ற இரண்டுஆடுகள்இதற்
காக இங்கு வளர்க்கப்படு
கின்றன.

ஒருஆடு சினைப்படுத்த 50
சதம் அறவிடப்படுகின்றது.
இந்திய இனத்தைச் சேர்ந்த
'ஜமுனபாரி' ஆடுகள் இர
ண்டு விரைவில் இங்கு வந்து
சேரவிருக்கின்றன.
இன்னுஞ் சில ஆண்டுகளில்
ஆடுகளைச் செயற்கைமூலம்
சினைப்படுத்தலையும் நன்கு
விரிவுபடுத்த முடியும் என்று
இங்குள்ள டாக்டர்கள் நம்
பிக்கை கொண்டுள்ளார்கள்.

---

# கண்சாள் காண்மின்களோ!

கடல் கடைந்தபோது
தோன்றிய திரையும் நுரை
யும் மாருமல் இப்போது
தான்கடல்கடைந்ததுபோல்
தோன்றுகிறதே! உலகு
அளக்குங்கால் வைத்தஅடிச்
சுவடு மாருமல் இதோ
வாமனன் மண் என்னும்படி
பூமியைப் பார்த்தால்
தோன்றுகிறதே! இதெல்
லாம் எப்போ நிகழ்ந்தது?
நாஞென்றும் அறிகிலேனே.
அதனை நேரில் அனுபவிக்கும்
பாக்கியம் பெற்றிலேனே
என்கிறார் பொய்கை ஆழ்
வார்.

என்று கடல் கடைந்த
தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை உணரேன்
நான்-அன்ற
தடைத்துடைத்துக்
கண்படுத்த ஆழி-இது நீ
படைத்திடந்துண்டு
மிழ்ந்த பார்

### பசுந்துளிர்

பூமியைச் சூழ்ந்த சமுத்
திரமோ நீ அடைத்து
உடைத்து கண்துயின்ற
ஆழி. பூமியோ நீ படைத்து
இடந்து உண்டு உமிழ்ந்த
பார். ஏகனாய் அநேகனாய்
ஒன்றாய் பலவாய் எல்லா
மாய் இப்பிரபஞ்சத்தை
நீயே ஆட்டி அசைக்கின்
றாய். நீ கடல் கடைந்ததை
யும் உலகளந்ததையும்கடல்
மேல் அணைகட்டியதையும்
அலைகடலில் பள்ளிகொண்
டதையும், யசோதரைக்கு
உன் வாய்க்குள்ளே பிரபஞ்
சத்தைக் காட்டியதையும்
ஏதொன்றையும் நான்கண்டு
களித்திலனே-என்று ஏங்குகி
றார்.

இன்றைய விஞ்ஞான உல
கப் பிரமாக்கள் சந்திர
மண்டலம் கண்ட கதையும்
கூட நம்மைப் பொறுத்த
மட்டில் இப்படியாகத்
தானே ஆகிவிட்டது. இது
அவர்களது காலம், விஞ்
ஞான யுகம். விண்வெளியில்
இரண்டரைலட்சம் மைல்
தாண்டிப்போய் சந்திரமண்
டலத்தில் கொடி நாட்டி
வந்ததாகச் சொல்கிறார்கள்.
அதையெல்லாம் உடனுக்
குடனே படம்பிடித்துக்
கூடக் காண்பித்தார்கள்.
ஆனல் அது ஒன்றையும்
நேரில் பார்த்து அனுபவிக்
கும் பாக்கியம் நமக்குகிட்
டவில்லையே. இதெல்லாம்
எப்போது நிகழ்ந்தது என
ஆழ்வார் அதிசயிப்பது
போல நாமும் கேட்டு அதி
சயிக்கும் படியாகத்தானே
சந்திரன் நேற்றும் இன்றும்
ஒரு மாறுதலுமின்றித்
தோன்றுகிறது. வழமை
போல் கடல் பொங்குகிறது,
அல்லி மலர்கிறது காதலி
யின் முகத்தில்பொன்னொளி
வீசுகிறது. ஔவைப்பாட்டி
ஒரு முயலுடனே இன்னமும்
அங்கு காணப்படுகிறாள்.
நமது கண்களோஎழிபிதுங்க
என்றைக்கும்போல் சந்தி
ரனை ஏறிட்டு நோக்கி எட்
டாப் பொருளுக்காகஏங்கிய
படி இருக்கின்றன.

ஃ

பழையநாளில் சொல்லப்
பட்ட 'யோசனை தூரம்'
எவ்வளவு தெரியுமா? கால்
மைல். இராமன் நூறு
யோசனை தூரமாகவிருந்த
கடலைக் கடப்பதற்குத்தான்
ஆயிரம் யோசனை செய்து
முடிவில் இரு கரைகளையும்
இணைத்துப்பாலம் அமைக்க
வானரசேனையை ஏவினு
ராம். இராவண சங்காரத்
தின் பின் அவ்வழியே திரும்
பிய போது இக்கடலணையை
அழித்துவிட்டார்களாம்.

உண்பது நாழி உடுப்பது
நான்குமுழம் நினைந்தெண்
ணுவதோ எண்பது கோடி-
என்று ஔவை பாடியகோடி
எதைக்குறிக்கும்? எண்பது
கோடி யோசனைகளா அல்
லது...எண்பது கோடி மைல்
தூரமா?

ஃ

மூக்குக்கண்ணுடியை 'உத
விக் கண்கள்' என்று குறிப்
பிட்டு தி. ஜ. ர. ஒருசமயம்
ஒரு நல்ல கட்டுரை எழுதி
யிருந்தார். மூக்குக் கண்ணு
டிக்குப்பின் தோன்றியபடம்
பிடிக்கும் கருவியை எப்படிப்
பெயரிட்டு அழைக்கலாம்.
சந்திரனை நோக்கிய நம்மிரு
விழிகளையும் பெயர்த்
தெடுத்துச் செல்வதுபோல்
விண்வெளியில் லட்சம்,
கோடி, மைல் கடந்துபோய்
காட்சி இன்பம் அளிக்கும்

### மணிப்புறவம்

இதனையும் உதவிக்கண்கள்
எனலாமா? அல்லது
'உலகின் கண்கள்' என
லாமா? அல்லது சந்தி
ரனை நோக்கி விஞ்ஞானமனி
தன் நீண்டகாலமாக
வளைத்த வில் புருவத்திலி
ருந்து ஏவப்பட்ட வேல்விழி,
நீள்விழி என்பதா? கயல்
விழி, மலர்விழி, மான்விழி
என்றெல்லாம் என்ன அழ
காகச் சொன்னர்கள்பழைய
நாளில்!

ஒளி, சுவை, நாற்றம்,
ஊறு, ஓசை என்று நமக்
குள்ள ஐம்புலக் கவர்ச்சி
களிலே ஒளிப்புலனுன இந்
தக் கண்களுக்குத்தான்
என்ன சக்தி! ஒரு பொடு
ளைப் பார்த்தமாத்திரத்தே

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பர் கவிவிருந்து

—ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான்

விரைந்து வந்து சீதையை மணம் செய்துகொள் என்று மதில்கொடிகள் மகிழ்ந்து வரவேற்க, ராமன், தம்பியோடும் முனிவரோடும் நகரத்திற்குள் பிரவேசிக்கிருன். கோட்டை வாசல் வழியாக உள்ளே போனதும் அழகு வேலைப்பாடுகளும் நிரம்பியஎத்தனையோ மாடமாளிகைகளைப் பார்க்கிருர்கள். அந்த உப்பரிகை வீடுகளின் மேலேதான் எத்தனை மணிக்கொடிகள் வரிசைவரிசையாகக் காற்றிலே உல்லாசமாக ஆடுகின்றன. ஆனுல் இந்தக் கொடிகள் கைநீட்டி அழைப்பதுபோல் நீண்டு பறந்துகொண்டிருக்க

## மிதிலைக் காட்சி

வில்லையாம். பலநிறமுள்ள இக்கொடிகள் நாட்டியம் ஆடுவதுபோல் ஆடுகின்றனவாம். வீசுகின்ற காற்றின் போக்கிற்குத்தக்கபடி எல்லாம் மாப்பிள்ளையைக் கண்ட குதூகலந்தான் இந்த ஆட்டங்களுக்குக் காரணமாம்

நிரம்பிய மாடத்(து)
உம்பர்
நிறைமணிக்
கொடிகளெல்லாம்
தரம் பிறர்
இன்மை உன்னித்
தருமமே தூது செல்ல
வரம்பில்பே ரழகினை
மணஞ்செய்வான்
வருகின்ருன் என்று
அரம்பையர்
விசும்பின் ஆடும்
ஆடலின்
ஆடக் கண்டார்

இந்த மணிக்கொடிகள் ஆடுவது தேவரம்பைகள் ஆகாசத்திலே ஆடுவது போல்இருக்கிறதாம். ''சீதையைக் கல்யாணம் செய்து கொள்ள இந்த இராமனைத் தவிரவேறுயார்தான் தரம்? சீதையோ வரம்பில்லாத பேரழகி. ராமனே அந்தமில் பேரழகன்! என்ற ஆனந்தத்திலேதான் தெய்வப் பெண்கள் அப்படி ஆடுகிருர்களோ? என்று தோன்றுகிறதாம். இவ்வளவுதூரம் ஒத்த சிறப்பு வாய்ந்த தலைவன் தலைவியர் மணம்புரிவது தருமம்தானே. உருவிலும் திருவிலும் குலத்திலும் குணத்திலும் என்ன பொருத்தம்! இவர்களே ஒருவரை ஒருவர் காதலித்து மணம் செய்துகொள்ளப் போகிருர்கள் என்பது கம்பன் கதை. இத்தகைய காதல் மணத்தைக் கூட்டி முடிப்பதற்குத் தூதர் என்ருல், தருமமே அந்த ரூபத்தில்போய் மாப்பிள்ளையை அழைத்து வருவதாக நம்பக்கூடுமல்லவா? கோட்டை மதில் கொடிகள் குதூகலமாய் வரவேற்க, மாளிகைக் கொடிகள் வியந்து நடம்புரிய, ராமலட்சுமணரும் விச்வாமித்திரனும் மிதிலை வீதிகளில் பிரவேசிக்கிருர்கள். சூரிய கிரணங்களை மறைத்து வெண்ணிறக் கொடிச்சீலைகள் அதோ பாற்கடல் வானத்திலே!'' என்று சொல்லும்படி உயரப் பறந்துகொண்டிருக்கின்றன. அவை அவ்வளவு மிகுதியாகவும் அடர்த்தியாகவும் வானளாவிப் பறக்கின்றன. வரம்பில் பேரழகியைத் தந்த மிதிலை பொன்மயமான மதில்களால் சூழப்பெற்று, இயற்கை அழகும் செயற்கை அழகும் ஒருங்கே குடிகொள்ளும் ஓர் அபூர்வமான செந்தாமரை மலர் போல்மலர்ச்சிபெற்று விளங்குகிறதாம்.


ஆதரித்(து) அமுதில்
கோல் தோய்த்(து)
அவையவம் அமைக்கும்
தன்மை
யாதெனத் திகைக்கும்
அல்லால்
மதனற்கும் எழுத
ஒண்ணுச்
சீதையைத் தருத லாலே
திருமகள் இருந்த
செய்ய
போதெனப் பொலிந்து
தோன்றும்
பொன்மதில் மிதிலை
புக்கார்

செந்தாமரைப் பெண்ணுகிய சீதாலட்சுமியைத் தந்த மிதிலா பட்டணமும் செந்தாமரைமலர்போல் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பு. சிறிது தூரத்தில் இருந்து பார்க்கும்போதே அந்தப் பொன் மதில்களின் அமைப்பு செந்தாமரையை ஞாபகப்படுத்தி விடுகிறதாம். இந்தகைய அழகு வாய்ந்த நகரத்தில்வசிக்கும் அழகியின் அழகை என்னென்பது? அழகியின் தன்மையை வரையறுத்து உணர்ந்து காதற்கடவுளான மன்மதனும் எழுதிப்பார்க்க முடியாத கட்டழகி என்கிருன் கவிஞன். மன்மதன் அழகைச்சித்தரித்துக் காட்டுவதிலும் மஹா நிபுணனும் அந்த மன்மத ஓவியன் ஒரு சமயம் சீதையின் வடிவத்தைச் சித்திரத்தில் அமைத்துப்பார்க்க விரும்பினுனும். எழுதுகோலை எடுத்துக் கொண்டான். தக்கவர்ணப் பொருள் வேண்டுமே என்று சிந்தித்து தேவாமிர்தமே இந்த அழகைச் சித்தரிப்பதற்குத் தகுதிவாய்ந்தது என்று தீர்மானித்தானும். தேவாமிர்தத்திலே எழுதுகோலைத் தோய்ந்தான். தன் உள்ளத்தில் இருந்த ஓவிய [illegible] வ

தென்று தீர்மானித்தான். எழுதி முடித்தானு சித்திரத்தை. எழுதத்தொடங்கவேயில்லையாம். அந்த அவயயம் ஒன்றைக்கூட சரிவர எழுதமுடியவில்லையாம். அவயவம் அமைக்கும் தன்மை யாது? என்றே திகைத்துப் போய்விட்டானும். திகைத்துத்திகைத்து ஆலோசிக்க ஆலோசிக்க வர்ணமை உணர்ந்து போவதும், மீண்டும் மீண்டும் எழுதுகோலை பக்குவமாக்கிக் கொள்வதுமேவேலையாகப்போய்விட்டதாம். இப்பேர்ப்பட்ட ''வரம்பில் பேரழகி''யைத் தந்த மிதிலா பட்டணத்தில் அழகு நிறைந்த ராஜவீதி வழியே மூவரும் போகிருர்கள். அந்த வீதிகளில் மதோன்மத்தமாகச் செல்லும் யானைகளைப் பார்க்கிருர்கள். ரதங்கள், குதிரைகள் ஓடுவதைப் பார்க்கிருர்கள். பெண்கள் கழற்றி எறிந்த பூமாலைகள் வீதிகளில் வண்டுகள் மொய்க்கக் கிடப்பதையும் பார்த்துக் கொண்டேபோகிருர்கள்.

மங்கையர் அங்கங்களுக்கு
அதீத அழகைக் கொடுப்பது

நவநாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகைமாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்.



தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# 20 வருட சேவைக்குப் பின்

## இருப்பதற்கு ஒரு கதிரையில்லை

இருபதுவருட சேவைக்குப் பின்னும் ஒரு காவலாளருக்கு இருப்பதற்கு ஒரு கதிரைகூட இல்லையென்ருல்...! நமது நாட்டில் தொழிலாளவர்க்கத்துக்கு எவ்வளவு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இதைவிட உயர்ந்த அத்தாட்சி தேவையா?

ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை, உதவியை எதிர்பாராமல் உயிரைப் பணயம் வைத்து சுழியோடி மீட்டுக் கொடுத்த ஒருவருக்குத் தான் இந்த நிலை!

கற்சிலைகளுக்குக்கூட இருப்பதற்கு ஒரு இடம் அமைத்துக் கொடுக்கின்ருன் மனிதன். ஆனுல் உழைப்பு, கடமை, சேவையென்று செயலாற்றும் ஒருவனுக்கு இருப்பதற்கு ஓர் இடம் தேடிக்கொடுக்க மனிதனுக்கு மனம்வருவதில்லை. சிலைகளுக்கு இடம்தேட இப்போது போட்டி ஏற்பட்டுள்ளது. ஆனுல் மனிதனுக்கு மனிதன் உதவி செய்வதற்கு இந்தப் போட்டியேற்படுவதில்லை. இதனுல்தான் இன்று ஆதரவில்லாமல் பலர் அலையவேண்டியுள்ளது

புனிதமயமான கீரிமலை நீரூற்றில் காற்றுப்பட்டு உடலைக் குளிராக்கிக்கொண்டிருந்த சமயத்தில், கரையில் நின்ற சின்னத்துரையின் கதையைக் கேள்விப்பட்டேன். உடலும் உள்ளமும் குளிரவில்லை, கண்கள் தான் நனைந்தன.

காவலாளர் திரு கே. சின்னத்துரை இதுபற்றி எதுவுமே பொருட்படுத்தாது நீரூற்றில் குளிர்மை தேட வந்தவர்களுக்கு ஏதேதோ உதவிகளைச்செய்து கொண்டிருந்தது அவரது சைகைகள்மூலம் தெரியவந்தது.

கீரிமலையில் குளிப்பவர்களெல்லாம் திரு. சின்னத்துரையிடம் தமது உடைகளையும் விலையுயர்ந்த பொருள்களையும் ஒப்படைத்துவிட்டு கேணிக்குள் இறங்கியது தெரிந்தது. இவ்விதம் கழற்றியதுபோக கழற்ற முடியாத சில விலையுயர்ந்த பொருட்கள் கேணிக்குள் குளிப்பவர் அறியாமல் கழன்றுபோய்விடும் வேளையில்தான் உதவி எதிர்பாராமல் சின்னத்துரை நீருள் சுழியோடி பொருள்களை மீட்டு அவர்களிடம் ஒப்படைக்கிருர்.

குளித்துக்கொண்டிருந்த சமயத்தில் ஒருமுறை பெண் ஒருவர் தமது தாலிக்கொடியைத் தொலைத்துவிட்டாராம். தாலிக்கொடியை மீட்டுக்கொடுத்தவர் சின்னத்துரை. இதற்காக அவர் எதுவித சன்மானமும் பெற மறுத்துவிட்டார்.

'பாவம் அந்தப் பெண் றிஜிஸ்தர் செய்து சில நாட்கள்தானிருக்கும்; குளிக்கும் பொழுது 'அவர்' கொடுத்த மோதிரத்தைத் தொலைத்துவிட்டது அந்தப் பெண். பதைத்தபதைப்பு. எல்லா இடமும் தேடிப் பார்த்தபின் என்னிடம் வந்து முறையிட்டார். அதை நான் மீட்டுக்கொடுத்தபோது உண்மையில் எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்தது தெரியுமா? புகழுக்காகவோ பணத்துக்காகவோ நான் இதைச் செய்யவில்லை, பிறர் அவதிப்படும்பொழுது உதவுவதில் ஒரு நிம்மதி, ஒரு மகிழ்ச்சி இருக்குப் பாருங்கோ; தமது நினைவில் நின்ற சம்பவம் ஒன்றுபற்றிஇப்படிக்கூறினுர் சின்னத்துரை.

திரு. சின்னத்துரையைப் பற்றிதடாகத்தினுள்கேள்விப்பட்டநான், அவரைநெருங்கிக் கேட்டபோதே இந்த விஷயங்களைவெளிவிட்டார்.

நீங்கள் கொஞ்சம் கண்டிப்பான மனிதராமே?

அவரது வாட்டசாட்டமான உடலைப் பார்த்துக் கொண்டே கேட்டேன்.

ஒழுங்கீனங்கள் நடைபெறும்போது இப்படிச் சும்மா வெருட்டாவிட்டால் 'அமைதியாக நீராடுவோம்' என்று வருபவர்களது நம்பிக்கை குலைந்துவிடும் என்று கூறிய அவர் இப்போதெல்லாம் கீரிமலையில் சில கட்டுமீறிய செயல்கள் நடைபெறத் தொடங்கியுள்ளதாகக் கவலை தெரிவித்தார். மதுபோதையில் பிறந்த மேனியுடன் குளிக்க முற்படுவது அவர் கூறியவற்றில் ஒன்று.

கீரிமலைக்கேணிக்கு அருகாமையில் ஆயிரக்கணக்கான ரூபா செலவில் அருமையாகக் கட்டப்பட்டிருந்த மண்டபத்தூண் ஒன்றில் சாய்ந்து நின்றுகொண்டிருந்த திரு. சின்னத்துரையைப் ''பார்த்து உங்களுக்கென முன் ஓர் அறை இருந்ததே அது எங்கேயென்று கேட்டேன்.

அவர் பதில்பேசவில்லை. எனக்குப் பக்கத்தில் நின்ற ஒருவர்'' அந்த 'றூம்' இல்லாமல் எங்கள்பாடுதான் இப்போது கஷ்டம். உடைகளைக் கழற்றி வைப்பதற்கும் பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் அந்த 'றூம்' எவ்வளவோ உதவியாக இருந்தது. அதுமட்டுமா எவ்வளவு டின்பௌடரை முடித்திருப்போம் இப்பொழுது அரைகுறைக் குளிப்பாகத்தானிருக்கிறது என்று தனது கவலையை வெளிப்படுத்தினுர்.

அலையின் அசைவுக்கு இசை பாடிய அந்த ரேடியோ?

நானும் சின்னத்துரையும் மண்டபத்தினூடாக மணலைப் பார்த்தோம்.

நன்மைகள் செய்யப்படும்போது தீமைகள் தாமாகவே கலந்துகொள்கின்றனவா? தேவைகளைப் பொருட்படுத்தாமல் சேவையில் ஊறி நிற்கும் அவரை அமைச்சர் டாக்டர் தகாவும் செனட் சபைத்தலைவர் திரு. ஏ. ரத்னுயக்காவும் பாராட்டியுள்ளதை அவர் வைத்திருந்த குறிப்பேட்டிலிருந்து பார்த்தேன். வெளியூர் பிரமுகர்கள் பலரும் அவருக்கு நன்றி எழுதியுள்ளார்கள்.

இராமனின் தம்பி இலக்குமணன் புரிந்த காவலைத்தான் திரு. சின்னத்துரையின் கண்ணியம் மிக்க கடமை எனக்குப் புலப்படுத்தியது.

—கணேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பெற்ற இலக்கியப் போட்டியில் ரூபா 500-00 பரிசு பெற்ற காவியம்.




## வேறு

வாழ இடந்தரு வாயெனக்
கேட்டு வணங்கியவர்
கோழைகள் என்றெமை எண்ணியோர்
கோட்டை யமைத்தாரோ
நாளிகை யொன்றினில் அன்னவர்
கொட்ட மடக்கேனே
ஈழ மணித்திரு நாட்டினை
விட்டுடன் ஓட்டேனே.

சங்கிலி யென்றொரு மன்னவ
னிங்கர சாளுகிற
சங்கதி தன்னை யறிந்திவ
ரின்னு மிருக்காரோ
பொங்குபெருங் கடலுக்கிவ
ரையிரை யாக்கேனே
எங்களை மற்றவர் செம்மறி
யென்றினி யேசாரோ.

பாசி மணித்திர ளாதிய
விற்றிட வந்தவர்கள்
வாசனை மிக்க பொருட்களை
வாங்க விழைந்தவர்கள்
தாசிகள் போலொரு வேடம
திட்டு நடிப்பாரோ
நாசம தாக்கிடு வேனிதை
நஞ்சர்கள் எண்ணுரோ.

கோட்டை களாஇவர் கட்டுவது
அடகொல் லேனே
நாட்டினை விட்டிவ ரோட
விரட்டி யடிக்கேனே
சேட்டை களாவிடு கின்றனர்
கோட்டை யிடிக்கேனே
வீட்டினில் வந்திவை காட்டிட
யானும் விடுவேனே.

கட்டிய கோட்டையும் மற்றுள
யாவும் இடிக்கச்சொல்
மட்டிகள் ஏதும் மறுத்திடில்
நாவை அறுத்துக்கொல்
கட்டளை யிட்டுளேன் இன்றிவை
செய்ய மறுத்தாரேல்
இட்டமுடன் தரை மட்டம
தாக இடிப்பீரே.

என்றிரு தோள்கள் புடைத்திட
ஆங்குள சிலவீரர்
சென்றனர் கோட்டை யிருக்கு
மிடத்தையத் தீயோரை
இன்றிடிப் பீரிதை யென்று
மொழிந்திடு முன்னுலே
நன்றுநன் றென்று நகைத்தனர்
ஏதும் நவிலாதே.

## தமிழ்வாசம் புரியாதார்

கன்னித்தமிழ் மக்கள்தமைக்
காவல்புரி கின்றேன்
மன்னுரிலே யுமையோட்டிய
வணங்கா முடிவேந்தன்
சொன்னுனிதை உடனேயிடித்
தோட்டம் பிடிப்பீரே
மின்னுருடை வாள்வேலுடன்
விளையாடிட வேண்டாம்.

பொருள்வைத்திட வொருகட்டிடம்
போடும்படி மன்னன்
உரிமைதர விலையாஇதை
உடைத்தல் தகும்முறையா
சிரமம்மிக வுற்றிங்கிதைத்
திறமாயமைத் துள்ளோம்
அரசற்கிதைச் சொல்வீர்அவன்
அறிவற்றவோர் ஜடமா.

அடடாஎம தரசைக்குறை
யார்முன்சொல வந்தாய்
மடையாஉன துயிரைக்கொடு
வாளுக்கிரை செய்வேன்
படையேவரு மிங்கேஉமைப்
பழிவாங்கு வோமென்ன
நடடாவெளி யாலேஎன
நகைத்தார் நயவஞ்சர்.

சென்றுர்சில பேரேஎனிற்
தீரம்மிக வுள்ளோர்
கொன்றுர்பல பேரைச்சில
கொடியோர் ஒளித்திட்டார்
இன்றேஇது போதும்இவர்
எடுப்பார்பெரு மோட்டம்
நன்றுய்உணர் வார்கள்யாழ்
நாட்டின்பெரு வீரம்.

என்றுர்தமிழ் வீரர்பரி
ஏறிப்புறப் பட்டார்
ஒன்றுய்வரு கின்றுர்தமிழ்
உணர்ச்சிப் பெருக்கோடே
பின்னுல்ஒரு பேடிகுறி
பீரங்கியால் வைத்தான்
முன்னுல்நடக் கின்றேரது
முதுகாஅதை ஏற்கும்.

வந்தோர்உரை செய்வார்உமை
வணங்கார் பலர்செத்தார்
நொந்தார்சில பேர்கள்எனில்
நுவல்கின்றதை ஒப்பார்
பைந்தார்முடி வேந்தேஇப்
பறங்கிப் பழிகாரர்
நிந்தைபுரி கின்றுர்எதை
நினைத்தோ அறிகில்லோம்.

அவ்வேளையில் வருகின்றனன்
அறிவுள்ள வோரொற்றன்
இவ்வேழையின் வணக்கம்பல
என்றேசில சொல்வான்
ஒவ்வாப்பழி காரர்படை
ஒன்றேடிருக் கின்றுர்
எவ்வேளையும் வருவார்எமக்
கென்றும்பலம் வேண்டும்.

பீரங்கிகள் உள்ளார்வெடி
பிறக்கின்றன அங்கே
தீரம்மிக வில்லார்எனில்
திட்டம்பல வுடையார்
சோரர்சில பேரோஇக்
துரோகஞ் செய்வோர்க்கு
வாரம்புரி கின்றுர்தமிழ்
வாசம்புரி யாதார்.



## "தீண்டாமை" என்ற பாதகம்

### சி. சுப்பிரமணியபாரதி

தேசபக்தியென்பது நம்மவருக்கு அன்னியரால்நேரும் தீண்டாமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாமே செய்துகொள்ளும் அநீதிகளையும் நீக்குமியல்புடையது. எனவே தேசபக்தசிகாமணியாகிய மஹாத்மா காந்தி நாம் இன்னும் ஒன்பது மாஸங்களுக்குள்ளே ஸ்வராஜ்யம் பெற்றுவிடுவோமென்று சொல்லிய போதிலும். அதற்கொரு முக்கியமான நிபந்தனை சொல்வதை நாம் கவனிக்க வேண்டும்.

தம்முடைய "யௌவன இந்தியா" பத்திரிகையில் மஹாத்மா பின்வருமாறெழுதுகிறுர்; -

சிலவகுப்பினரைத் தீண்டாதவராகக் கருதும் பாவத்தை ஹிந்துக்கள் அகற்றினுலன்றி, ஸ்வராஜ்யம் ஒரு வருஷத்திலும் வராது! நூறு வருஷங்களிலும் வராது! ஹிந்து மதத்தின்மீது படிந்திருக்கும் இந்தக் களங்கத்தை நீக்குதல் ஸ்வராஜ்யம் பெறுவதற்கவசியமாகுமென்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் தீபையார் நிறைவேற்றியது நன்றேயாம். மேலும் இந்தத் தீண்டாமையென்பது மதக் கொள்கைகளால் அனுமதிக்கப்பட்டதன்று. இது சாத்தானுடைய தந்திரங்களில் ஒன்று என்கிறுர்.

அடிக்கடி 'காந்திகிஜேய்' என்று ஆரவாரம் செய்யும் நம்மவர்கள் இந்த அம்சத்தில் மஹாத்மா காந்தி சொல்லியிருக்கும் வார்த்தையைக் கவனிப்பார்களென்று நம்புகிறேன். "வினை விதைத்தவன் வினையறுப்பான்". நாம் பலவகைகளிலே துன்பப்பட நேரும்.

—(சுதேசமித்திரன் 14-2-1921 இதழில் வெளிவந்தது.)

## வாக்குறுதி

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

னுகவே நடித்துவிட்டரி. எஸ் லோகநாதன் திறமையாக நடித்தார். மன்னனின் ஆணைக்கும், கலையரசியின் உறுதிக்குமிடையே தத்தளிக்கும் தம் நிலையை நடிப்பால் காட்டி ஆதித்தராக நடித்த எஸ். ரி. அரசுவின் நடிப்பிலோர் சிறப்பு. 'நிர்மலா' படத்தில் கண்ட அதே கோகிலா, "வாக்குறுதி' மூலம் சரித்திரப் படைப்புகளிலும் தம்மால் சளைக்காது நடிக்க முடியுமென்பதை நிரூபித்துவிட்டார். கதைக்கேற்பகோகிலாவின் நடனத்தில் வித்துவம் தெரியவில்லையே!

நாடகத்தை உன்னதமாக தயாரித்துவிட்ட கே.கே.வி. நடிப்பிலும் திறமையைப் புகுத்திஞர். பாத்திரமுணர்ந்து நடித்த நகைச்சுவையரசர் எஸ். வடிவேலு கே. எஸ். லிங்கம் ஆகியோருக்கு நம் பாராட்டுகள்.

— ஸ்ரீதன்


★

## தட்டெழுத்துவீராங்கனை

டைப்பிஸ்டுகளுக்கான உலகப்போட்டி சுவிட்சர்லாந்தில் உள்ள பெரிலே நகரில் நடந்தது. குமாரி பிரிஜிட் கோல்பெக் என்ற பெண்மணி முதலாவதாக வந்து வீராங்கனைப் பட்டம் பெற்றுர். இவர் ஒரு தவறு கூட இல்லாமல் 10 நிமிடங்களில் 5290 எழுத்துக்கள் அடித்தார். கிழக்கு ஜெர்மனியிலுள்ள களிக்கா என்ற நகரத்தைச் சேர்ந்தவர் இந்த வீராங்கனை.

மனித உடலில் இரத்த ஓட்டம் தொடர்ச்சியாக நடைபெறும் ஓர் இயக்கம் என்பதை உலகுக்கு எடுத்துரைத்துப் புகழ்பெற்ற ஹார்வியின் கதை இது.

# வில்லியம் ஹார்வி (1)




வில்லியம் ஹார்வி சிறு வயதுப் பையனாக இருக்கும் போது, கடற்கரைக்குச் சென்று மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டு திரும்புவதை வேடிக்கையோடு பார்த்து மகிழ்வான். சிற்சில சமயங்களில், மீன்களை வெட்டி, அவற்றின் உடற் கூறுபற்றியும் தெரிந்து கொள்ள முயல்வதுண்டு. 1578-ம் ஆண்டு பிறந்து 1657-ம் ஆண்டு மறைந்த வில்லியம் ஹார்வியின் இரத்த ஓட்டம்பற்றிய ஆராய்ச்சிக்கு இந்தப் பால்ய காலப் பழக்கம் வித்திட்டது.

10 வயதில், பாடசாலையில் விடுதியில் தங்கிப் படித்தான் ஹார்வி. அதிகாலை 5 மணிக்கே எழுந்து, பாணைச் சாப்பிட்டு, பியரைக் குடித்துவிட்டு, மாலை வரை படிக்கவேண்டியிருந்தது. ஹார்விக்கு இந்த விடுதி வாழ்க்கை மிகச் சிரமமானதாக இருந்தபோதிலும், கடுமையாகப் படித்து வகுப்பில் முன்னேறி மாணவர்களிடமும், உபாத்தியாயரிடமும் நற்பெயர் பெற்றான்.

தான் ஒரு டாக்டர் ஆக வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்ட ஹார்வி 15-ம் வயதில் உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்குச் சென்று மருத்துவக் கல்வி பயிலுமுன், கலைப் பிரிவில் சேர்ந்து படித்தான். ஓய்வு நேரத்தில் தோழர்களுடன் சேர்ந்து, படகு செலுத்தி மகிழ்ந்தான்.

1599-ம் ஆண்டிலே ஐரோப்பாவில் அப்போதிருந்த மருத்துவக் கல்லூரிகளிலே முன்னணி வகித்த இத்தாலீய நாட்டு பாடுவ பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தான் ஹார்வி. மிகத்திறமைசாலியான ஹார்வி பேரும் புகழும் பெறக்கூடியவகையில் கற்றுத் தேறினான். அந்தக் காலத்தில் வெவ்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையே பெரும் சண்டை நடப்பது வழக்கமாதலால், ஹார்வி தெருவழியே செல்லும்போதெல்லாம் இடையில் வாளோடு செல்வது வழக்கம்.



படுவா பல்கலைக்கழக மருத்துவக்கல்லூரியில்தான் முதன் முதலாக மனித உடலை வெட்டி, உடற் கூறுகளை ஆராயக்கூடிய வாய்ப்பு ஹார்விக்குக் கிடைத்தது. மனித உடலில் இரத்தம் தொடர்ச்சியாக ஓடுகிறது என்ற ஹார்வியின் இரத்த ஓட்ட சித்தாந்தம் முளைவிட்டது இங்கேதான்.

இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து, மனித உடலில் இரத்த ஓட்டம்பற்றிய தனது கருத்தை பூரணமாக வெளிப்படுத்தியபோது, மருத்துவ உலகின் வல்லுனர்கள் பாராட்டி, வரவேற்று, ஏற்றுக்கொண்டனர். ஹார்வி இப்படியாக, இளம்வயதிலேயே மிகப் புகழ்பெற்ற டாக்டராக விளங்கினார். முதலாவது ஜேம்ஸ் மகாராஜாவின் அந்தரங்க டாக்டர்களில் ஒருவரின் மகளான எலிஸபெத் பிரவுண் என்ற பெண்ணை மணந்தார். முதிர்ந்த அனுபவசாலியான தனது மாமனாருடன் அடிக்கடி மருத்துவ விஷயங்களை விவாதித்து, தனது அறிவை மேலும் விருத்தி செய்து கொண்டார், ஹார்வி.

டாக்டர் ஹார்வியின் அறிவும், திறமையும் எல்லாரையும் கவர்ந்தது. இவர் ஆற்றிய சொற்பொழிவுகளும், செய்த ஆராய்ச்சிகளும் அகில உலக டாக்டர்களின் கவனத்தை ஈர்த்தன. அரசவை டாக்டராகப் பதவி பெற்றார். முதலாவது ஜேம்ஸ் மகாராஜா மரணப் படுக்கையில் இருக்கும்போது, இவரே அவரது வைத்தியராகக் கடமையாற்றும் சிறப்புப் பெற்றார்.

டாக்டர் ஹார்வி இப்படிப் பெரும் பேரும் புகழும் பெற்று விளங்கியபோது இரத்த ஓட்டம்பற்றிய தனது கருத்துக்களை திட்டவட்டமாக எழுத்துருவில் உலகுக்கு அறிவிக்கவில்லை.

இறுதியாக அவரது 50-வது வயதில் இரத்த ஓட்டம்பற்றிய சிறிய புத்தகம் ஒன்றை எழுதினார். பழையகால டாக்டர்கள் சிலர் இதனைப் பைத்தியக்காரத்தனமான கருத்து என்று ஒதுக்கிவிட முயற்சித்தபோதும், உலகம் உவந்து ஏற்றுக்கொள்ளவே செய்தது. (தொடரும்)

[9ம் பக்கத் தொடர்ச்சி]

அதன் வடிவமைப்பை அப்படியே கிரகித்து மூளையில் பதியவைத்து மனதுக்கும் ஒரு தந்தியை இழுத்துத் தொடுத்துவிடுகிறது அம் மாத்திரத்தே இதர புலன் பொறிகள் செயல்படக் கிளர்கின்றன. மனதுக்குப் பிடித்த கவர்ச்சியுள்ள பொருள் ஆசைகளைத் தூண்டுகிறது பிடிக்காததை மனம் வெறுக்கவும் செய்கிறது. சிறிது தூரத்திற்குள்ளாக நமது கண் ஒளியின் கதிரியக்கத்திற்கு இத்தனை ஈர்ப்பும் வசியமும் இருக்குமேயானால் பேரொளிக் கோலங்களாக அண்டவெளியிலே சுழலும் நவகோள்களின் நோக்கு

அவற்றின் ஒளிக்கதிரியக்கம், நாம்வாழும்இப்பூமியையும் பூமியில் தரித்திருக்கும் புல்பூண்டு, கல். மண், நீர் முதலாக மாந்தரையும், விலங்கினங்களையும், பறவைகளையும் மற்றும் எல்லா ஜீவராசிகளையும் ஆட்டி வைப்பதில் வியப்புண்டா?

கண்வழியே பார்க்கும் பார்வை நினைவுத்திரையில் உருவம் பெறுவது எப்படி?

முன்னால் நாம் பார்க்கும் உருவம் விழிகளின் வழியாக உள்ளேயுள்ள விழித்திரையில் விழுகிறது. இது கண் நரம்புகளின்மூலம் ஒருசக்தியாகப் பின்மூளைக்குச்சென்று அங்கே ஓர் உருவத்தை உண்டாக்குகிறது. இப்படி ஒளியின் பிம்பமும் நினைவின் உருவமும் கலந்து உண்டாகும் தோற்றம்தான் உண்மையான கண் பார்வை. இந்த நுட்பமில்லையானால் பார்வையிருந்தும் பயனில்லை. பார்வையை இழந்த ஒருவனும்கூட மனிதப்பிறவிக்கென்றே அமைந்த இந்த நுட்பத்தினால் அசக் கண்ணால் பார்க்கமுடிகிறது.

முழுவளர்ச்சியடைந்த மனிதமூளையில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு பிறக்கும்போதே தோன்றிவிடுகிறது. அதைப்போலவே கண்ணின் வளர்ச்சியும் நூற்றுக்கு எண்பத்தைந்து பங்கு ஏற்பட்டு விடுகிறது. குழந்தை முழுமனிதனாக வளருவதற்கு நூற்றுக்கு நூறு பங்கு முன்னேறவேண்டியிருக்கும்போது மூளை பத்துப்

## கண்காள் காண்மின்களோ!

பங்கும் கண் பதினைந்து பங்கும்தான் வளரவேண்டியிருக்கிறது. ஆனால் இந்தச் சிறுவளர்ச்சிதான் மனித வாழ்க்கையில் முக்கியமானது. இவற்றுடனே மனமும் உணர்ச்சிகளும் தொடர்பு கொண்டு வளருகின்றன.

இயற்கையாக அமைந்த கண்பார்வை நுட்பத்தின் அடிப்படையில் தான் போட்டோ படப்பிடிப்பு எனப்படும் நிழல் உருவப் பதிவு இயக்கம் கருக்கொண்டு வளரலாயிற்று.

''மூக்குக் கண்ணாடிக்குத் தினமும் 'கிளிசரின்' போட்டுத்துடைத்து வந்தால் களங்கமற்றுப் பளிச்சென்று இருக்குமாமே?'' என்று தமது கண்ணாடியை மாற்றிக்கொள்ள ஒப்ரிஷனிடம் போன ஒருவர் அங்கு கண்ணாடி விற்பனைப்பகுதியில் ஒருவரிடம் கேட்டார்.

''கிளிசரின்'' எதற்குஐயா? நியூஸ்பிரின்ட் தாள் இருக்கல்லவா — அதுதான் புதினப் பத்திரிகை அச்சிடும் காகிதம், அதிலே எழுதாத வெற்றுத் தாளாக ஒரு துண்டு கிழித்து உங்கள் கண்ணாடியைத் துடைத்தாலே போதும், கண்ணாடி பளிச்சிடும்'' என்று அந்தக் கடைக்காரர் அப்பொழுது அவருக்குக் கூறியபோது கண்ணாடி மாற்றவந்தவருக்குக் கோபம் வந்துவிட்டது.

''ஓய், என்னை என்ன எழுத்தறிவில்லாதமுட்டாள் என்று எண்ணிக்கொண்டா பேசுகிறீர்?'' என்று வெடுக்கெனக் கூறி விட்டு முகம் கடுகடுக்க வெளியே நடந்தார்.

நியூஸ்பிரின்ட் தாளினால் கண்ணாடி லென்ஸுகளைத் துடைத்துவந்தால் அது பளிச்சென்று துலங்கும். பார்வை சுலபமாகும் அது என்னவோ மெய். அந்தக் காகிதத்தில் கலந்திருக்குன் ரசாயனச் சேர்க்கைதாம் அதற்குக் காரணமாம்.

ஃ

பாலைப் பொழிந்து
தரும்-பாப்பா
அந்தப் பசு மிக
நல்லதடி-பாப்பா

என்ற பாரதியின் பாப் பாப்பாட்டுக்கு ஒரு காலத்தில் பொருள்கூறிய தமிழ்ப் பண்டிதர் ஒருவர் நல்லதடி என்ற சொல்லுக்கு ஏ குட் ஸ்டிக் அதாவது நீளமான நல்லதடி என்று மாணவருக்குக் கற்றுக்கொடுத்தாராம். அப்பொழுது இந்தியாவில் பிரிட்டிஷ்ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஃ

''யாழ்ப்பாணத்தாரின் பேச்சுவழக்கில் 'நிற்கிற' தமிழ் தென்னாட்டாரின் வசனத்தமிழில் 'நின்றுகொண்டிருப்பது' ஏனோ?''- ஓர் இலக்கிய ரசிகரின் கிண்டல்.

ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் கெடுப்பதும் அருள் கொடுப்பதும் அன்னை பராசக்தியே

''மனைக்கு விளக்காகிய
வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பாகிய
வெல்வேல் நெடுந்தகை''

என்பதற்கிணங்க, வீட்டின் விளக்கைப்போல் விளங்குபவள் பெண். அவளே 'சக்தி'. போர்முனையேயன்றி நாட்டு வாழ்க்கைக்கே உரியவராய் விளங்குபவர் ஆண்கள் மக்கள் வாழ்வில் முதன்மை பெற்ற 'சக்தி' தான் பெண். இச்சக்தியான பெண்ணினத்தால் வீடுதோறும் செம்மை விளங்கின், நாடு தானுகவே செம்மையுறும். இது உலகம் கண்ட உண்மை. எனவே, தான் எமது 'சக்தி'யான பெண்களை வீட்டின் மங்கல விளக்காக ஒப்பிடுவது பண்டைத்தமிழன் பெருமை. இப்படியான 'சக்தி'யாகிய பெண்ணின் அருமை பெருமைகளைக் காண்போம்!

மக்கள் வாழ்விற்கு இன்றியமையாதன கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்று அம்சங்களுமேயாகும்! இந்த முப்பெரும் 'சக்தி'களும் பெண்ணிடத்திலேயே காணப்படுகின்றன. எனவே தான் கல்விக்கும், செல்வத்திற்கும், திவ்விய வீரத்திற்கும் அன்னை பராசக்தியின் திருவருளைப்பெற, எமது மக்களிடையே புரட்டாதித் திங்களில் 'நவராத்திரி' என்ற ஒன்பதுநாள் பெருவிரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

நவராத்திரியின் முதன் மூன்று நாட்களிலும் வீர மகா சக்தியாகிய துர்க்கா தேவிக்கும், அடுத்த மூன்று தினங்களிலும்பொருட்செல்வத்தின் அதிபதியாகவிருந்து அருள்பலிக்கும் இலக்குமி தேவிக்கும், கடைசி மூன்று தினங்களிலும் இன்னிசை ஒலியிலும் வேத வாக்கிலும் எங்கள் உள்ளத்திலும், அருவமாக அமர்ந்திருந்து, அணுவையும் அண்டத்தையும் இயக்கி, வெற்றியும், செல்வமும், ஞானமும் அருளிச் செய்யும் கலைமகளான சரஸ்வதி தேவிக்கும் விரதமனுஷ்டிக்கின்றனர்.

எமது வாழ்விலே வெற்றியீட்டுவதற்குத் தேவையான பொருட்கள் மூன்று. வீர மகாசக்தியான துர்க்கா தேவியை வேண்டிப் பெருவிழா எடுத்து, எமக்கு நேரவிருக்கும் இடர்களை ஒழித்து விடுகிறோம். அசுரர்களை அழித்து வெற்றிகொண்டவளான துர்க்காதேவி கொடியவற்றை நீக்கி உண்மையான ஒளியைத் தரவும் தூய உள்ளத்தில்வீரஉணர்ச்சிகளைக் கொடுப்பதின்மூலம் ஆத்ம விடுதலை கொடுக்கவும் அச்சம் நீங்கவும் அருள் புரிகிருள்,

மக்களுக்கு வாழ்விலே வீரமும், நற்சுகமும் மட்டும் பெற்றுவிட்டால் போதுமா? என்ற கேள்வி இங்கே எழுகிறது. உண்மைதான். எமது வாழ்க்கைக்குப்பொருள் மிக மிக அவசியமானதொன்றுதான். அறம், பொருள், இன்பம், வீடுஆகியபுருடார்த்தங்களுள் முக்கியமாக அமைந்துள்ள பொருட்செல்வத்தை வேண்டி உமையின் ஒரு நிலையாகியகிரியாசக்தியை, அதாவது இலக்குமிதேவியை நாம் வழிபடுகிறோம். அவள் அருளால், தானிய, பொருட்பேறுகளும், புத்திரலாபம், அரசபணிப்பேறு ஆகியனவும் கிட்டும்,

மக்கள் மத்தியில் வீரமும், தீரமும், பொன்னும் பொருளும், போகமும் நிறைந்துவிட்டால் மட்டும் அது எமக்கு நிறைந்த பெருவாழ்வாக அமைந்துவிட முடியுமா? இல்லை எமதுவாழ்வு பூரணமான வாழ்வாக, பொலிவுறு வாழ்வாக அமைவதற்கு, கலை. ஞானசக்தி தேவைப்படுகிறது இதற்காகவே கலைமகளின் ஞான கடாட்சத்தைக்கோரி நவராத்திரியின் கடைசி மூன்று தினங்களும் நாம் சரஸ்வதி தேவிக்குப் பூசை செய்து விழாவெடுக்கிறோம். கல்வி, ஞானம். சாந்தி ஆகிய சக்திகளை அடைகிறோம்.

எனவே பெண் என்ற 'சக்தி' ரூபமாக உள்ள துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களின் அருட்கருணை கொண்டுதான் எமது வாழ்வில் தோன்றும் பொருமை, கொடுமை வஞ்சனை, போன்ற ஆணவமலங்களும், தீய சிந்தனைகளும் ஒழியவேண்டும்.

இப்படியாக எமது ஆணவ மலங்களும், தீய சிந்தனைகளும் அழிந்தபின்புதான்

''அழுக்காறு அவாவெகுளி
இன்னுச்சொ —நான்கும்
இழுக்காதியன்ற நறம்''

என்ற குறளுக்கொப்ப இன்பமாக வாழ முடியும்


—[illegible]

## 'சக்திசேனை'

கடந்த வியாழக்கிழமையன்று யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற மகளிர் சேவா சங்கக் கூட்டத்தில் மகளிருக்கான ஒரு புதிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுதான் 'சக்திசேனை' இயக்கம். திருமதி விஜயலட்சுமி பண்டிட்டினுல் ஆரம்பித்துவைக்கப்பட்ட இவ்வியக்கம் இலங்கையிலே முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட புதியதொரு சிறந்த இயக்கமாகும்.

இச்சக்திசேனை இயக்கத்தின் முக்கிய நோக்கம் தாய்நாட்டுக்குச் சேவை செய்வதேயாகும். பல துறைகளிலும் குறைபாடுடைய மக்களுக்கு அவர்களின் குறைகளைப் போக்கி அவர்களை நல்வழிப்படுத்துவதும் அத்தகைய மக்களின் நல்வாழ்வுக்காகத் தங்கள் சேவையைநல்குதலுமே இச்சேனையின் குறிக்கோளாகும்.

யாழ். நகரிலுள்ள பல மகளிர்பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவிகள் பலர் இச்சக்தி சேனையில்சேர்ந்து தாய் நாட்டுக்குச் சேவை செய்வதாகச் சத்தியஞ் செய்துள்ளார்கள். இச் சத்தியமெடுக்கும் வைபவம் விளக்குகள் ஏற்றி ஆரம்பிக்கப்பட்டது. திருமதி பண்டிட் குத்துவிளக்கேற்றி இச்சக்தி சேனை இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். கிட்டத்தட்ட பத்துக் கல்லூரிகள் இதில் பங்குகொண்டன. ஒவ்வொரு கல்லூரிகளின் தலைவியர்களாக உள்ளவர்கள் சிறிய அகல்விளக்குகளை ஸ்ரீமதி பண்டிட்டிடம் இருந்து பெற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். இச்சக்தி சேனையில் சேர்ந்த மாணவிகள் சத்தியமெடுத்துக்கொண்டனர்.



# குடும்பச் சுடர்

தயாரிப்பு
குணம்

# மன்றத்தில் மலர்ந்த கருத்துக்கள் செயல்படுமா?

இம்மாதம் 9-ம் திகதி யாழ். மாநகரசபை மண்டபத்தில் காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி மகளிர் சேவா சங்கத்தின் கூட்டமொன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

பெருந்தொகையான மகளிர் பங்கு பற்றிய இக்கூட்டத்தில் 'சக்திசேனை' என்ற புதியதொரு இயக்கம் திருமதி விஜயலட்சுமி பண்டிட்டால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழ். நகரிலுள்ள பல பாடசாலைகளின் மாணவிகள் இச்சேனையில் சேர்ந்து தாய் நாட்டுக்குச் சேவை செய்வதாகச் சத்தியப்பிரமாணம் செய்தனர். 'பெண்களும் சமூகத் தொண்டும்' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றது. இதில்ஐந்து பெண்மணிகள் பங்கு பற்றி பெண்கள் ஆற்றவேண்டியதொண்டுகள் பற்றி வெகு அழகாக உரையாற்றினர். காந்தி நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முன்வந்துள்ள பெண்மணிகள்; அவருடைய கொள்கைகளைப் பின்பற்றுவோம் என உறுதிகொண்ட பெண் மணிகள்; அவரைப்போல் நடைமுறையில் செய்து காட்டுவார்களா? அவர் எதைச் சொன்னுரோ அதை நடை முறையில் செய்து காட்டினுர். 'அரை நிர்வாணப் பக்கிரி' என அவரை ஆங்கிலேயர் இழித்துக்கூறவும் பின்வாங்காமல் நடந்து காட்டினுர். அவர் ஏற்றி வைத்த தீபத்தை அணையாமல் காப்போம் என உறுதி பூண்டுள்ள பெண்மணிகளும், சமூக முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமெனப் 'பெண்களும் சமூகத் தொண்டும்' கருத்தரங்கில் பங்குபற்றி வீரமுழக்கம் செய்த வீராங்கனைகள் தியாகச் செம்மல் காந்தி மகானைப்போல் தாம் கூறியனவற்றை நடைமுறையில் செய்து காட்டுவார்களா? இக்கருத்துக்களில் ஒன்றையாவது இவர்கள் செயல் படுத்துவார்களா? அல்லது எல்லாம் வெறும் புஸ்வாணமாகுமா? என யான் எனக்குள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் வேளையில் எனக்குச் சமீபத்தில் மண்டபத்துக் வெளியே நின்ற சில இளவட்டங்களின் ''ஆண்டிகள் கூடிமடம் கட்டுகிறுர்கள்'' என்றபேச்சும் என்காதில் விழுந்தது.

இங்குபேசிய அம்மையார்கள் பண்டிட் கூறியது போல் தம் நிலையினின்று இறங்கி கிராம மக்களுக்குத் தொண்டு செய்வார்களா? என்றுர் ஒரு இளைஞர். இதைக்கேட்ட மற்றொரு இளைஞர் இவர்களை லேசாக நினைக்கக்கூடாது. ஒருபெரிய சேனையல்லவா திரட்டி வைத்திருக்கிறுர்கள் இந்த சக்திகளின் சக்தியால் நாடு முன்னேறப் போகிறது பாரேன் என்றுர். இவர்களின் சம்பாஷனையைக் கேட்டுக்கொண்டுநின்றவேறொரு இளைஞன் எல்லாம் இன்றைய பேச்சோடுசரி யாழ்ப்பாணம் பண்டிட் பிறந்த இந்தியாபோன்றதா? இங்கு பெட்டைக் கோழிகூவி விடியவா போகிறது என்று ஒரு போடுபோட்டார்.

இவைகளைக் காதுகொடுத்துக் கேட்டுக்கெண்டிருந்த எனக்குச்சிறிது மனவருத்தமாகவே இருந்தது.

அன்று சொற்பொழிவாற்றிய மகளிரில் ஒரு சிலராவது இவர்களின் கேலிப் பேச்சை முறியடிப்பார்களா? இவர்கள் தங்கள் செல்வம்தங்கள்சுகம் ஆகியவற்றை துறந்து வறியமக்களுக்குச் சேவைசெய்யவேண்டும். அப்பொழுதுதான் இவர்கள் உருவாக்கிவைத்த சேனையிலுள்ள மாணவிகளும் சேவையிலீடுபடுவார்கள். திருமதி பண்டிட் உத்தர பிரதேசத்தில் ஒரு வீதியைத் திருத்த தானே முன்நின்று சிரமதானத்தில் ஈடுபட்டதைத் தெரிவித்தாரே இவர்களில் எவராது இத்தகைய சேவையில் குதிப்பார்களா? தலையிருக்க வால் ஆடலாமா? அன்று உரையாற்றியவர்களில் வயது முதிர்ந்த அனுபவசாலிகள் சிலர் இருந்தனர். இவர்கள் திருமதிபண்டிட் கூறியது போல் சமூகசேவையில் அதாவது சிரமதானததில் ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் இவர்கள் ஆரம்பித்து வைத்த 'சக்தி சேனை' இயக்கமும் செவ்வனே இயங்கும். அல்லாவிடில் இந்நிகழ்ச்சிகளெல்லாம் வெளிவேஷங்களாகவும் அன்றையதின காட்சிப் பொருளாகவும் போய் விடும்.

—குடும்பச் சிட்டு

## பெண் மொழிகள்

ஒவ்வொரு பெண்ணின் கதையிலும் இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்று அன்பு மற்றது வேதனை.

—பால்ஸாக்.

0 0 0

எத்தகைய துன்ப வெள்ளத்திலும் தலை வணங்கிப்போகும் நாணலைப்போன்றவள் பெண்.

—ஹேம்மஸ்

0 0 0

மனைவிக்கு அடங்கி நடப்பவன்முட்டாள். மனைவியை அடக்கியாளநினைப்பவன் முரடன். ஒத்துவாளும் வாழ்க்கையை அறிந்தவனே கணவன்.

-டாக்டர் மு. வரதராஜன்

# வைத்திய ஒளி

### சிலந்திக்கடி

ஆடாதோடை இலையைப் பச்சை மஞ்சளுடனும், மிளகுடனும் அரைத்துக் கடித்த இடத்தில் வைத்துக் கட்டினுல் உடனே குணமாகும்.

0 0 0

### தொண்டைப்புண்

வெந்நீரில் உப்பைக் கரைத்து வாயில் விட்டுப் பலமுறை கொப்பளித்தால் தொண்டைப் புண் குணமாகும். பல் வலியும் இதனுல் நீங்கும்.

0 0 0

### பூரான்கடி விஷம்

பூரான் கடித்துவிட்டால் உடலில் பல இடங்களில் தடித்துப்போய் வேதனை உண்டாக்கும். பூரான் நஞ்சு நீங்கக் கடித்தவுடன் பனை வெல்லத்தைச் சாப்பிட்டால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடம் உண்மையா, பொய்யா? (4)

# நமது ஐம்புலன்களுக்கு எட்டாத பல மர்ம சக்திகள்

**1953-ம்** ஆண்டில் ஒரு நாள் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கடற்கரையில் வாழும் சிப்பிகள் சிலவற்றை எடுத்துக்கொண்டு சுமார் 1000 மைல்களுக்கப்பாலுள்ள தமது ஆராய்ச்சிச் சாலையில் ஒரு நீர்த்தடாகத்துக்குள் வைத்து சோதனை நடத்தினர். சிப்பிகள் கடல் பெருக்கு நேரத்தில் வாய் திறந்து வற்றுநேரத்தில் மூடிக்கொள்ளும்.

தடாகத்திலிருந்த சிப்பிகளும் 1000 மைல்கள் தூரத்தில் இருக்கும் கடல் பெருக்கெடுக்கும் சமயம் பார்த்து வாயைத்திறந்தன. இரண்டு வாரம் கழித்து அவை வாயைத்திறக்கவில்லை! நான்கு மணி நேரம் கழித்து மறுபடியும் வாய்கள் திறந்தன. இந்த நூதனத்தை ஆராயும்போது ஒருண்மை புலப்பட்டது

சிப்பிகள் வாய்மூடியிருந்த சமயம் 1000 மைல்களுக்கப்பாலுள்ள கடற்கரையில் பூரண சந்திரன் உச்சிக்கு வந்து கடல் பெருக்கெடுத்தது. நாலு மணித்தியாலங்களும் 1000 மைல்களும் கழிந்து ஆராய்ச்சிச் சாலைக்கு நேரே உச்சியில் பூரண சந்திரன் வந்தபோது சிப்பிகள் வாய்திறந்தன.

பூரண சந்திரன் நிற்கும் நிலைக்கும் சிப்பிகள் வாய் திறப்பதற்கும் சம்பந்தம் இருக்கிறதென்று ஊகிக்கப்பட்டது. ஆனால், சந்திரன் உச்சிக்கு வந்துவிட்டான் என்று சிப்பிகளுக்கு எப்படித் தெரிந்தது?

தடாகத்திலிருந்த நீர் கடல் நீராக இருந்தபோதிலும் கடல் பெருக்கு வற்றுப் போலல்லாமல் ஒரே மட்டத்திலிருந்தது. நீரின் வெப்ப நிலையிலோ அதன் மீது விழும் வெளிச்சத்திலோ ஏற்றத்தாழ்வு இல்லாமல் இரவு பகலாக ஒரே மட்டத்தில் வைக்கப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் பூரண சந்திரன் உச்சிக்கு வந்துவிட்டான் என்று சிப்பிகள் அறிந்துகொண்டது எங்ஙனம்? வெப்பம், தட்பம், வெளிச்சம், நிழல் முதலிய சூழ்நிலைகளையெல்லாம் தாண்டி சந்திரனிலிருந்து வரும் ஏதோ ஓர் அபூர்வ சக்திதான் இந்தச் சிப்பிகளை தாக்குகின்றன என்று விஞ்ஞானிகள் தீர்மானித்து, இன்னும் வேறு பல தாவரங்கள், பூச்சி புழுக்கள், பறவைகள், மிருகங்களையும் வைத்து ஆராய்ச்சிகள் நடத்தி மேற்படி தீர்மானம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

காற்று அமுக்கம், சீதோஷ்ணம், காற்றிலிருக்கும் மின் காந்தம் முதலிய விஷயங்களால் மனிதரும் அஃறிணை உயிர்களும் தாக்குண்டு, அவற்றின் மாறுதல்களுக்கேற்ப தொழில்படுகின்றன என்பது ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. இவை யாவும் பூமிமண்டலத்துக்குட்பட்ட சக்திகள். இவற்றையும் தாக்கும் எக்ஸ் கதிர்கள், கொஸ்மிக் கதிர்கள், கம்மா கதிர்கள் முதலிய சக்திகள் பூமண்டலத்துக்கும் அப்பாலுள்ள பிரபஞ்ச வெளியிலிருந்து வருகின்றனவென்று விஞ்ஞானிகள் இப்பொழுது ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

## வி. என். பி.

சந்திரன்பற்றிய உண்மையை மேனாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர் கண்டு பிடித்துவிட்டார்கள். கனத்த நாட்கள் என்று கூறப்படும் அமாவாசை, அட்டமி-நவமி, பூரணை ஆகிய தினங்கள் சந்திரனின் நிலைகளையே குறிக்கின்றன. இந்நாட்களில் சீதோஷ்ண நிலைமை மாறுமென்றும் கடல் பெருக்கோ வற்றோ நடக்குமென்றும், நோயாளிகளுக்கு நோய் முற்றுமென்றும், பிறப்பு இறப்பு நடக்குமென்றும், பெண்களுக்கு மாதவிடாய், பிள்ளைப்பேறு ஏற்படுமென்றும், சகல ஜீவ ராசிகளும் கருவுற்று சிருஷ்டியே நடக்குமென்றும் நம் முன்னோர்கள் அறிந்திருந்தார்கள் கனத்த நாட்களில் இம்மாதிரி சம்பவங்கள் நிகழ்வதை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கிறோம்

சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களுள் ஒன்றாகிய நமது பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கும் இந்தச் சிறிய உபகிரகம் சந்திரனுக்கு இவ்வளவு சக்தியிருக்குமானால் அளவில் மிகப்பெரிய கிரகங்களும் நம்மைத் தாக்கவில்லையென்று கூறமுடியுமா? சந்திரன் நமக்கு மிக அண்மையில் (2 லட்சத்து 35,000 மைல்) இருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் மற்றைய கோள்களின் பருமனையும் சேர்த்துக்கொள்ள வேண்டாமா? பின்வரும் விபரங்களைப் பார்க்கவேண்டும்:-

| பெயர் | சூரியனிலிருந்து தூரம் (கோடி மைல்) | பூமியைவிட எத்தனை மடங்கு எடை |
|---|---|---|
| சூரியன் | — | 330,000 |
| புதன் | 3 . 6 | .048 |
| வெள்ளி | 6 . 7 | .820 |
| பூமி | 9 . 29 | 1 |
| செவ்வாய் | 14 . 1 | .107 |
| வியாழன் | 48 . 20 | 315 . 0 |
| சனி | 88 . 5 | 94 . 8 |

நமது ஐம்புலன்களுக்கும் எட்டாத பல சக்திகளிருக்கின்றன. அவை இருக்கின்றன என்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட பின்புதான் நாம் அவை இருக்கின்றனதான் என்று ஒப்புக்கொள்ளுகிறோம் அதுவரை நம்புவதில்லை.

ஆதிகால மனிதன் மூங்கிலும் மூங்கிலும் உராஞ்சும்போது தீப்பொறி பறக்கிறதைக் கண்ட பின்புதான் தீ என்ற ஒரு பொருள் இருப்பதைக்கண்டான். அதில் நம்பிக்கைகொண்டான். பரடே என்பவர் மின்சாரம் என்று ஒன்று இருப்பதைக் கண்டுபிடித்த பின்புதான் உலகம் அதை ஒப்புக்கொண்டது. றொன்ஜன் என்பவர் எக்ஸ்றேகளை கண்டுபிடித்த பின்புதான் உலகம் அதை ஒப்புக்கொண்டது. இப்படியே இயற்கையிலுள்ள பல விதமான சக்திகளை யாராவதொருவர் கண்டுபிடித்து நிரூபித்த பின்புதான் மற்றவர்களும் அதை நம்புகிறார்கள்.

சந்திரனிலிருந்து புறப்படும் ஏதோ ஒருவிசசக்தி மனிதர்களையும் அஃறிணைப் பொருட்களையும் தாக்கிவருகின்றன என்று மேனாட்டு விஞ்ஞானம் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறது. அப்படியானால் சந்திரனையும் விடப் பெரிய கிரகங்களான புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் சனி ஆகியவற்றிலிருந்து அதுபோன்ற மர்ம சக்திகள் புறப்பட்டு பூமியையும் பூமியில் வசிப்பவர்களையும் தாக்கமுடியுமல்லவா? இவை கொஸ்மிக் கதிர்கள், கம்மா கதிர்கள் போன்ற கதிர்களா அல்லது வேறு ஏதாவதா என்று இன்னும் ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. யாராவது கண்டுபிடித்து நிரூபிக்கும்வரை நாமும் அதை நம்பப்போவதில்லை!

சோதிடர் ஒருவருடைய ஜாதகத்தைப் பார்த்து பலன் சொல்லும்போது, இப்படி எல்லாம் தர்க்கிக்க மாட்டார். அவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருடிகளும் முனிவர்களும் எழுதி வைத்துப்போன வாக்கியங்களைக்கொண்டு பலன் சொல்லுவார். இந்த ஜாதகனுக்குசனிபலம் பெற்றிருக்கிறான், வியாழ சுகமில்லைஎன்று அவர் கூறினால் அதற்கு அர்த்தம், ஜாதகன் பிறந்த சமயத்தில் சனி கிரகத்திலிருந்துவரும் கதிர்கள் அவனை நல்ல முறையில் பாதித்துள்ளன வென்றும், வியாழனுடைய கதிர்கள்

(15-ம் பக்கம் பார்க்க)

## உலகில், . .

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

**நாமங்கள் பலகொண்ட நாமகள்**

எப்படி ஓர்உருவம் ஓர் நாமம் அற்ற ஆண்டவன் ஆயிரம் திருநாமங்களால் அழைக்கப்படுகின்றானோ அது போன்றேஆண்டவனின் ஒரு பண்பாய் (அம்சமாய்) விளங்கும் கலைமகளுக்கும் சூட்டப்பட்ட பெயர்கள் பல, அவற்றுள் கலைமகள், பனுவலாட்டி, காயத்திரி, ஞான மூர்த்தி, சரஸ்வதி, உலக மாதா, பிராமி, ஒள்ளிய வெள்ளை மெய்யாள், இலகு வெண்கலசமுற்றாள். சகல கலாவல்லி, பாரதி, இசை மடந்தை, மலரயன் மனைவி, வாக்காள், வாணி, நாமகள் ஆகியவை ஒரு சிலவாகும்.

இவ்விதம் பல பெயர் தாங்கி நிற்கும் கலைமகளை "விண் கண்ட தெய்வம் பல கோடியுண்டேனும் விளம்பில் உன்போற் கண்கண்ட தெய்வமுளதோ சகலகலா வல்லியே" என்று குமரகுருபரர் உள்ளம் உருகி வழிபடுவதற்கமைய யாமும் நாமகளின் நல்லருளை நாடி நிற்பின் அவள் எம்நாவில் நடம்புரிவது உறுதி. நம் வாழ்வும்நற்கலைகளின் உறைவிடமாய் ஒளிவிடுவதும் உறுதி.

வீரமும் செல்வமும் வியத்தகு கல்வியும் எம்வாழ்வில் நிறை மலைமகளாய், அலைமகளாய், கலைமகளாய் வெவ்வேறு வடிவம் தாங்கி நிற்கும் பேராற்றலை (சக்தியை) வழிபட்டுப் பெருவாழ்வை இப்பேறுதனில் எய்துவோமாக.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**பாலும் பழமும்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows
Beautiful Girls Daring acts
in
SEXY ALLNEON
(Adults only)

வல்வெட்டித்துறை
**ரஞ்சனா தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
ரகுநாதன் — சந்திரகலா
நடித்த
**நிர்மலா**


**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி கணேசன் - பத்மினி
நடித்த
**மல்லிகா**

**REGAL** JAFFNA
Daily 4-45, 7& 9-45p m.
Poya, Prepoya 4 Shows
Christopher Lee
Maria Rohm
in
THE BLOOD OF FU MANCHU
(Adults Only)

இப்பொழுது திரையிடப்படுகின்றது
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், ஜெயலலிதா,
நாகேஷ்
நடித்த
**அன்று கண்ட முகம்**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
**லக்ஷ்மி கல்யாணம்**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7-00&9-45pm
Poya Prepoya 10-30 A. M.
Restless Reckless Violent-
There never was a man like
'B L U E'
Terence Stamp
Joanna Petter
in
'B L U E'
(Scope-color)

இப்பொழுது நடைபெறுகிறது
**வெலிங்டன்**
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)

ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ்★அசோகன்★ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
**நீயும் நானும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிறருக்கு உதவும் சாதனை தேவை

— செல்வி ஸ்ரீ ரஞ்சனிதேசிகர் —

தோழி! நீ இப்போது பள்ளியிற் படிக்கும் மாணவியாகவல்லவா இருக்கிறாய்? படி! நன்றாகப்படி. நீ வருங்கால புதுமைப்பெண். சமூக சிற்பி என்பதை மனதிற் கொண்டுபடி.

நீ எப்படியானவளாக இருக்க விரும்புகிறாய்? அரசியல் தலைவியாக விருப்புகிறாயா? மேடைப் பேச்சாளியாக விரும்புகிறாயா? அல்லது சமுதாய புனருத்தாரணஞ்செய்யும் எழுத்தாளியாக விரும்புகிறாயா? காவியம் புனையும் கவியாக மலரப்போகிறாயா? அல்லது உலக உத்தமர்களைப்போல ஒரு இலட்சிய வாதியாக விருப்பமா?

அல்லது ... அல்லது ... (கூறவே நா கூசுகிறது). பிறந்ததைப் போலவே எவருக்குமே உன்னைப்பற்றித் தெரியாமலே இறந்து விடப் போகின்றாயா?

கூடாது. கூடவேகூடாது. நீ மிகச்சாதாரண ஒருமனித உயிரைப்போல மடிந்து போகக்கூடாது. நீ பிறந்ததன் பயனை அடையவேண்டும்; உன்பிறப்பின் பயனை மற்றவர்களும் அடையவேண்டும்.

உனதுபெயர் மக்களுள்ளங்களிலே பொறிக்கப்பட வேண்டும், உன்னை நம்சமூகம் போற்றவேண்டும். எனவே 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற தமிழ்மறையை அடிக்கடி நினைவுறுத்திக்கொள்.

நீ எப்படியானவளாக மாறவிரும்பினாலும் அதற்கு இப்போதிருந்தே உன்னை எல்லாவிதத்திலும் ஆயத்தஞ் செய்துகொள்,

உன்னை எப்போதுமே பசியுள்ளவளாக ஆக்கிக்கொள். ஆமாம். 'அறிவுப் பசியைத் தான் சொல்கிறேன். அப்போதுதான் நீ படிப்பாய். ஆனால், தோழி! உத்தியோக மோகம் கொண்டுமட்டும் படிக்காதே. 'நான் இந்த ஈழமணித் திருநாட்டில்பிறந்தது இந்நாட்டிற்கு நன்மை செய்யவே. எனது சமூகத்துக்குச் சேவைசெய்யத்தான் நான் உருவாகின்றேன். எனது இனத்துக்கு நானொரு வழிகாட்டியாக இருப்பேன்' எனும் கருத்துக்களை மனதிற்கொண்டு கல்வி பயில்வாயாக.

உன்கல்லூரியில் நடக்கும் எந்த நிகழ்ச்சியிலும் நீபங்குபற்றவேண்டும். விளையாட்டா? அதில் நீ முதலாவதாக இருக்கவேண்டும். மாணவர் கூட்டமா? தினமும் உன்பெயர் அறிக்கையிற் காணப்படவேண்டும். பேச்சுப்போட்டியா? ஆதாரத்தோடு, கருத்தோடு. அற்புதமாக உன்பேச்சு அமைய வேண்டும். வெற்றி உனதே.

அனைத்திற்கும் காரணமானது எது தெரியுமா? சொல்கிறேன் கேள். இந்த உலகம் மிகப் பொல்லாதது. பாழ்படுத்திவிடக்கூடியது: நரிகளும், நாசகாரர்களும் நிறைந்தது. கோட்டான்களையும் கோழைகளையும் கொண்டது. வல்லூறுகளையும் வஞ்சகர்களையும்வளர்த்துள்ளது மடையர்களும் மாபாவிகளும் மலிந்தது. பச்சோந்திகளும் பித்தர்களும் பரவியது.

இத்தனை கெடுபிடிக்கு மத்தியில் நீ நல்லவளாக வளர, வாழ விரும்பினால் — சமுதாயத்தின் வழிகாட்டியாக மிளிர வேண்டுமானால் உன்னிடம் சில அரிய குணங்கள் சிறந்து விளங்குதல் வேண்டும்.

ஏனவே இவற்றைக்கவனி.

ஒழுக்கமுள்ளவளாக இரு. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'.

அறிஞர்களை நாடு, - 'சான்றோர் இனத்திரு'.

கடமைக்காக வாழ் - 'அறஞ்செய விரும்பு'.

இரக்கம்கொள் - 'தானமது விரும்பு'.

துன்பஞ்செய்யாதே - 'சூதும் வாதும் வேதனை தரும்'.

அன்புகாட்டு - 'கீழோராயினும் தாழ உரை'.

கோபம் கொள்ளாதே - 'தீராக்கோபம் போராய் முடியும்'.

அதிகம் பேசாதே -மோனம் என்பது ஞான வரம்பு'.

அருள் கொண்டு பேசு - 'வஞ்சகம் பேசேல்' - 'ஞயம் படவுரை'.

கற்றுக்கொண்டே இரு - 'பிச்சை புகினும் கற்கை நன்றே'.

'தோழி! இவற்றிற்கும் மேலாக ஒன்றிருக்கிறது. அதுதான் பெற்றோரையும், முன்னோரையும் பேணி அன்புசெலுத்தி அவர்சொற்படி நடப்பது. 'பெற்றோரைப் பேண்'-'தந்தைசொல் மிக்கமந்திரமில்லை.' 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'.

தோழி! செய்வினை திருந்தச் செய். முதல் முயற்சி தோற்கலாம், இரண்டாவது தோல்வியுறலாம். மீண்டும் மீண்டும் உழைப்பாயாக. வெற்றி நிச்சயம் உனதே.

மறவாதே! நீ வருங்காலப் புதுமைப்பெண். வீரமங்கை. சிந்தனாவாதி. நாடு நலம் பெற இனம்வாழ உழைப்பாயாக.

## சபாஷ் சித்தாரா!

வடபகுதியில் திறமையான மாணவி எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசாங்கத்தின் உபகாரச் சம்பளத்தைப் பெற்றிருக்கிறார் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் 7-ம் வகுப்பு பயிலும் 11 வயது மாணவியான செல்வி சித்தாரா காசிநாதன்! இனி இவர் தொடர்ந்து படிக்கும் காலம்வரை அரசாங்கமே இவர் படிப்புக்கான செலவைக்கவனிக்கும்.

உபகாரச் சம்பளம் அளிப்பதற்காக அரசாங்கம் நடாத்திய பரீட்சையில் வடபகுதியில் திறமையாகச் சித்திபெற்றிருக்கும் இவர் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு கல்விக் கந்தோரில் பணியாற்றும் திரு. ஆர். காசிநாதன், திருமதி சிவமணி காசிநாதன் தம்பதிகளின் புதல்வியான செல்வி சித்தாராவுக்கு 'மலர்' தனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறது!

## மாணவர் மலர்தனைக் கண்டேன்

மாணவ மலர்தனைக் கண்டேன் - அந்த
மகிழ்ச்சியை மனதினில் நானேற்றுக்கொண்டேன்
தேனை இனித்ததாம் எனக்கு - அது
தெவிட்டாத தித்திப்பாம் பலர்க்கு

வாரத்துக் கொருமுறை பூக்கும் - அது
மாணவர் வளத்திற்கு வழியினை ஆக்கும்
சாரத்தில் இனிமையைக் காட்டும் - எமைத்
தக்கவ ராக்கிட தான்வழி காட்டும்

மாணவர் பலன்மிகக் கொள்ள - தினம்
மாசில்லா மலராக மலர்ந்து எழில்காட்டும்
கோணல் பலவும் நிமிர்த்தியே நின்று நம்மை
குணமாக்கி வழிகாட்டி குறிதன்னை கொள்ளும்.

பி,கிருஷ்ணனந்தன்
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

# தண்ணீருக்குப் பதில் ஆப்பிள்

தண்ணீருக்குப் பதிலாக சாப்பிட்டவுடன் ஆப்பிள் தான் சாப்பிடவேண்டும்.

இவ்வித கஷ்டம் எங்கு என்கிறீர்களா?

கிழக்கு ஜெர்மனியில் தான்.

கிழக்கு ஜெர்மனிக்கு அரசியல் அறிவில் பயிற்சி பெறுவதற்காக சென்றுள்ள யாழ்ப்பாணம் கந்தரோடையைச் சேர்ந்த திரு. சி. விஜயானந்தன் அங்குபெற்று வரும் அனுபவம் பற்றி மேலும் சில ருசிகரதகவல்களை எழுதியுள்ளார். இவை நமக்கு எவ்வளவோ விதத்தில் பயன் தருவதாக இருக்கும். அவர் எழுதியுள்ளதை சுருக்கமாகத்தருகிறோம்.

'இங்கு கடும்குளிர். அறைகள் சூடேற்றப்பட்டுள்ளன. குளிருக்கு ஏற்ற உடைகள் தந்துள்ளார்கள்.

காலை உணவு 7 மணிக்கு முன். பகல் 12மணிக்கு பகல் உணவு. இரவு 6 மணிக்கு இறைச்சி வகைகள், பாண், பால், முட்டை, மரக்கறி, சில சமயங்களில் சோறும் உண்டு. உருளைக்கிழங்குதினமும் உண்டு. எந்நேரமும் தேநீர் பருகலாம்.

சூடான், மெச்சிக்கோ, சில்லி, பின்லாந்து, சோமாலியோ, சீரூலியன்ஸ், சிரியா, இக்கதோ, யேமன், கொலம்பியா முதலிய நாட்டுத் தோழர்களும் என்னுடன் இங்கு பயில்கிறார்கள்.

இங்கு ஜெர்மன் மொழியிலேயே கற்பிக்கிறார்கள். உடனுக்குடன் ஆங்கில மொழிபெயர்ப்புமுண்டு.

கிழக்கு ஜெர்மனியில் சோவியத்நாட்டின் 15போர் வீரர்களின் ஞாபகமாக 15 ஞாபகச்சின்னங்கள் எழுப்பியுள்ளார்கள். இந்த ஞாபகச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கும் இடத்துக்குமக்கள் கூட்டம்கூட்டமாகச்சென்று அஞ்சலி செய்கிறார்கள்.

இங்கு ஐந்துநாட்கள்தான் வேலை. 2 நாட்கள் ஓய்வு.

நான் பயின்று வரும் பல்கலைக்கழகத்தில் தியேட்டர் முதல் ஆஸ்பத்திரிவரை சகலவசதிகளும் உண்டு

— ராஜன்

## உங்களுக்குத் தெரியுமா?

— நெல்லை க. பேரன் —

1. இலங்கை தபாற்கந்தோர்களில் பதிவு செய்யும் (Registration)கட்டணம் எவ்வளவு?

50 சதம்.

2; டேவிஸ் கப் வழங்கும் முறை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

1900 ஆண்டில்.

3 'வைட்மன் கப்' என்பது யாது?

பிரிட்டிஷ் — அமெரிக்க பெண்கள் கலந்துகொள்ளும் போட்டிக்கேடயம். 1923-ல் திருமதி ஜோர்ஜ் டபிள்யூ. வைட்மன் என்பவர் வழங்கினார்.

4. அகத்தியம் எழுதிய அகத்தியரின் 12 சீடர்கள் யாவர்?

1 தொல்காப்பியர், 2 அதன் கோட்டாசான், 3 துராலிங்கன், 4 செம்பூட்சேய், 5 வையாபிகன், 6 வாய்பியன், 7 பனம்பாரன் 8 கழாரம்பன், 9 அபிநயன், 10 காக்கைபாடினி, 11 இலத்தத்தன், 12 வாமனன்.

5. 'வால்காவிலிருந்து கங்கைவரை' என்ற நூலை எழுதியவர் யார்?

இராகுல சாங்கிருத்தியாயர்.

6. வில்லியம் சேக்ஷ்பியர் பிறந்த திகதியும் ஊரும் யாது?

26 - 4 - 1564. ஸ்டார்ட்போட் ஒன் அவன் [Stratfort-on - Avon).

7 தல்லியம் (Thalleam) உலோகம் கண்டு பிடித்தவர் யார்?

சேர் வில்லியம் குருக்ஸ்.

8. 10 சத முத்திரை ஒட்டாமலேயே 'லபாலதிபர்' என்று விலாசமிடப்பட்ட கடிதம் அனுப்பமுடியுமா?

ஆம். அக்கடிதம் தபாற்கந்தோர் சம்பந்தப்பட்ட புகாராகவோ அல்லது அனுப்புகிறவருக்கும் தபாற்பகுதியினருக்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தொடர்பாகவோ இருத்தல் வேண்டும்.

9 பதிவுக் கடிதமும் தபாலதிபருக்கு இலவசமாக அனுப்ப முடியுமா?

இல்லை. பதிவுக்கட்டணம் 50 சதத்திற்கு மாத்திரம் முத்திரை ஒட்டினால் போதுமானது.

10. ஐதரசன் பரவொட்சைட்டு ($H_2O_2$) கண்டு பிடித்தவர் யார்?

லூயிஸ் ஜாக்குவிஸ் ரெபனார்ட்.

11 சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதன் யார்? எந்த நாட்டவன்?

ஆம்ஸ்ட்ராங் ஜோன். அமெரிக்கன்.

12 மேக வியாதிக்குரிய மருந்து எது? கண்டுபிடித்தவர் யார்?

இதற்கு 606 அல்லது சல்பர்சான் என்னும் மருந்து உண்டு. கண்டவர் போல் ஏர். லிச்.

13. அம்மை ஊசியைக் கண்டுபிடித்தவர் யார்?

எட்வேட் ஜென்னர்.

14. டைபாய்டு ஜுரத்திற்குமருந்துகண்டவர்யார்?

சேர் ஆல்ம்றெக்ஸ் றைற்.

45 இலங்கையில் தற்போதைய அஞ்சல் அதிபர் நாயகம் யார்?

திரு. வேர்ணன் அபயசேகரா. (தொடரும்)

## நமது ஐம்புலன்..

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

அவ்வளவு சிறப்பாகப் பாதிக்கவில்லை என்பதுவே.

இவற்றையெல்லாம் தவிர சூரிய மண்டலத்துக்கப்பாலுள்ள பல நட்சத்திரங்களும் பூமியைத் தாக்குகின்றன. சூரியனைவிடப் பன்மடங்கு பெரிய நட்சத்திரங்கள் இருக்கின்றன. அசுவினி, பரணி முதலிய இருபத்தேழுமே அவைகள்.

தர்க்கரீதியில் இப்படி ஆராயும்போது கிரகங்களும் நட்சத்திரங்களும் நம்மை ஒரு விநாடியும் ஒவ்வொரு விதமாக பாதிக்கின்றனஎன்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இவையெல்லாம் எந்தெந்த நிலையில் நின்று எவ்வளவு பலமாகப் பாதிக்கின்றன என்று கணித்துப் பார்த்து பலன் சொல்வதே சோதிட சாஸ்திரம்.

(தொடரும்)

## எமக்கு வந்த கடிதங்கள் சில

மாணவர்மலரை தொடர்ந்து ஆவலுடன் வாசிக்கும் சகோதரர்கள் நாம். மாணவர்களுக்குத் தேவையான பொதுஅறிவையும், அம்புலி யாத்திரைபற்றிய புதுத் தகவல்களையும் எமது மாணவர் மலரில் பிரசுரஞ்செய்து வருவதுகண்டு மிகுந்தஆனந்தம் கொள்கிறோம். தொடர்ந்து மாணவர்மலர் முழுப் பக்கத்தில்வெளியாகவேண்டுமென விரும்புகிறோம்.

மா. கௌசலா
மா. ஹரிகரன்
மா. சிவகலா


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

வரகு

ஏராளமான புதிய வரகு விற்பனைக்குண்டு. விசாரிக்கவும் - ந.செல்வவிநாயகமூர்த்தி, சதானந்தா ஒழுங்கை, அளவெட்டி.
1469

காணிகள்


வளலாயில் பருத்தித்துறை-கீரிமலை பிரதான வீதியின் இரு பக்கத்திலுமுள்ள 75 பரப்பு தென்னை மரக்காணியும், பூநகரியில் கரிக்கட்டுக் குளத்துக்கருகில் 30 ஏக்கர் வயற்காணியும் கல்லுண்டாயில் பிரதான வீதிக்கருகில் 100 பரப்பு வயற்காணியும் விற்பனைக்கிருக்கின்றன. இவைகள்பிரித்தும்கொடுக்கப்படும். விபரங்களுக்கு: ஆர். மகேந்திரன், 65, அரசடிவீதி, நீராவியடி.
1478

நல்ல நிலைமையிலுள்ள 40 பேஸ் அக்கோடியன் விற்பனைக்கு உண்டு. சி. ஆனந்தராசா ஆசிரியர், அமெரிக்கன்மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி.
1475

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு 1969 டிசம்பர்பரீட்சை G. C. E. (O/L) தமிழ்மொழி பகுதி 1 மாதிரிகை வினாத்தாள்கள் பத்து இடம் பெற்றுள்ள பத்தாம் தமிழ்மலர்ப் பயிற்சி வினா-விடை விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
1476

பியற் 1100, கில்மன்மிங்ஸ் கார்கள், வெஸ்பா ஸ்கூட்டர், கார் உப உறுப்புகள், டிரான்ஸிஸ்டர் றேடியோ, டேப் ரிகார்டர் இன்னும் பல. சொந்தக்காரர் வெளிநாடு போகிறார். செல்வேந்திரன், பொலிடெக்னிக் 31, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
1479


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்

தன்மான உணர்வு இருந்தால், சமயத்துக்குத் தகுந்தாற்போல சந்தர்ப்பவாதிகளாக இருக்கமுடியாது.

ஃ ஃ ஃ

குற்றத்தை ஒப்புக்கொண்டு திருந்திவிட்டார்களானல் நேற்றைய எதிரிகளும் இன்றைய நண்பர்களாக முடியும்.

ஃ ஃ ஃ

நெற்றி வியர்வை சிந்தினுல் வாழ்வுக்கு வேண்டிய உணவு தருவதாக, அன்னை பூமி கோருகிருர்.

உங்கள் வாடிக்கை கடைகளில்

மில்க்வைற் நீலசோப்

என்று கேட்டு வாங்குங்கள்

அதிகம் உடுப்புகளை
சலவை செய்யலாம்.

மேலுறைகளைச் சேகரியுங்கள்

# கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் அபேட்சகர்கள்

(நமது நிருபர்)

கொழும்பு மாநகரசபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக விரைவில் நடைபெறவிருக்கும் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பிலும் சில வட்டாரங்களில் அபேட்சகர்கள் போட்டியிட விருப்பதாகத் தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. சில அபேட்சகர்கள் இப்பொழுதே ஆதரவு தேடும் முயற்சியில் இறங்கியுள்ளதாக அந்த வட்டாரம் தெரிவித்தது.

வெள்ளவத்தை ஜிந்துப்பிட்டி, கொட்டாஞ்சேனை முதலிய தமிழ் வாக்காளர் பெரும்பான்மையினராக வாழும் வட்டாரங்களில்தான் தமிழரசுக் கட்சியின் சார்பில் அபேட்சகர்கள் போட்டியிட விருப்பதாகத் தெரியவருகிறது.

ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 2-ந் திகதி [18-10-69]

## பூமிபாரம்

பூமிபாரம் அதிகரிக்கிறதென்றும் அதைத் தாங்க முடியவில்லையென்றும் பூமாதேவி மகாவிஷ்ணுவிடம் முறையிட்டாராம். தாம் திரு அவதாரமெடுத்து அதைக் குறைப்பதாகச் சொல்லி இராமாயண, மகாபாரத யுத்தங்கள்மூலம் பூமியின் பளுவைக் குறைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

இப்போது ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலே ஜனத்தொகை மிகவும் அதிகரித்துக்கொண்டு போவதாகவும், இப்படியே நிலைமை நீடித்தால் உலகத்திற்குப் பெரும் ஆபத்து ஏற்படுமென்றும் வெள்ளைக்கார நிபுணர்கள் பயமுறுத்துகிருர்கள்.

இவர்களது முறைப்பாட்டிற்கும் பூமாதேவி கூறியதற்கும் ஒரு பெரிய வித்தியாசம். துஷ்டர்கள் உலகில் அதிகரித்ததால்தான் பளுவைத் தாங்க முடியவில்லை என்ருராம் பூமிதேவி. ஆனுல் இந்த வெள்ளைக்கார நிபுணர்களோ, ஆசிய, ஆபிரிக்கமக்கள் ஜனத்தொகை பெருகி வருவதைப்பற்றியே கவலைப்படுகின்ருர்கள்.

குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை போன்ற விஷயங்களில் கருத்துவேற்றுமை அதிகமுண்டு. சில குடும்பங்களிலே ஏழு அல்லது எட்டாவது குழந்தை ஒரு பெரும் மேதையாக உலகுக்கே பெருநன்மை செய்யக்கூடும். ஒரு குழந்தை பிறக்கவேண்டுமென்று ஏங்கியும்கூட சில செல்வந்தருக்குப் பிறக்காமலுள்ளது.

உலகில் பெருகிவரும் ஜனத்தொகைக்குத் தக்கவாறு, உணவு அதிகரிக்கவில்லை என்பதே மேற்கத்திய நிபுணர்களின் கவலை. விஞ்ஞானிகள் இதற்கு வழி வகுக்க முடியாதா? மக்களைப் படைத்த இறைவன், அவர்களுக்கு வேண்டிய உணவுகளையும் படைப்பான்தானே! ஒருசிலர் சுரண்டாமல், எல்லாரும் சமமாகப் பகிர்வதாயின், உணவு முதலிய பொருளாதாரப் பிரச்னைகள் தீருவதுடன், பூமாதேவியின் பாரமும் குறையும்.

பூமியின் பெரும் பகுதிகளை வெள்ளைக்காரர்களே ஆக்கிரமித்துக்கொண்டு, மற்றவர்கள் அங்கு குடியேறக் கூடாதென்று போடும் தடைகளை நீக்கினுல் ஆசிய ஜனத்தொகைப் பிரச்னை வெகுவாகக் குறையக்கூடும். செயற்கை முறையிலல்லாது இயற்கை முறையிலே அவரவர்கள் தங்கள் குடும்பக் கட்டுப்பாட்டை வசதிபோல் செய்துகொள்ள விட்டுவிட வேண்டுமென்பதே மகாத்மா காந்தியின் உறுதியான கருத்தாகும்.

## ஒரு பகிரங்கக் கடிதம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுபோகும் கண்ருவியைப் பார்க்கிருேம். அம்பாந்தோட்டையில் மரவரி சட்டம் இல்லையென்ருலும் கள்ளுத் தவறணை அல்லது சாராயவடி இருக்கப்படாதென்பதே எனது வேண்டுகோள்.

இவ்விடத்தில் தங்களுக்கு ஒரு சின்ன இரகசியம் சொல்லி வைக்கப்போகிறேன். எங்கள் ஊர்களில் பனங்கட்டி தயாரிக்கிறவர்கள் என்ன செய்வதென்ருல், சுண்ணும்பு பூசிய முட்டிகளில் சேரும் கருப்பநீரை எடுத்து காய்ச்சி, சுண்ணும்பு அடைந்ததும் வேறு பாத்திரத்தில் ஊற்றிப் பதப்படுத்துவதே. இப்படிச் செய்யும் பனங்கட்டி சற்று கறுப்பாகவும் சிறிது கசப்பாகவும் இருக்கும். கருப்ப நீரிலுள்ள சுண்ணும்பு முழுவதும் போகாமல் இருப்பதே இதற்குக் காரணம. சரியான முறை வேறு.

முதலில் உலையில் காய வைத்து சுண்ணும்பை நீக்கி வடிகட்டும்போதே, வடிகட்டிய கருப்பநீரை பிறகு காய்ச்சும்போது 'சுபர் பொஸ்பேட்' என்ற உப்பு கொஞ்சம் போடவேண்டும். சில நிமிடங்களில் சுண்ணும்பு அவ்வளவும் அடைந்துவிடும். இந்த கருப்பநீரை மீண்டும் ஒரு தடவை மெல்லிய நெருப்பில் சூடு [illegible]த்து பதமாக்கினுல் வெல்லச் சர்க்கரை போல வெளுப்பாக இருக்கும், கசப்பும் இருக்காது.

இந்தியாவில் இப்படித்தான் தயாரிக்கிருர்கள்.

வணக்கம்

இப்படிக்கு,
சுப்பு [illegible]

# மனித வாழ்க்கை என்பது அடுக்கிய கொலுபோன்றது

## குன்றக்குடி அடிகளின் நவராத்திரிசெய்தி

நவராத்திரி விழாவை முன்னிட்டு தவத்திரு குன்றக்குடி அடிகள் 'ஈழநாடு'க்கு அனுப்பி வைத்த செய்தி:

கலை வாழ்க்கையில் பிறப்பது. வாழ்க்கையை வளர்ப்பது. வாழ்க்கையை உயர்த்துவது. ஏன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே ஒரு கலை. அளவெட்டி தெட்சணமூர்த்தி மிக நன்ருக தேர்ந்த முறையில் தவில் வாசிப்பதால் கேட்கிறவர்கள் இசைக்கலை இன்பத்தை ஆற துய்த்து மகிழ்வார்கள். இசைக்கலைஞர் சண்முகரெத்தினம் பண் ஒன்றிப் பாடும் போது பல ஆயிரக்கணக்கான மக்கள் தலையசைத்து ஆகா என்று மகிழ்கின்ருர்கள். குழந்தை ஆனந்தவல்லி அழகுற நடனத்தை வடித்துத்தரும் பொழுது காண்பவர்கள் கண்காணு இன்பத்தில் மிதந்து மகிழ்கின்ருர்கள். நாடக அரங்கின் வேள் சொர்ணலிங்கம் தாம் பாத்திரமாக மாறி அனைத்துச் சுவையும் ததும்ப நடிக்கும் பொழுது நாடக அரங்கில் கூடியுள்ள கூட்டவர் மகிழ்கின்றனர்

கலை இன்பத்தின் வாயில், உணர்வின் மையம் என்று தெரிந்துதானே எமதுஇறைவன் அனைத்துயிரையும் ஆட்கொள்ள நடனம் ஆடினுன், ஆடிக் கொண்டிருக்கிருன். இவ்வளவு சிறந்த கலை, காலப் போக்கில் வாழ்க்கையில் கலக்காமல், வாழ்க்கையை சுவைப்படுத்திப் பயன்படாமல், அது ஒரு பொழுது போக்குச்சாதனமாக மாறியது வருந்தத் தக்கதேயாகும். மீண்டும் நினைவுபடுத்துகின்ருேம். வாழ்வதே ஒரு கலை. ஒருவன் நெறியோடும், முறையோடும் வாழ்வானுனுல், அவனுடைய வாழ்க்கையே பலருக்கு மகிழ்ச்சியைத்தரும். ஒருவன் வாழ்க்கையில் இருந்து மற்றவர்களுக்கு அழுக்காறு தோன்றுமானுல் அந்த வாழ்க்கை, அழகல் வாழ்க்கை. மாருக ஆனந்தம் பிறக்குமானுல் அந்த வாழ்க்கை சீலம் நிறைந்த வாழ்க்கையாக வையத்தில் வாழ்வாங்கு வாழும் கலை வையத்தில் மலர்வதாக நவராத்திரி. கலைவிழாக்காலத்தில் இந்த உணர்வு தோன்றிச் சிறப்பதாக!

நவராத்திரி கலைவிழாவின் போது வீடுகளில் பொம்மைகளை அடுக்கியகொலுவைப்பதுண்டு. அந்தக் கொலுவை விழாமுடிவில் கலைப்பார்கள் கலைக்கும்பொழுது வெற்றிவிழா எடுப்பார்கள். என்ன பொருள்? வாழ்க்கை என்பது அடுக்கிய கொலுபோன்றது. அது கலையும் இயலிசை வாழ்க்கைக் கொலு. கலையும்பொழுது வாழ்க்கையில் வெற்றியுடையதாக அமையவேண்டும். இங்கு வெற்றியென்பது மனிதர்களை அடக்கியாண்ட வெற்றியல்ல அனைத்துலகையும் அன்பினுல் ஆட்கொண்டு, கொண்டும், கொடுத்தும் குடி குடி ஈசற்கு ஆட்செய்யும் வெற்றியாகும். அந்த வெற்றித் திருவினையை நாமனைவரும்பெற முயற்சிப்போமாக

### விற்பனைக்கு

150 பரப்பு நெற்காணி முகமாலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
க. ஞானச்சந்திரன் J. P.
முடிக்குரிய வழக்கறிஞர்,
சாவகச்சேரி. 1485

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோடர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நல்லூரில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தீண்டாமை உள்ள ஊர்களிலே சாப்பிட மறுத்தேன், ஹரிஜனர்களை என் தலைமையில் கோவில்களுக்கு அழைத்துச் சென்றேன். இதனுல் அளவெட்டி என்ற ஊரில் எனக்குக் கறுப்புக்கொடி காட்டினுர்கள். உடனே நான் அங்கேயே உட்கார்ந்து மறியல் செய்தேன். மீசாலை என்ற இடத்தில் ஹரிஜனர்களுடன் விருந்து சாப்பிட்டேன். அனலைதீவு என்ற ஊரில் ஹரிஜனர்களைக் கோவிலுக்குக் கூட்டிச் சென்றேன். இதைப் பார்த்ததும் கோவில் நிர்வாகிகள் கோவிலைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள். உடனே நான் அங்கேயே உட்கார்ந்து மறியல் செய்தேன். இதன்பின்னர் ஹரிஜனர்களுடன் கோவிலுக்குள் சென்று வழிபட்டேன்.

தீண்டாமை ஒழிய காந்தி பிறந்த நாளான அக்டோபர் 1ந் திகதி உண்ணுவிரதம் இருந்தேன். அந்தப் பகுதிகளில் சாதிவெறி தலைவிரித்து ஆடுகிறது. தீண்டாமையைஒரு சிலபணக்காரர்கள் ஆதரிக்கிருர்கள். அவர்கள் ரவுடிகளை வைத்து ஹரிஜனர்களை மிரட்டுகிருர்கள். அவர்கள் என்னையும் கொலைசெய்ய முயற்சித்தார்கள். இதை அறிந்த நான் எச்சரிக்கையாகவே இருந்தேன். 'எந்த ஆபத்தும் தங்களுக்கு வரவிடமாட்டோம்' என்று ரத்தக் கையெழுத்திட்டு பலர் அங்கு கடிதம் எழுதினுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org